

# ஞானச்சுடர்

புரட்டாதி

2012



ஓம்

முருகா

வெளியீடு

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறள்வழி



நன்றே தரினும் நடுவிகந்தா மாக்கத்தை
அன்றே யொழிய விடல்.

பொருள் : நன்மையே தருவதாயினும் நடுவுநிலை தவறுதலால் உண்டாகின்ற செல்வத்தை விரும்புதலாகாது.

(113)

தக்கார் தகவில ரென்ப தவரவர்
எச்சத்தாற் காணப் படும்.

பொருள் : நடுவுநிலைமையிலுள்ளவர் அல்லது நடுவுநிலைமையில் லாதவர் என்பதை அவரவர்களுக்கு நன்மக்கள் இருப்ப தாலும் இல்லாததாலும் அறிந்து கொள்ளலாம்.

(114)

# நற்சிந்தனை

## மறப்பேனோ குருநாதன் தன்னை
## தியானமாலை
## திருவாசல் கண்டு சிறந்திருந் தேனே



மூல நிலத்தின் மூட்டிய வங்கியால்
மேலை நிலத்தில் வெண்ணை யுருகிற்று
மூல மலத்தின் முதன்மை கெட்டது
சீல மனைத்துந் தெரிந்துகொண் டேனே 03


பொன்போல் மேனியீர் புரிபுன் சடையீர்
என்போல் எவரும் எளியர் இலரே
துன்பே கவலை தொடரா வண்ணம்
அன்பே வந்திங் கெனையாள் வாயே

## எல்லாஞ் சிவன்செயல்

சூரியன் வருவது யாராலே தூமதி தவழ்வது யாராலே
விண்மீன் மிளிர்வது யாராலே வெய்யி லெறிப்பது யாராலே
கண்ணிணை காண்பது யாராலே காற்று மடிப்பது யாராலே
தண்ணீர் பெருகுதல் யாராலே தக்கோர் புகழ்வது யாராலே
பூமி சுழல்வது யாராலே பூக்கள் மலர்வது யாராலே
கால்க ணடப்பது யாராலே கைக ளெடுப்பது யாராலே
எண்ணிப் பார்நீ யறிவாயே எல்லாஞ் சிவன்செயல் குறியாயே
சொல்லு சுதந்திரம் பெறுவாயே சுவாமி வாக்கிது தெரிவாயே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச்சுடர்




வெளியீடு:

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஞானச்சுடர்

**வெளியீடு- 2** **சுடர்- 177**

## பொருளடக்கம்

**2012** **புரட்டாதி**





| | | |
|---|---|---|
| கந்த விரதங்களும்... | சு. சிவராசா | 01 - 03 |
| கண்கண்ட தெய்வம் | திருமதி பா. சிவனேஸ்வரி | 04- 06 |
| திருவண்டப்பகுதி | சு. அருளம்பலவனார் | 07 -08 |
| இளையான்குடி... | நா. நல்லதம்பி | 09- 11 |
| கந்தரநுபூதி | வாரியார் சுவாமிகள் | 12- 14 |
| திருமுறைகளில் சைவ... | சிவ. சண்முகவடிவேல் | 15- 16 |
| மரணம் அப்புறம் | ஜக்கி வாசுதேவ் | 17- 18 |
| உண்மையே அழகு | கு. சோமசுந்தரம் | 19 -20 |
| ஸ்ரீ ரமண நினைவலைகள் | - | 21 -23 |
| அதர்மம் அழிந்து... | செல்வி S. ஜடா | 24 -26 |
| தனிப்பெருந் தமிழ்த்.... | கனக. நாகேஸ்வரன் | 27 -28 |
| நவராத்திரி... | காரை எம்.பி. அருளானந்தன் | 29 -30 |
| பெண் எனும் மகா... | மு. சிவலிங்கம் | 31 -32 |
| நல்ல கதிகேள் மனமே | ஆ. இராசரெத்தினம் | 33 -35 |
| சைவ சமய வினா விடை | ஆறுமுகநாவலர் | 36 -37 |
| சிறுவர் கதைகள் | - | 38 -39 |
| நித்திய அன்னப்பணி | - | -40 |
| புதிய பொலிவுடன்... | வல்வையூர் அப்பாண்ணா | 41 -48 |



அன்பளிப்பு: மலர் ஒன்று 30/= ரூபா

**சந்நிதியான் ஆச்சிரம**

**சைவ கலை பண்பாட்டுப் பேரவை**

தொலைபேசி இலக்கம்: 021 321 9599, 021 226 3406

அச்சகம்: சந்நிதியான் ஆச்சிரமம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச்சுடர்
# ஆவணிமாத வெளியீடு

**மதிப்பீட்டுரை:-**

ஆவணிமாத ஞானச்சுடர் மலருக்கான மதிப்பீட்டுரையை திரு க. நடேசன் (தெணியான்) இளை. பிரதி அதிபர் அவர்கள் நிகழ்த்தினார்கள். அவர்கள் தனது ஆரம்ப உரையில் ஆச்சிரமமானது பல்வேறு சேவைகள் பணிகளைச் செய்து வருகின்றது. அந்த வகையில் ஞானச்சுடர் மலர் வெளியீடும் ஒன்றாகும்.

ஞானச்சுடர் மலரானது ஒவ்வொரு மாதத்தின் இறுதி வெள்ளிக் கிழமைகளிலும் வெளியிடப்பட்டு வருகின்றது. விலையோ குறைவு, தரம் மிக்க நூலாக ஆச்சிரமத்தின் செயற்பாட்டிற்கு ஊன்றுகோலாக வெளிவந்துகொண்டிருக்கிறது. அத்துடன் அழகான அட்டைப் படத்துடனும், கட்டுரைகள், கவிதைகள், பாடல்கள், படங்கள், பொன்மொழிகள் எனப் பல்வேறு அம்சங்களைத் தன்னிடத்தே கொண்டுள்ளது.

தொடர்ந்து கூறுகையில், ஒரு மனிதனை முழு மனிதனாக்குவதற்குத் தேவையான விடயங்கள் அனைத்தையும் ஆச்சிரமமானது கிரமம் தவறாது செய்து வருகின்றது. ஆவணி மலரானது 176ஆவதாக அமைந்தாலும் ஆரம்பத்தில் இருந்த தோற்றப் பாட்டைவிட தற்பொழுது பல்வேறு புதிய விடயங்களுடன் இப்பூமியில் திகழ்கின்றது என்பது யாவராலும் போற்றப்பட வேண்டிய விடயமாகும். இச்சுடரை பெரியோர் முதல் சிறியோர்வரை அனைவரும் படித்து இன்புறும் வகையில் தெளிவான எழுத்துக்களால் அமைக்கப்பெற்று வெளிவருகின்றது என்று சபையோருக்குக் கூறினார்.

"உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே" என்ற வாக்கிற்கிணங்க ஆச்சிரமமானது பசித்துவரும் அடியார்களின் பசிப்பிணியைப் போக்கி வருகின்றது. அதுமட்டுமல்லாது வாரத்தில் இரு நாட்கள் (புதன், ஞாயிறு) ஆகிய கிழமைகளில் மருத்துவ சேவையினை நடாத்தி அதன்மூலம் மக்களது நோய்ப்பிணியை நீக்கி வருகின்றது என்று சபையோருக்குக் கூறினார்.

தொடர்ந்து கூறுகையில் இனிவரும் காலங்களிலும் ஞானச்சுடர் மலரானது பல்வேறு ஆக்கங்களுடன் இம்மண்ணில் திகழ்ந்து ஆன்மீகத்தைப் புகட்டவேண்டும் என்று கூறித் தனது உரையை இனிதே நிறைவு செய்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடர் தரும் தகவல்

பூரண கும்பம், பிரதம விருந்தின வருகை, மாலை சூட்டுதல், நாடா வெட்டுதல், வரவேற்புரை, ஏற்புரை, நன்றியுரை என எவ்வித ஆர்ப்பாட்டமும் இன்றி அமைதியாக, அடக்கமாக ஒரு அன்னசாலையின் திறப்புவிழா நடந்தேறியுள்ளது.

மேமாதம் 13இல் புதிய அமைப்பினை அடிப்போடும் நிகழ்வுடன் ஆரம்பமாகிய சந்நிதியான் ஆச்சிரமத்தின் புதிய அமைப்பின் நிர்மாண வேலைகள் சரியாக மூன்று மாதங்களில் நிறைவு பெற்று ஆச்சிரமம் தனது வழமையான பணிகளை மேற்கொண்டு வருகிறது. பழைய கட்டிடங்கள் இடித்து அகற்றப்பட்டு, வேலைகள் துரிதகதியில் நடைபெற்று வந்தபோதும், வழமையான அன்னப்பணி, ஞானச்சுடர் வெளியீடுகள், விசேட விழாக்கள், திருமண வைபவங்கள் போன்ற எதுவுமே தடையின்றி நிறைவேறின. அனைத்துத் தரப்பினரதும் கடின உழைப்பின் பலனாக இன்று ஆச்சிரம வளாகம் ஒரு கூரையின் கீழ் நிமிர்ந்து நிற்கிறது.

அவனின்றி ஓர் அணுவும் அசையாது என்பதற்கிணங்க, சந்நிதி வேலவனின் ஒப்பற்ற திருவருட் கடாட்சத்தினால் கண்முன்னே ஆச்சிரமத்திற்கு ஒரு புதிய தோற்றப்பொலிவினை ஏற்படுத்தித் தந்த வேற்பெருமானைக் கரம் கூப்பித் தொழுது பணிகிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்நிதி – திருப்புகழ்

# ஆற்றங்கரைப் பெருமானே



பொதிய மலையிருந்த குறுமுனி - விளங்கிப்
புரிய இனியதமிழ் புகன்றோனே
பொல்லா அசுரன்தனை பொருது தடிந்தளித்த
புனித கடிவடிவேற் புண்ணியனே
நதியுட னரவு மதிகொன்றை சூடும்
நல்ல சிவபெருமான் தந்தவனே
நாடும் பிரணவத்தின் பொருளறியா வயனை
நலியும்படி குட்டும் நற் குகனே
கதியென்று ஆற்றுப் படைபாட கீரன்
கலங்காமல் கணத்தை யழித்தவனே
கச்சியப்பர் செய்த கந்தபுராணத்தினை
கனிந்து கேட்டருளும் கடம்போனே
அதிபெரிய செல்வச் சந்நிதி அன்னப்பணி
ஆற்றும் சபையாரைப் போற்றிசெயும்
ஆறுமுகங் கொண்டு அன்பர் தமைக் காக்கும்
ஐய! ஆற்றங்கரைப் பெருமானே.

முதுபெரும்புலவர்
வை.க.சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புரட்டாதி மாத சிறப்புப்பிரதி பெறுவோர் விபரம்

**Dr. M. யோகேஸ்வரதேவர்**

(நெல்லியடி, கரவெட்டி)

**Dr. K.இராதாகிருஷ்ணன்**

(மெடிக்கல் சென்ரர், நெல்லியடி)

**Dr. G. உதயசீலன்**

(சுதுமலை, மானிப்பாய்)

**தலைவர்**

(தெல்லிப்பளை. ப.நோ.கூ.ச.தலைமையகம்)

**க. சொர்ணவடிவேல்**

(கதிர்காமசிங்கம் அன்சன்ஸ், அளவெட்டி)

**வே. தர்மராசா**

(பொதுமுகாமையாளர், சுண்ணாகம்)

**செ. புவனேந்திரராசா**

(மதுஷன் பல்பொருள் வாணிபம், உடுப்பிட்டி)

**செல்லையா சிவசம்பு**

(இளை.அதிபர், வளலாய்)

**த. சிவகுருநாதன்**

(துவாரகா வெதுப்பகம், நவிண்டில்)

**காரை. M.P அருளானந்தன்**

(ஆசிரியர், ஸ்ரான்லி கல்லூரி, யாழ்ப்பாணம்)

**இ. சுப்பிரமணியம்**

(இளை.கிராமசேவையாளர், ஏழாலை)

**ப. நடராசாக்குருக்கள்**

(ஆவரங்கால், புத்தூர்)

**சீ. முருகவேள்**

(கிராமசேவையாளர், இடைக்காடு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**க. ஸ்ரீஸ்கந்தராசா**

(இளை. அதிபர், அச்சுவேலி)

**க. குமாரதாசன்**

(பொது சுகாதார பரிசோதகர், தும்பளை)

**க. இரத்தினம்**

(இளை. கிராமசேவையாளர், கரணவாய்)

**சோ. தனராசா**

(வாணிமஹால், வட்டுக்கோட்டை)

**நாகேந்திரம் கண்ணம்மா**

(மானிப்பாய்)

**வ. கந்தசாமி**

(பிரியங்கா பான்சி, உடுப்பிட்டி)

**சி. சிவச்செல்வம்**

(இளை. அதிபர், சந்நிதிவீதி, அச்சுவேலி)

**கு. மதனமோகன்**

(சிறுப்பிட்டி தெற்கு, நீர்வேலி)

**சி. பகீரதன்**

(பிள்ளையார் கோயிலடி, கெருடாவில்)

**க. கந்தசாமி**

(வடலியடைப்பு, பண்டத்தரிப்பு)

**ஆ. திருநாவுக்கரசு**

(இணுவில் மேற்கு)

**நா. கனகலிங்கம்**

(தபால் வீதி, கொக்குவில்)

**ரஞ்சனதாஸ் ஜஷாந்**

(யாழ்ப்பாணம்)

**ச. வக்சலாதேவி**

(பூமகள் வீதி,அரியாலை)

**A. சிவதாசன்**

(மதவடிலேன், சுதுமலை)

**சு.சண்முகசுந்தரம்**

(முருகமூர்த்தி வீதி, நெல்லியடி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**க. தெய்வானைப்பிள்ளை**

(V.M. றோட், பருத்தித்துறை)

**ம. நிர்மலதாசன்**

(தில்லையர்கடையடி, கம்பர்மலை)

**திருமதி. ப. தேவமனோகரன்**

(கந்தபுஷ்கரணி, நவாலி)

**அ. ஆறுமுகம்**

(உடுப்பிட்டி, வல்வெட்டித்துறை)

**கயிலைநாதன் மங்களகாந்தி**

(வேழலகம், ஆனைக்கோட்டை)

**க. கணேசலிங்கம்**

(சரவணபவனம், இணுவில் மேற்கு)

**இ. சர்வேஸ்வரன்**

(கலைவாணி வீதி, கோண்டாவில்)

**த. விசயகுமாரன்**

(பழம்றோட், கந்தர்மடம்)

**செல்வி.அ. பகீரதி**

(செட்டித்தெரு, நல்லூர்)

**கனகேஷ்வரன் பிரகாஷ்**

(கைதடி கிழக்கு)

**சி. செல்வரத்தினம்**

(புன்னாலைக்கட்டுவன்)

**சு. சத்தியேந்திரன்**

(ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி)

**சி. சகுந்தலாதேவி**

(வங்களாலேன், மல்லாகம்)

**ஆ. விபுலானந்தராசா**

(இணுவில் மேற்கு, இணுவில்)

**ம. நாகேஸ்வரி**

(நவிண்டில்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**த. லதாசந்திரிக்கா**

(மகாத்மா வீதி, நெல்லியடி)

**க. நற்குணராஜா**

(பிள்ளையார் கோயிலடி, அச்சுவேலி)

**செ. இராஜேஸ்வரி**

(15ஆம் கட்டை, புறாப்பொறுக்கி)

**சு. நவரட்ணம்**

(முத்தமிழ் வீதி, கொட்டடி)

**த. பூபாலன்**

(கண்ணாமலை வீதி, உடுப்பிட்டி)

**கா.ஆ. சச்சிதானந்தம்**

(சிறுப்பிட்டி கிழக்கு, நீர்வேலி)

**மா. கிருஸ்ணம்மா**

(கைதடி, நுணாவில்)

**செ. கேஷிகன்**

(அரசடி வீதி, திருநெல்வேலி)

**நா. கமலநாதன்**

(வட்டுவினி அம்மன் கோயிலடி, இணுவில்)

**செ. சோதிப்பெருமாள்**

(சரஸ்வதி மஹால், இணுவில்)

**கி. சிவப்பிரகாசம்**

(புலோலி தெற்கு, புலோலி)

**R. ஜெயராஜ்**

**(சிவராஜ் றேடிங்கோ, பருத்தித்துறை)**

**Dr வை. தியாகராஜா**

(முத்திரைச்சந்தி, யாழ்ப்பாணம்)

**சி. மகாலிங்கம்**

(நீர்வேலி மேற்கு, நீர்வேலி)

**சி. வேலாயுதம்**

(இளை. அதிபர், வதிரி, கரவெட்டி)

**K. அருண்பிரசாத்**

(வெள்ளவத்தை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்த விரதங்களும் கதையும்

திரு சு. சிவராசா அவர்கள்



சைவ சமயத்தவர் வருடந்தோறும் அனுட்டிப்பதற்கு பலவகையான விரதங்கள் பெரியவர்களால் வகுக்கப்பட்டுள்ளன. விரதம் அனுட்டிப்பவர் தனது இஷ்ட சித்திக்கு பொருத்தமான விரதத்தை அனுட்டித்துப் பயனடைவர். சிவபெருமானை முழுமுதற் கடவுளாக சைவசமயத்தவர் வழிபடுவர். சிவபெருமான் சூரனாதியோருக்கு வரத்தையும் பலத்தையும் கொடுத்தார். சூரன் தேவர்களை சிறை வைத்தான். முனிவர்களுக்கு ஊறு செய்தான். இதனால் அவனை நிக்கிரகம் செய்ய வேண்டியதாயிற்று.

கொடுத்தவனே எடுத்துக்கொள்வது சரியானதன்று என்பதால் சிவபெருமான் தமது சக்தியின் வடிவமாக முருகனைத் தந்தார். இதனால் சிவனே முருகன். முருகனே சிவன் என்று பெரியோர் கூறுவர். இந்த வகையில் சூரனாதியோரை அழித்து தேவர் சிறைமீட்ட கந்தப் பெருமானுக்கு உவப்பான விரதங்கள் சில இருக்கின்றன. கந்த விரதங்களில் வெள்ளிக்கிழமை விரதம், திருக்கார்த்திகை விரதம், கந்தசஷ்டி விரதம் என்பன குறிப்பிடத்தக்கவை.

கிழமை நாட்களுள் வெள்ளிக்கிழமை முருகப்பெருமானுக்கு பிரீதியான தினமாகும். பகீரதன் என்னும் மன்னன் கோரன் எனும் அசுரனிடம் தனது நாட்டை இழந்தான். தன் மனைவியோடு சுக்கிராச்சாரியாரைச் சென்று வழிபட்டான். நீ மூன்று ஆண்டுகள் வெள்ளிக்கிழமை விரதத்தை முறைப்படி நோற்பாயானால் முருகப்பெருமானால் உனது துன்பம் நீங்கும் என்று அவர் கூறினார். அரசனும் அவ்வாறே விரதம் இருந்தான். வேற்படைக்கலம் அவுணனைக் கொன்றது. பகீரதன் தனது நாட்டைப் பெற்று மகிழ்ச்சியுடன் வாழ்ந்தான்.

மாத விரதங்களில் கார்த்திகை விரதம் முருகனுக்கு சிறப்பானதாகும். நாரத முனிவர் சப்தரிஷிகளுள் முதன்மைப் பதவியை பெற விரும்பினார். விநாயகப் பெருமானிடம் சென்று உபாயம் கேட்டார். ஐப்பசி மாதத்தில் வரும் கார்த்திகை விரதத்தைக் கடைக்கொள்ள வேண்டும். பரணியன்று ஒருநேரம் புசித்தும், கார்த்திகையன்று உபவாசம் இருந்தும், ரோகினியன்று பாறணை செய்தும் இவ்விரதத்தை மேற்கொள்ள வேண்டும். நாரதர் முறையாகக் கார்த்திகை விரதத்தை மேற்கொண்டு முதன்மைப் பதவியை அடைந்தார். ஒரு அந்தணன் இவ்விரதத்தை அனுட்டித்து சூரியவம்சத்தில் மனு வேந்தனாகப் பிறந்தான். வேறு இரு அந்தணர்கள் அனுட்டித்து அந்திமான் சந்திமான் என்ற அரசர்களாகப் பிறந்து மேன்மையடைந்தனர்.

கந்த விரதங்களுள் தலைசிறந்த விரதமாக கந்தசஷ்டி விரதமே அடியவர்களால் போற்றப்படுகிறது. ஐப்பசி மாதத்து தீபாவளி அமாவாசையை அடுத்து வரும் வளர்பிறையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதமை தொடக்கம் சஷ்டி வரையுள்ள ஆறு நாட்களும் முருகப்பெருமானை விஷேடமாக வழிபட்டு நோற்கும் விரதம் கந்தசஷ்டி விரதமாகும். செல்வங்கள், சுகபோகங்கள், நற்புத்திரப் பேறு என்பவற்றை முன்னிட்டு முருகனை குல தெய்வமாகவோ, இஷ்ட தெய்வமாகவோ வழிபடுவோரும் பிறரும் இவ்விரதத்தை அனுட்டிப்பர். முருக பக்தர்கள் இவ்விரதத்தை ஒரு கடுந்தவமாகக் கருதி ஆறு தினங்களும் உபவாசம் இருத்தல் வழக்கம். இயலாதவர்கள் முதல் ஐந்து நாட்கள் ஒரு வேளை உண்ணுதலும் ஆறாம்நாள் உபவாசம் இருத்தலும் நடைமுறையாக உள்ளது. ஏழாம் நாள் அதிகாலை நீராடி அனுட்டானங்களை நிறைவேற்றி பாரணை பூசை முடிந்ததும் மாகேசுவர பூசை செய்து விரதத்தை பூர்த்தி செய்வர்.

"ஆரண முனிவர் வானோர் அங்கதன் மற்றை வைகல்
சீரணி முருகவேட்குச் சிறப்பொடு பூசை ஆற்றிப்
பாரணம் விதியிற் செய்தார் பயிற்றும் இவ்விரதம் தன்னால்
தாரணி அவுணர் கொண்ட தம்பதத் தலைமை பெற்றார்"

முன்னொரு காலத்தில் முசுகுந்தச் சக்கரவர்த்தி கருவூரில் இருந்து அரசாண்டு வந்தார். அவர் சகல உலகங்களையும் ஒரு குடையின்கீழ் அரசாள விரும்பினார். வசிட்ட முனிவரிடம் சென்று தமது விருப்பத்தைத் தெரிவித்தார். வசிட்ட முனிவர் கந்தசஷ்டி விரதத்தின் பெருமைகளை உபதேசித்தார். முசுகுந்தன் நாடு திரும்பி முறைப்படி சஷ்டி விரதத்தை நோற்று வந்தான். முருகப்பெருமான் அரசன் முன் தோன்றினார். தான் உலகம் முழுவதையும் ஆள்வதற்கு வீரவாகுதேவர் முதலான இலட்சத்து ஒன்பதின்மரையும் தனது படைத் தலைவர்களாகத் தந்தருள வேண்டும் என வேண்டினார்.

முருகப்பெருமான் அவ்வாறே தருவதாகக் கூறினார். வீரவாகுதேவர் முதலானோர் மறுத்தனர். தனது வார்த்தையை மறுத்த தம்பிமாரை முருகப்பெருமான் சினந்தார். நீங்கள் மனிதராய்ப் பிறந்து முசுகுந்தச் சக்கரவர்த்தியின் படைவீரராய் இருங்கள். பின்னர் மீண்டும் எம்மிடம் வந்து சேருவீர்கள். இவ்வாறு கூறி முருகப் பெருமான் மறைந்தார். இலட்சத்தொன்பது வீரர்களுக்கும் சிறந்த மாளிகைகள் அமைத்து அதில் அவர்களை வசிக்கச் செய்தார்.

"புன்னெறி அதினிற் செல்லும் போக்கினை நீக்கி மேலாம்
நன்னெறி ஒழுகச் செய்து நவையறு காட்சி நல்கி
என்னையும் அடியனாக்கி இருவினைநீக்கி ஆண்ட
பன்னிரு தடந்தோள் வள்ளல் பாதபங்கயங்கள் போற்றி"

வீரபாகுதேவர் புட்பகந்தி என்னும் அரம்பையைத் திருமணம் செய்தார். மற்ற வீரர்களும் தேவமகளிர்களை திருமணம் செய்தார்கள். வீரவாகுதேவர் சித்திரவல்லி எனும் பெண்ணையும், அனகன், சனகன் எனும் புத்திரர்களையும் பெற்றார். தனது மகளான சித்திரவல்லியை முசுகுந்தச் சக்கரவர்த்திக்கு திருமணம் செய்து கொடுத்தார். சித்திரவல்லி கருவுற்றாள். தனது கர்ப்பகால வயாவிற்கு பலங்காய் வேண்டுமென அவள் கேட்டாள். வீரவாகுதேவர் மலைநாடு சென்று அதனைக் கொண்டுவந்து கொடுத்தார். பின்னர் மற்றைய நாடுகளுக்கும் சென்று திறைபெற்று நாடு திரும்பினார். சித்திரவல்லி அங்கிவன்மன் எனும் மகனைப் பெற்றாள்.

முசுகுந்தச் சக்கரவர்த்தி இந்திரனோடு நட்புக்கொண்டு இருந்தார். வலாசுரன் எனும் அசுரன் இந்திரனை எதிர்த்து யுத்தம் செய்தான். அசுரனோடு யுத்தம் செய்ய ஆற்றாதவனாய் இந்திரன் முசுகுந்தச் சக்கரவர்த்தியின் உதவியைக் கேட்டான். அவர் படையோடு சென்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலாசுரனின் வீரர்களை அழித்தார். இந்திரன் அசுரனைக் கொன்று போரில் வெற்றியடைந்தான். இதனால் இந்திரன் வலாரி என்னும் பெயரையும் பெற்றான்.

"ஊரிலன் குணங்குறியிலன் செயலினானு முரைக்கும்
பேரிலானொரு முன்னிலான் பின்னிலான் பிறிதோர்
சாரிலான் வரல் போக்கிலான் மேலினாள் றனக்கு
நேரிலானுயிர்க் கடவுளா யென்னுளே நின்றான்"

தனக்கு உதவி செய்த முசுகுந்தனுக்கு இந்திரன் பல சிறப்புக்களைச் செய்தான். இன்னும் ஏதாவது வேண்டுமானால் கூறும்படி இந்திரன் கேட்டான். இந்திரனிடம் ஒப்பற்ற சோமஸ்கந்த மூர்த்தியின் திருவுருவம் இருந்தது. அதைத் தரும்படி முசுகுந்தன் கேட்டார். இந்திரன் அதைப் பிரிய மனமின்றி அதன் கதையைக் கூறினான்.

விஷ்ணு மூர்த்தி புத்திர பாக்கியம் வேண்டி சோமஸ்கந்தரை ஸ்தாபிதம் செய்து ஆயிரம் ஆண்டுகள் தவம் செய்தார். சிவபெருமான் உமாதேவியாரோடு காட்சியளித்தார். சிவபெருமானை மட்டும் வணங்கி மன்மதனை மகனாக விஷ்ணுமூர்த்தி பெற்றார். தன்னை வணங்காத விஷ்ணுமூர்த்தியை அம்பிகை கோபித்தாள். வரம் தந்த சிவனின் நெற்றிக்கண்ணாலேயே உனது மகன் இறந்து போவான் என்று கூறி அம்பிகை மறைந்தாள். தனது மகனைக் காப்பாற்றுவதற்காக விஷ்ணுமூர்த்தி மீண்டும் தவம் செய்தார். அம்பிகை மனங் குளிர்ந்தாள். மன்மதன் இறந்த பின்னர் மீண்டும் உயிர்பெற்று அரூபியாக வாழ்வான் என்று சாப விமோசனம் கொடுத்தாள்.

இதேவேளை எனக்கும் (இந்திரனுக்கும்) வார்கலி எனும் அசுரனுக்கும் போர் மூண்டது. நான் விஷ்ணுமூர்த்தியின் உதவியை நாடினேன். தான் பூசித்த சோமஸ்கந்தரை என்னிடம் தந்துவிட்டு விஷ்ணுமூர்த்தி வார்கலியுடன் போரிட்டு அவனைக் கொன்றார். இதனால் விஷ்ணுமூர்த்திக்குச் சொந்தமான சோமஸ்கந்தரை அவரிடமே பெற்றுக்கொள் என்றார்.

விஷ்ணுமூர்த்தி முசுகுந்தனுக்குச் சோமஸ்கந்தரை கொடுக்கச் சம்மதித்தார். ஆனால் இந்திரன் ஒரு சூழ்ச்சி செய்தான். விஸ்வகர்மாவைக் கொண்டு அதேபோல வேறு சோமஸ்கந்தரை தருவித்தான். ஆனால் முசுகுந்தர் சூழ்ச்சியை அறிந்து கொண்டார். வேறு வழியின்றி இந்திரன் சுவாமியைக் கொடுக்கவேண்டியதாயிற்று. தனது தவறுக்காக ஆறுதிருவுருவங்களைத் தருவித்தான். முசுகுந்தன் அவற்றை எடுத்துக்கொண்டு மகிழ்ச்சியோடு நாடு திரும்பினார். நாகை, நள்ளாறு, கோளரி, வான்மியூர், வேதவனம், திருவாரூர் ஆகிய தலங்களில் சுவாமியை முசுகுந்தன் பிரதிஷ்டை செய்தார்.

சோமஸ்கந்தர் அமராவதியில் இருந்து நீங்கியதால் தேவலோகம் வறுமையடைந்தது. இந்திரன் முரசறையும் வள்ளுவனாய் மாறினான். மீண்டும் தனது வடிவத்தைப் பெறும் பொருட்டு அவன் திருவாரூருக்கு வந்தான். பல ஆண்டுகள் தவம் செய்தான். திருவிழாவின்போது முரசை அறைந்து மக்களை வாருங்கள் என்று அழைத்து மகிழ்ந்தான். அவனுடைய தவத்தினால் மீண்டும் தனது பழைய வடிவத்தைப் பெற்றான். அமராவதிக்குச் சென்று சிறப்பாகத் தனது அரசாட்சியை நடாத்தி வந்தான். முசுகுந்தச் சக்கரவர்த்தியும் தனது மகனான அங்கிவன்மனுக்குப் பட்டம்சூட்டிவிட்டு திருக்கைலாயம் சென்று கணங்களுக்குத் தலைவராயினார். வீரவாகு தேவர் முதலான வீரர்களும் தமது பிள்ளைகளை அங்கிவன்மனுக்குத் துணையாக நிறுத்திவிட்டு கந்தமாருத பருவத்திற்குச் சென்று முருகப்பெருமானுடைய திருவடியைச் சேர்ந்து மகிழ்ச்சியோடு இருந்தார்கள். அடியவர்கள் கந்த விரதத்தை அனுட்டித்து தங்கள் இஷ்ட சித்திகளை பெற்றுக்கொள்வார்கள் என்பது சாசுவதமான உண்மையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண் கண்ட தெய்வம்

திருமதி சிவனேஸ்வரி பாலகிருஷ்ணன் அவர்கள்

அம்பிகை வழிபாடு மிகவும் தொன்மையானது. இறைவன் செய்யும் எல்லாச் செயல்களும் சக்தியின்மூலம் நடைபெறுகிறது. ஜீவாத்மாவை இறைவனோடு இரண்டறக் கலக்கச் செய்து சிவ ஸாயுஜ்யத்தை தருபவளாக சக்தி விளங்குகிறாள். இறைவனைத் தாயாகக் கொண்டாடி பக்தி செய்வது வழக்கம். தாய்க்கும் பிள்ளைக்கும் உள்ள உறவு ஒப்பற்றது. பரமாத்மா நாம் எப்படி நினைத்தாலும் அப்படி வந்து அருள் செய்கிறது. எந்த ரூபமாகத் தியானித்தாலும், அப்படியே வந்து அனுக்கிரகம் செய்கின்ற கருணை பரமாத்மாவுக்கு உண்டு. பரப்பிரமமே தாயாகி அம்பிகையாக நமக்கு அனுக்கிரகம் செய்கிறார். தாய், பிள்ளை அன்பு ஆனந்தமயமானது.



தாயின் தன்மையுடைய தெய்வத்தை வழிபடுவது மிகவும் எளிதானதாகும். சர்வ லோகங்களையும் படைத்து காக்கும் தெய்வத்தை மகா சக்தியை தாயாக "அம்பாள்" என்கிறோம். தொழுத கைக ளோடும், அழுத கண்களோடும் தன்னிடத்தே வந்தவர்களுக்கு அல்லல்களையும், இன்னல் களையும் அழித்தொழிப்பவள் அன்னை அகிலாண்டகோடி பிரமாண்ட நாயகி. உலக மாதா கருணை பொழிவதற்காகவே காத்திருக் கிறாள். குழந்தையின் அழுகுரல் கேட்ட தாய் ஓடிவருவதுபோன்று, நாம் அன்பு உரிமையோடு அணுகினால் கூப்பிட்ட குரலுக்கு கருணைத் தாயாகிய அம்பிகை யும் ஓடிவந்து அருள்புரிவாள். இவ்வையகத்தின் தோற்றத்திற்கு மூலக்கனலாக இருப்பவர் தேவியாவர். அம்பிகை துர்க்கையாகவும், மகாலட்சுமியாகவும், சரஸ்வதியாகவும் ஆன்மாக்களுக்கு அருள்புரிகின்றாள். துர்க்கை வீரத்தையும், லட்சுமி செல்வத்தையும், சரஸ்வதி கல்வியையும் அருள்வார்கள்.

அழியாச் செல்வமாகிய கல்வியை அருளும் சரஸ்வதி நான்முகனின் நாயகி. கலைமகள், கலைவாணி, நாமகள், சாரதை, வாணி, ஞானாம்பிகை, அன்னவாகினி, பாரதி எனப் பல்வேறு நாமங்களால் போற்றப்படுகிறாள். கல்விக்கு, ஞானத்திற்கு, வித்தைக்கு அதிபதி. எல்லா உயிர்களின் நாவிலும் உறைபவள். வெள்ளைக் கலையுடுத்து, வெள்ளைப் பணிபூண்டு, வெள்ளைக் கமலத்தே வீற்றிருப்பவள். ஆயகலைகள் அறுபத்து நான்கின் நாயகி. சங்கீத வீணாபாணி. வேதப்பொருளுக்கு இறைவி. மூவுலகுந் தொழும் தேவி. இருள்சேர் இருவினையும் தீர்ப்பவள். எத்தனையோ புண்ணிய சீலர்கள் கலைவாணியைப் பாடிப் பணிந்துள்ளனர்.

நல்லெண்ணம் நற்செயல்களை உருவாக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குமரகுருபரர், கம்பர், காளமேகப் புலவர், பாரதியார், தேசிக விநாயகம்பிள்ளை இன்னும் பல அருளாளர்கள் சகலகலா வாணியைப் போற்றிப்பாடி அருள் பெற்றுள்ளார்கள்.

ஸ்ரீ குமரகுருபரர் டெல்லியை ஆண்ட பாதுஷா மன்னரோடு பேசுவதற்கு இந்துஸ்தானி மொழிபேசும் திறன் வேண்டி கலைமகளைத் துதித்து "சகலகலாவல்லிமாலை" தோத்திரப் பாடல்களைப் பாடி மன்னரோடு இந்திமொழியில் பேசும் சக்தியைப் பெற்றார். சகலகலா வல்லிமாலையிலே வெண்தாமரையிலே வீற்றிருக்கின்ற தேவியைத் தனது தூய வெள்ளை உள்ளத்திலே உறைய வேண்டுகின்றார். பொருட்சுவை, சொற்சுவை தோய்ந்த நாற்கவி பாட நல்லருள் தருமாறும், வாக்கும் கல்வியும் பெருகிடச் செய்யுமாறும் காக்கும் கருணைக்கடலாகிய அன்னையை வேண்டுகின்றார். கலைமகள் அருட்கடலில் குளிக்க விரும்புகிறார். பொற்பாதங்கள் நெஞ்சத் தடத்தினிலே நிலவ வேண்டும். அன்பர் கண்ணும் கருத்தும் நிறைந்த சகலகலாவல்லியை; பண்ணும், பரதமும், கல்வியும் நல்கிட வேண்டுகின்றார். பாட்டும் பொருளும், பயனும் கூட்டும்படி கடைக்கண் நல்க வேண்டும். சொல்விற்பனமும் அவதானமும், கவி சொல்லவல்ல நல்வித்தையும் தந்தடிமை கொள்ளுமாறு கல்விப் பெருஞ்செல்வப்பேறிடம் வேண்டுகிறார். சொற்கும், பொருட்கும் உயிராய் இருப்பவள் கலைவாணி, மன்னர் தம்மையும் என் பண்கண்டதும் பணியச் செய்யுமாறு, பல்கோடி தெய்வங்கள் இருந்தாலும், உன்போல் கண்கண்ட தெய்வம் உளதோ எனப் பாடி அருள் பெற்றார்.

சரஸ்வதியந்தாதி கம்பர் பாடினார். ஆயகலைகள் அறுபத்து நான்கினையும் அருளும் அன்னையை கம்பர் தன் நெஞ்சிலும், நாவிலும் கண்டு பாடினார். "தூய உருப்பளிங்கு போல்வாள் என் உள்ளத்தினுள்ளே இருப்பள்" என்ற வாசகத்தை நாம் உள்ளத்திலே இருத்தி மலர்த்தாள் வணங்குவோம். சரஸ்வதியை உள்ளத்திலும், நாவிலும் கொண்ட அடியவரினால் பாடப்பட்டமையால், பக்தியோடு ஓதுவோரது நெஞ்சிலும் நாவிலும் உறையச் செய்யும் ஆற்றல் அதற்குண்டு. அன்னை விரும்பி உறையும் அன்றலர்ந்த புதுப்பூ மனமாகிய மலர் தேவி வீற்றிருக்கும் வெள்ளைத் தாமரை அன்பரது வெள்ளை உள்ளத்தண்டாமரையாகும்.

படிக நிறமும், பவளச் செவ்வாயும் கடிகமழ் பூந்தாமரைபோற் கையும், துடியிடையும் கொண்ட தாயை அல்லும் பகலும் அனவரதமும் துதித்தால் கல்லும் கவி சொல்லும்.

பாதார விந்தத்திலே பணிபவர் தமக்கு பலகலையும் வேதாந்த முத்தியும் தந்தருள்வாள் பாரதி. அயன் நாயகியை, அகிலாண்டமும் பெற்ற தாயை யாம் மறவோம். தேவரும், தெய்வப் பெருமானும், நான்மறை செப்புகின்ற மூவருந் தானவராகியுள்ளோரும், முனிவர்களும், யாவருமேனைய எல்லா உயிரும் பணியும் நாவளர் செல்வி நம் சிந்தையின் இருளை நீக்கிடுவாள். அம்மை நம் நெஞ்சிலுறைந்து நம் நெஞ்சத்து அழுக்கையெல்லாம் போக்குகிறார்.

"மயிலே மடப்பிடியே கொடியே இளமான் பிணையே
குயிலே பசுங்கிளியே அன்னமே மனக்கூர் இருட்கோர்
வெயிலே நிலவெழும் மேனிமின்னே இனிவேறு தவம்
பயிலேன் மகிழ்ந்து பணிவேன் உனது பொற்பாதங்களே"

அம்மை நெஞ்சிலுறைந்து அகவிருளைநீக்கி அழுக்கு, மலம் அகற்றி அருளுவதால் நாம் பலகலையும், திருந்திய செல்வமும், பொருந்திய ஞானமும் பெற்று, கடைசியில் முத்தியும் பெறலாம். பெறல் அரிதாவ தொன்றில்லை.

கடும் சொல்லே கூரிய வாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“பாதாம் புயத்திற் பணிவார் தமக்குப் பல கலையும்
வேதாந்த முத்தியும் தந்தருள் பாரதி வெள்ளிதழ்ப்பூம்
சீதாம் புயத்தில் இருப்பாள் இருப்ப என் சிந்தையுள்ளே
ஏதாம் புவியில் பெறலரிதாவது எனக்கினியே”

ஆயகலைகள் அறுபத்து நான்கினையும் ஏலவே உணர்விக்கும் என்னம்மையாகிய சரஸ்வதியின் வடிவத்தை திருமூலர் விளக்குகிறார். உள்ளங்கையிலே அறிவுச் செல்வமாகிய ஏடு (புத்தகம்) தாங்கிய நங்கை கலைமகள் வெண்ணிற ஆடை அணிந்து வெள்ளைத் தாமரைப்பூவிலே வீற்றிருக்கின்றாள். ஒருகையில் வெண் தாமரை மலரை விரும்பி ஏந்தியும் இருக்கிறாள். அந்தத் தேவியின் பாதங்களை என்னுடைய தலை சூடிக்கொள்ளும். எனது வாய் தோத்திரங்களையே சொல்லும். கலைமகள் என்றும், மலைமகள் என்றும், இன்னும் பல உருவங்களிலும் காணுகின்ற தேவியை உள்ளம் குழைந்து தெய்வத் தமிழிலே ஞானத்தமிழ் முனிவர் பாடியுள்ளார்.

எங்கும் வியாபித்துள்ள பரிபூரண சக்தியாகிய, ஞானசொருபியாகிய அன்னையை அடைவதே பரமலட்சியமாகவேண்டும். அந்த அன்னத்தை நெஞ்சத் தாமரையிலே வைத்து, வேறெந்தக் கவலையுமற்று எல்லையில்லாத ஆனந்தக் கடலில் மூழ்குவது எப்போது என ஏங்க வேண்டும். அறிவாளர் நெஞ்சில் உவந்து நடம் ஆடிக் களிக்கும் மயிலின் பாதம் சரணடைய வேண்டும். அல்லும் பகலும் அநவரதமும் துதித்தால் கல்லும் கவி சொல்லும். தெய்வ மடந்தையர் போற்றும் தெய்வம், கமலந்தனில் உறையும் கலைமகள்; நாம் ஐம்புலன்கள் வழியிற் சென்று மயங்காமல் எமையாள்வாள்.

சகலகலாவல்லிமாலையைத் தினமும் ஓதிவந்தால் அன்னையின் அருட்கடாட்சம் கிட்டும். இயலாதவர்கள் “மண்கண்ட வெண்குடைக்கீழாக மேற்பட்ட மன்னரும்” என்ற கடைசிப் பாடலையாவது படிக்க வேண்டும். ஆசிரியர்கள் மாணவர்களுக்கு ஆன்மீகப் பண்புகளை வளர்க்க வேண்டும். பெற்றோர்கள் பிள்ளைகளுக்கு சமய அறிவையூட்டி நல்ல இறைநம்பிக்கையுள்ள பிள்ளைகளாக, கல்வியறிவில் வல்லவர்களாக வளர்க்க வேண்டும். சகலகலாவல்லிமாலையைத் தினமும் தோத்திரம் செய்ய, கண்கண்ட தெய்வமாகிய வாணி சரஸ்வதியின் திருவருள் கிட்டும். சகலகலாவல்லியின் திருவடிகளைச் சரணடைந்து இகமும், பரமும் நல்ல சுகமளிக்கும் கல்வியை அருளவேண்டி, அறம், பொருள், இன்பமும் ஆற்றலும் ஆயுளும் ஆத்மஞானமும் பெற்று, பல்லுயிர் நாவுதோறும் வீற்றிருக்கும் வாணியின் பூவடிமுடிமிசை புனைந்து போற்றி அன்னையின் திருவருட்கடாட்சம் பெற்று மண்ணில் நல்லவண்ணம் வாழ்வோமாக!

மண்கண்ட வெண்குடைக்கீழாக
மேற்பட்ட மன்னருமென்
பண்கண்டளவிற் பணியச் செய்வாய்
படைப் போன் முதலாம்
விண்கண்ட தெய்வம் பல்கோடியுண்டேனும்
விளம்பிலுன் போல்
கண்கண்ட தெய்வமுளதோ
சகலகலா வல்லியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(தொடர்ச்சி...)



# திருவண்டப் பகுதி

## சிவனது தூலசூக்குமத்தை வியந்தது

(தில்லையிலருளிச் செய்யப்பட்டது)

## இணைக்குறளாசிரியப்பா

மறைந்த

சங்கநூற் செல்வர் பண்டிதர் சு. அருளம்பலவனார் அவர்கள்

(யாழ்ப்பாணம் - காரைநகர்)

படைப்போற் படைக்கும் பழையோன் படைத்தவை
காப்போற் காக்குங் கடவுள் காப்பவை
கரப்போன் கரப்பவை கருநாக்
கருத்துடைக் கடவு டிருத்தகும்
அறுவகைச் சமயத் தறுவகை யோர்க்கும்
வீடுபே றாய்நின்ற விண்ணோர் பகுதி
கீடம் புரையுங் கிழவோ னாடொறும்

**பதவுரை:-**

முழுவதும் படைப்போன் படைக்கும் பழையோன்- எல்லாவற்றையும் படைப்பவனாகிய பிரமனையும் படைக்கும் பழையவன்; படைத்தவை காப்போன் காக்கும் கடவுள்- படைக்கப்பட்ட பொருள்களைக் காப்போனாகிய திருமாலையும் காக்கும் கடவுள்; காப்பவை கரப்போன்- காக்கப்பட்ட பொருள்களை உரிய காலத்தில் தத்தம் முதற்பொருள்களில் ஒடுக்குகின்றவன்; கரப்பவை கருதா கருத்து உடை கடவுள்- அங்ஙனம் ஒடுக்கப்பட்டவற்றை ஓய்ந்திருக்கச் செய்யும் பொருட்டுச் சிலகாலம் கருதாதிருத்தலும் பின்னர்க் கருதுதலும் உடைய கடவுள்; திரு தகும் அறுவகைச் சமயத்து அறுவகையோர்க்கும்- அழகு தகும் அறுவகைச் சமயநெறியினால் அறுவகைப்பட்ட சமயத்தவர்களுக்கும், வீடுபேறாய் நின்ற விண்ணோர் பகுதி- வீட்டின்பப் பேற்றைக் கொடுப்பவராய் நின்ற கடவுளரின் பகுப்புகள் எல்லாம், கீடம் புரையும் கிழவோன்- தன்னை நோக்கப் புழுக்களை ஒப்பத் தோன்றுமாறு தானே அவ் வீடுபேற்றை அளித்தற்கு உரிமையுடையோன்.

முழுவதும் படைப்போன் என்றது எல்லாவற்றையும் படைப்பவனாகிய பிரமனை, "முழுவதும் கண்டவனை" (சதகம்7) என அடிகள் பிறாண்டு கூறுதலும் காண்க. படைப்போன் காப்போன் எனக்கூறப்பட்ட பிரமாவும் திருமாலும் பிரகிருதி மாயைக்கணுள்ள கீழ்ப்பட்ட படைத்தற்றொழிலையும் காத்தற்றொழிலையும் ஸ்ரீ கண்ட உருத்திரர் வாயிலாகப் பெற்று நடத்துபவராதலின் இறைவனைப் படைப்போற் படைக்கும் பழையோன் என்றும், "காப்போற் காக்கும் கடவுள்" என்றும் கூறினார். "மலரோன் தாதையை வகுத்தும்" என ஞானமிர்தத்து (கடவுள் வாழ்த்.5) வருதலுங் காண்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காப்பவை கரப்போன்? கரப்பவைக் கருதாக் கருத்துடைக் கடவுள் என்றது பிரமனையும் திருமாலையும் படைத்துப் படைத்தலையும் காத்தலையும் கொடுத்து அருள் செய்த இறைவனே, காக்கப்பட்ட எல்லாவற்றையும் ஒடுக்குபவன் என்பதும், ஒடுக்கப்பட்டவை ஓய்வடையுமாறு அவற்றைக் கருதாதிருந்து பின்னர் கருதிப் படைப்பவன் என்பது கூறியவாறாகும்.

அறுவகைச் சமயம் என்றது அடிகள் காலத்து வழங்கிய சமயங்களுள் தெய்வக் கொள்கையுடையனவாய் அத்தெய்வங்களால் வீடுபேற்றினைப் பெறுதற்குரிய அறுவகைச் சமயங்களை அவை மணிமேகலையிற் கூறப்பட்ட இரு கூற்று அறுவகைச் சமயங்களுள் சைவம், வைணவம், ஆசீவகம், நையாயிகம், வைசேடிகம், பிரமம் என்பன போலும். சைவம் பாசுபதம், மாவிரதம், காளாமுகம், வாமம், வைரவம் என்றும் கூறுவர்.

அறுவகையோர்க்கும் வீடுபேறாய் நின்ற விண்ணோர் பகுதி கீடம்புரையுங் கிழவோன் என்றது அறுவகைப்பட்ட சமயத்தவர்களுக்கும் வீடு பேற்றினைக் கொடுப்பவராய் நின்ற கடவுள் பகுப்பெல்லாம் புழுக்களை ஒப்பத்தோன்றுமாறு எல்லாம் வல்ல இறைவனே அவ்வீடு அளித்தற்கு உரிமையுடையோன் என விண்ணோர் பகுதியின் சிறுமையினையும் இறைவனது பெருமையினையும் விளக்கியவாறாம்.

பகுதி- பகுப்பு “பகுதியாற் பாற்பட்டொழுகப் பெறின்” (குறள் 111) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க. கீடம்- புழு. கிழவோன்- உரிமையையுடையோன். மெய்யான வீடுபேற்றினை அளித்தற்கு உரிமையுடையோன் இறைவன் ஒருவனேயாதலின் அவனைக் “கிழவோன்” என்றார். “முத்திவழங்கும் பிரான்” எனத் திருக்கோவையாரில் (127) அடிகள் அருளியமையுங் காண்க.

(தொடரும்...

# யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்!



**விதியையுணர்த விதியாய் நின்றாய்**
**வினையையுணர்த வினையாய் நின்றாய்!**
**மதியையுணர்த மதியாய் நின்றாய்**
**அறிவையுணர்த அறிவாய் நின்றாய்!**
**அறியேனடியேன் உன் திருநாடகத்தை**
**அனைத்தும் நீயாய் நின்றாய் இறைவா!**
**எளியேனறியாத் தவறுமுன்லீலையே - என்னையும்**
**ஆட்கொண்டருள் புரிந்தது உன் சித்தமே**
**தெளிவுற்றேன் இயம்புகின்றேன் சந்நிதியானே**
**யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்!**

-இராம ஜெயபாலன்-

இரக்கம் காட்டு. ஆனால் ஏமாந்து போகாதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளையான்குடி மாறநாயனாரும் சிவனடியார் தொண்டும்

திரு நா. நல்லதம்பி அவர்கள்

திருச்சிற்றம்பலத்திலே எழுந்தருளியிருக்கும் நடராசப் பெருமானுக்கு மெய்யடியாராகப் பக்திமை கொண்டு விளங்கிய இளையான்குடி மக்கள் செய்த தவத்தின் பயனாக மாறன் என்பவர் பிறந்திருந்தார்.

ஏரினால் உழுது நெல், கரும்பு முதலியன பயிரிடுவதே அவரது தொழில். அதற்கு மழையும் கங்கை நீரும் கைகொடுத்தது. மாசற்ற மனமும் நடராசன் அருளும் பலமாக இருந்தது. "மேழிச் செல்வம் கோழை படாது" என்பதுபோல மாறனாருக்கு மிகுந்த செல்வம் வந்து சேர்ந்தது.

செல்வம் வந்து சேர்ந்தாலும் சிந்தை மாறாத மாறனார், சிவபெருமானிடத்திலும் சிவனடியாரிடத்திலும் பக்தி கொண்டு தொண்டு செய்வதை மறந்தாரில்லை. மக்கள் சேவையே மகேசுரன் சேவை என எண்ணிய மாறன், தம்மை நாடிவரும் அடியார்களை பக்தி சிரத்தையோடு இன்சொல் பேசி விருந்துபசாரம் செய்வதற்கு ஏற்ற இல்லாளைப் பெற்றிருந்தார் என்பதும் இங்கே கவனிக்கத்தக்கது.

"இல்லதென் இல்லவள் மாண்பானால்..." என்னும் வள்ளுவன் வழியில் இளையான்குடி மாறன் அவ்வூரிலே நாயனாராக வாழ்ந்து வருகிறார்.; பல்லாண்டு காலம் வாழும் வாய்ப்பும் பெறுகிறார்.

ஆளும் நாயகர் அன்பர் ஆனவர், அளவிலார் உளம் மகிழவே,
நாளும் நாளும்நி றைந்து வந்து நுகர்ந்த தன்மையின் நன்மையால்,
நீளும் மாநிதி யின்பரப்பு நெருங்கு செல்வம் நிலாவி எண்
தோளினார் அளகைக் கிருத்திய தோழ னாரென வாழுநாள்.

என்று சேக்கிழார் பெருமான் இதனைக் குறிப்பிடுகிறார்.

இவ்வாறு வாழும்போது, இளையான்குடி மாற நாயனாரின் உண்மையான பக்திநிலையை உலகம் உணர்ந்துகொள்ளவும், நாயனாரின் பக்குவ நிலையைச் சோதிப்பதற்கும் திருவுளங் கொண்ட தில்லை நடராசனார், நாயனார் வறுமையுறும் நிலையை உருவாக்கினார்.

இன்னவாறு வளஞ்சுருங்கவும் எம்பிரான் இளை யான்குடி
மன்னன் மாறன் மனஞ்சுருங்குதல் இன்றி உள்ளன மாறியும்
தன்னை மாறி இறுக்கஉள்ள கடன்கள் தக்கன கொண்டுபின்
முன்னை மாறில் திருப்பணிக்கண் முதிர்ந்த கொள்கைய ராயினார்.

பல வழிகளில் செல்வம் சுருங்கி வந்தபோதும், மனம் மாறாமல் கடன்பட்டும் முன்னர் போலத் திருப்பணிகளை ஆற்றி வருவாராயினார் என்கிறார் சேக்கிழார் பெருமான்.

சுடச் சுடரும் பொன்போல் ஒளிவிடும் துன்பம்
சுடச்சுட நோற்கிப் பவர்க்கு (குறள் 267)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னும் வள்ளுவர் பொய்யாமொழிக்கிணங்க, நாயனார் தமது கொள்கையில் மாற்றமில்லாமல் இறைதொண்டும் அடியார்ப் பேணலும் ஆற்றிவருகின்றார்.

அந்நாளில் ஒருநாள், இரவு நேரத்தில், மாரிகாலத்தில் மாறனாரின் மாளிகைக்கு, நடராசர், தவஞானி உருவத்தில் விருந்தாளியாக வருகின்றார்.



அவரின் ஈரம் போக்கி, மாற்றுடை கொடுத்து ஆசனத்து இருத்தியபின், அவருக்கு போசனங் கொடுக்க எண்ணிய மாறனார், தம் மனையாளை அணுகிப், "பசியோடிருக்கும் தவ ஞானியர்க்குப் பசி யாற்றுவதெப்படி?" எனக் கேட்கிறார்.

தாமே பெய ருக்கு ஏதாவது தின் றிருக்கலாம்; அதனால் பானையிலே ஏதும் பற்றுதல் கூடக்கிடை யாத நேரம். அதுவும் இரவு; ஏதும் கடன்படமுடியாத பொழுது; என்ன செய்யலாம் என கணவனுக்கு விளங்காததினால் மனைவியைக் கேட்கிறார்.

மனையாளும் எனக்கும் ஒன்றும் விளங்கவில்லை; இனிக் கடன் தருவாரும் இலர்; பாவியேன் என் செய்வேன்; ஆயின் ஒரு வழி உண்டு; இன்று பகல் பெய்த மழைக்கு, முன்னர் விதைத்த நெல்மணிகள் நீரில் மிதக்கும்; அவை முளைவிட்டு இருக்கும்; அவைகளை வாரி அள்ளி வந்தால், ஒருமாதிரி நான் உணவு ஆக்கித் தரமுடியும்; இதைவிட மார்க்கம் வேறு எனக்குத் தெரியவில்லை என்கிறாள்.

ஊர் உறங்கும் நேரம்; மை இருள்; மாறனார் வயலுக்குப் போகிறார். அங்கே,

காலினால் தடவிச்சென்று கைகளால்
சாலி வெண்முளை நீர்வழிச் சார்ந்தன
கோலி வாரி இடாநிறை யக்கொண்டு
மேலெ டுத்துச் சுமந்தொல்லை மீண்டனர்.

(இடா- கூடை) (புராணம்)

நெல்முளைகளை வாரி எடுத்துக் கொண்டுவந்து பாரியார் கையில் கொடுக்கின்றார் மாறனார்.

சேறு கழுவிய நெல்முளை காய வைக்கவும், குற்றிய அரிசியைச் சோறு ஆக்கவும் விறகு இல்லை. அதனால் வீட்டின் கூரை மரம் ஒன்றை அறுத்து, விறகாகக் கொத்திக் கொடுக்கிறார். ஒருவாறு சோறு ஆக்கப்பட்டாலும், கறிக்கு என்ன செய்வது என மறுபடியும் நாயனாரை அணுகினாள் இல்லத்தரசி. அதனால் திரும்பவும் வயல்வெளிக்குச் சென்று

பெருமனம் உள்ளவருக்கு உலகமே குடும்பம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கறிசமைக்கக் கூடிய இலைவகைகளைத் தேடிக்கொண்டு வந்து கொடுக்கிறார். "பசியினால் வருந்தும் பரமனாரிடங் கொண்ட பாசத்தினால், தம் பாச வினையைப் போக்குவார் போலக் குறும்பயிர் பறித்தார்" என்கிறார் சேக்கிழார்.

சிறிது நேரத்தில் சோறும் கறியும் சமைத்து விட்டார் மாறனாரின் பத்தினியார். கணவனிடஞ் சென்று, "இணையிலாதாரை ஈண்டு அமுதுசெய்விப்போம்" என்று சொல்ல மாறன் நாயனார் உடனே அடியாரை அணுகி, "துயில் நீங்கி எழுந்து வாருங்கள்" என அழைக்கிறார். அப்பொழுது அந்தக் கட்டிலில் அரும்பெருஞ் சோதியாக நடராசப் பெருமான் காட்சியளித்தார்.

"அழுந்திய இடருள் நீங்கி அடியனேன் உய்ய என்பால்
எழுந்தருள் பெரியோய்! ஈண்ட அமுது செய்தருளுக" என்று
தொழும்பனார் உரைத்தபோதில், சோதியாய் எழுந்து தோன்றச்
செழுந்திரு மனைவியாரும் தொண்டருந் திகைத்து நின்றார்.

என இதனைக் காட்டுகின்றார் சேக்கிழார் பெருமான்.

மாலொடு நான்முகனுந் தேடிக் காணாத நடராசனைச் சோதியாகக் கண்ட மாறனும் மனையாளும் ஏனைத் தொண்டருந் திகைத்து வணங்கி நிற்கும்போது, ஆன்மாக்களுக்குச் சுகத்தைச் செய்பவனான சங்கரன், இளையான்குடி மாறன் நாயனாருக்கு அருளாசி வழங்கலானார்.

"அன்பனே! அன்பர்பூசை அளித்தநீ, அணங்கி னோடும்
என்பெரும் உலகை எய்தி, இரு நிதிக் கிழவன் தானே
முன்பெரும் நிதியம் ஏந்தி மொழி வழி ஏவல் கேட்ப
இன்பம் ஆர்ந்து இருக்க" என்றே அருள்செய்தான்" எவர்க்கும் மிக்கான்.

இவ்வாறாக இன்னல் வந்தபோதும் அடியாரைப் பேணுவதை மறவாத இளையான்குடிமாற நாயனார், இறைவனோடு சேர்ந்து, இல்லாளுடன் பேரின்ப வாழ்வைப் பெறுகின்றார்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருணகிரிநாதர் அருளிய கந்தரநுபூதி

(தொடர்ச்சி...

– வாரியார் சுவாமிகள் உரையுடன் –



19. வடிவுந் தனமும் மனமும் குணமும்
குடியுங் குலமுங் குடிபோ கியவா
அடியந் தமிலா அயில்வேல் அரசே
மிடியென்றொரு பாவி வெளிப்படினே.

## பதவுரை

அடி அந்தம் இலா- முதலும் முடிவும் இல்லாத, அயில்வேல் அரசே- கூரிய வேற்படையை ஏந்திய அரசே! மிடி என்ற ஒரு பாவி- வறுமையென்ற ஒரு பாவி, வெளிப்படினே- தோன்றினால், வடிவும்- உடலழகும், தனமும்- செல்வமும், மனமும்- நல்ல மனமும், குணமும்- நற்குணமும், குடியும்- பிறந்த குடியின் பெருமையும், குலமும்- பிறந்த குலத்தின் பெருமையும், குடி போகியவா- விட்டுவிட்டு வேறு இடத்திற்குக் குடி போய்விட்டன. ஆ, வியப்புக் குறிப்பு.

## பொழிப்புரை

முதலும் முடிவும் இல்லாத கூரிய வேலை ஏந்திய தலைவரே! வறுமை என்ற ஒரு பாவி தோன்றுமானால் உடலழகும், செல்வமும், நல்ல மனமும், நற்குணமும், குடிப்பிறப்பின் உயர்வும், குலப் பெருமையும் அடியோடு விட்டு வேறு இடத்திற்குக் குடிபோய்விடும்.

## அடியந்தமிலா அயில்வேலரசே:-

இறைவன் ஆதியும் அந்தமும் இல்லாதவன்.

"ஆதியும் அந்தமும் இல்லா அரும் பெருஞ்சோதி"

-திருவாசகம்.

அயில்- கூர்மை.

ஞானம் கூர்மையானது. கூர்த்த மெய்ஞ்ஞானத்தால் என்பார் மாணிக்கவாசகர்.

பிறர் உனக்கு உதவியதை மறக்காதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லா ஆன்மாக்களுக்கும் ஞானத்தை வழங்கும் பொருட்டு ஞான பண்டிதன் ஞான வேலைத் தாங்கியுள்ளான். அப்பரமனை மெய்யன்புடன் வழிபட்டோர் ஞானம் எய்தி, அதனால் அநுபூதி பெறுவர்.

**மிடியென்றொரு பாவி:-**

வறுமை மனிதனை அடியோடு அழிக்கும் இயல்புடையது. அதனால் அதனைப் "பாவி" யென்றார். பண்பைப் பண்பியாக உருவகஞ் செய்தார்.

இன்மை யெனஒரு பாவி மறுமையும்
இன்மையும் இன்றி வரும். -திருக்குறள்.

**வடிவும் தனமும் மனமும் குணமும் குடியும் குலமும் குடி போகியவா:-**

அழகு, செல்வம், நன்மணம், நற்குணம், குடியின் உயர்வு, குலப்பெருமை என்று ஆறு நலன்களையும் வறுமையழித்துவிடும்.

"வறுமை போல இன்னாது வறுமையன்றி வேறில்லை
மறுவின் மொழிகள் சோர்வுபடும் வாய்ந்த குடிநற் செயல் மொழிகள்
இறுதிபடும்மற் றிரப்பாதி எல்லாத் துயரும் உடனாகும்"

-விநாயக புராணம்.

தரித்திர மிக்க வனப்பினை யொடுக்கிச் சரீரத்தை உலர்தர வாட்டும்
தரித்திரம் தலைவர் தலைவியர்க்கிடையே தடுப்பரும் கலாம்பல விளைக்கும்
தரித்திரம் அளவாச் சோம்பலை எழுப்பும் சாற்றரும் உலோபத்தை மிகுக்கும்
தரித்திரம் மிக்க பொய்ம்மை பேராசை தரும் இதில் கொடிய தொன்றில்லையே.

-குசேல உபாக்யானம்.

இதனை நன்கு ஆராய்ந்த ஔவையார்,
"கொடிது கொடிது வறுமை கொடிது" என்றார்.

அருணகிரிநாதர் பழநித் திருப்புகழில், "முருகா பாழ்த்த வினையின் காரணமாகச் சிறியேனுக்கு மறு பிறப்பு வருமாயின் சிறிது மிடியும் அணுகாதே அருள்" என்கின்றார்.

"நினைவுபாழ்பட வாடி நோக்கிழந்து
வறுமையாகிய தீயின்மேற் கிடந்து
நெளியும் நீள்புழு வாயினேற்கு இரங்கி அருள்வாயே"

-(அறிவிலாதவர்) திருப்புகழ்.

இல்லானை இல்லாளும் மதியாள் என்றால் மற்றவர் மதிப்பது யாங்ஙனம்?

முற்பிறப்பில் அறஞ்செய்யாது தீவினை புரிந்தோரை வறுமைப் பேய் பிடித்து அல்லற்படுத்தும்.

அநுபூதி பெற்று அருட்செல்வம் இல்லாதவரிடம் உயிரில் ஒளியும், ஞானச் செல்வமும், நன்மனமும், அருட்பண்பும், அடிமைத் திறமும், அடியார் கூட்டமும் விலகிவிடும் என்ற குறிப்பை அடிகளார் உய்த்துணர வைத்தார்.

**எளிமையைப் பின்தொடர்ந்து மகிழ்ச்சி வருகிறது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வறுமையால் மேலே கூறிய ஆறும் விலகுவதுபோல், அருட்செல்வம் இல்லாதவரிடம் இவை நீங்கும் என்பது போதரும்.

ஆதலால் ஒவ்வொருவரும் அருட்செல்வத்தைப் பெறுதல் வேண்டும் என்று உபதேசித்தருளினார்.

அருளில்லார்க் கவ்வுலக மில்லை பொருளில்லார்க்கு
இவ்வுலக மில்லாகி யாங்கு.

-திருக்குறள்.

கருத்துரை

வேலாயுதக் கடவுளே! வறுமை வந்தால் அழகு முதலியன அகலுவதுபோல், அருள் இல்லாதார்க்கு உயிர், ஒளி முதலியன அகலும். ஆதலால் அருட் செல்வத்தை அளித்தருள்.

(தொடரும்...

# சந்நிதிக் கந்தன்

# கழற்கோர் கவிமாலை- 35

பல்லவி

**சந்நிதியில் நின்றாளும் வேலவா- எம்மைச்**
**சந்ததமும் காத்துநின்று ஆளவா**

அநுபல்லவி

**உந்தன்புகழ் பாடி வந்தோம் கேளையா நாங்கள்**
**நிம்மதியாய் வாழ்வதெந்த நாளையா**

சரணம்

**வீதியெல்லாம் தூக்கி வந்தோம் காவடி- உந்தன் நாளும்**
**வேண்டும்வரம் தந்துஎம்மை ஆதரி**
**நாதியற்று நாடுகிறோம் சேவடி - ஐயா**
**நம்தலையில் வைத்திடுந்தன் சீரடி**
**செந்தமிழில் பாடிவந்தோம் சீரையா- உந்தன்**
**பன்னிரண்டு விழிதிறந்து பாரையா**
**நந்தமக்கு உம்மைவிட்டால் யாரையா? - நல்ல**
**வாழ்வுதனைப் பூமிதனிற் சேரையா.**

**(சந்நிதி)**

-இராசையா குகதாசன்-

# திருமுறைகளில் சைவ சித்தாந்தம்

திரு சிவ சண்முகவடிவேல் அவர்கள்

சைவ சமயம் அன்றும் இன்றும் என்றும் நின்று நிலாவுகின்றது. எத்தனையோ விதம் விதமான சூறாவளிகள், சண்ட மாருதங்கள், ஊழிகள், படையெடுப்புக்கள், பெரு வெள்ளங்கள் ஏற்படும் போதிலெல்லாம் அவற்றிற்கெல்லாம் ஈடு கொடுத்துத் தலை நிமிர்ந்து நிற்கின்றதென்றால் அதற்கு ஒரு அடிப்படைக் காரணம் இருக்கவேண்டும். அந்தக் காரணம் சைவசமயம் அழிவில்லாத உண்மைகளை- தத்துவார்த்தங்களை ஆணிவேராகக் கொண்டு இலங்குவதேயாகும். தத்துவார்த்தங்கள் உண்மையை மூச்சு விடுவன. நெருப்பைத் தொட்டால் சுடும் என் கை முக்காலத்திற்கும்- எக்காலத்திற்கும் பொருந்தும்.

அந்த உண்மைகளைக் காட்சி, அளவை, அனுமானத்தால் நிறுவுவதற்குச் சைவ சித்தாந்தம் என்று ஒரு தனிப்பிரிவு உண்டு. சைவ சித்தாந்தம் உருப்பெறுவதற்கு முன்பும் உருப்பெற்ற காலத்தும் பின்னரும் பாடப்பெற்ற பன்னிரு திருமுறைச் செல்வத்தில் இடம்பெற்றுள்ளன.

திருமுறைச் செல்வத்தில் ஆங்காங்கு கஞ்சிக்குப் பயறு இட்டதுபோலும் காணப்படும் அழிவற்ற உண்மைகளில் ஒரு சிலவற்றை எடுத்துக் காட்ட முனைகின்றோம்.

உலகத்திற் முழுமுதற் கடவுள் ஒருவர், அவர் பலவேறு வடிவங்களை வேண்டும்போது எடுத்தருள்வார்.

1) ஏக னனேகன் இறைவனடி வாஅழ்க...

-8ம் திருமுறை

சைவ சமயத்தில் விதித்த நான்கு பொருள். ஏனைய மார்க்கங்களுக்கு அவ்வியல்பு இல்லை.

2) *i.* செய்வினை, செய்பவன், வினைப்பயன், சேர்ப்பவன்.

*ii.* செய்வினையுஞ் செய்வானு மதன்பயனுஞ் சேர்ப்பானு
மெய்வகையா னான்காகு விதித்த பொருள்-
இவ்வியல்பு சைவநெறி யல்லவற்றுக் கில்லை.

சைவத்தின் தாற்பரியம் சிவனை மறவாமை

-12ம் திருமுறை.

3) எந்நிலையி னின்றாலு மெக்கோலங் கொண்டாலும்
மன்னியசீர்ச் சங்கரன்தாள் மறவாமை பொருள் இதுவும்.
கடவுள் உலகம் முதலாக உயிர் ஈறாக
எல்லாம் ஆவார்.

4) எல்லாமுடைய வீசனே யிறைவன் -இதுவும்.

கண்ணிற்குப் புலனாகாத அருவத் திருமேனிக்கும் உருவத்திருமேனிக்கும் மூலமாகித் தரிக்கும் அடையாளம் நீண்ட நாகத்தினை அணிந்த சிவபெருமானை அறிந்து வழிபடுவதற்குச் சிறந்த குறியாக விளங்குவது சிவலிங்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5) காணாத வருவினுக்கு முருவினுக்குங் காரணமாய்
நீணாக மணிந்தார்க்கு நிகழ்குறியாஞ் சிவலிங்கம் இதுவும்.
தூய்மையான அன்பினால் அன்றி
அறிவதற்கு அரியவன் அரன்.
6) கானுறு கோடி கடிகமழ் சந்தனம்
வானுற மாமல ரிட்டு வணங்கினும்
ஊனினை நீக்கி யுணர்பவர்க் கல்லது
தேனமர் பூங்கழல் சேரவொண் ணாதே

-10ம் திருமுறை.

முப்பொருள் உண்மை.
7) பதிபசு பாசம் எனப்பகர் மூன்றில்
பதியினைப் போல்பசு பாசம் அனாதி- இதுவும்
கடவுள் தோன்றாத் துணை.
8) "தோன்றாத் துணையா யிருந்தனன் தன்னடி
யோங்களுக்கே.

-4ம் திருமுறை

இறைவன் காட்ட ஆன்மா காணும்.
9) காண்பாரார் கண்ணுதலாய்க் காட்டாக் காலே
இறைவன் எல்லாப் பொருள்களிலும் மறைந்துளன்
-6ம் திருமுறை
10) விறகில் தீயினன் பாலிற் படுநெய்போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்

-5ம் திருமுறை

நமச்சிவாயம் வினைக்கு நாசம்
11) பண்ணிய வுலகிற் பயின்ற பாவத்தை
நண்ணிநின் றறுப்பது நமச்சி வாயவே.

-4ம் திருமுறை

---

**மனிதனுக்கு எத்தனை பொருள்களின்மீது பற்று ஏற்படுகிறதோ அத்தனை அழுகைக்கு முளைஅடித்தாகிவிட்டது என்றுதான் அர்த்தம். எந்தப் பொருளாயினும் என்றோ ஒருநாள் அது நம்மைவிடவேண்டும்; அல்லது நாம் அதை விடவேண்டி இருக்கும். பிரிவின்போது துக்கம் ஏற்படத்தான் செய்யும். ஒரு பொருளின்மீது பிரியம் உண்டு என்றால் அதைத் தொடர்ந்து அந்தப் பொருளை விட்டுப் பிரிவது இயல்பே. பிரிவின்போது துயரம் ஏற்படாமல் செய்துகொள்ள ஒரு வழி உண்டு. அதாவது மனம் ஒப்பிப் பொருள்மீது கொண்ட பற்றிலிருந்து பிரிந்துவிட வேண்டும். இதற்குத்தான் வைராக்கியம் என்று பெயர்.**

-முதுரை-

---

**பிறருடைய தவறுகளை மறப்பதே நன்று.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ச்சி...

# மரணம் - அப்புறம்

சத்குரு ஜக்கி வாசுதேவ் அவர்கள்

.....எனவே இந்த அம்மையாரும் ஹாலிவுட் விடயங்களில் தீவிரமாகி, பெவர்லி ஹில்சில் சில வீடுகளும் அக்கம் பக்கத்தில் சில வீடுகளும் வாங்கி அந்தப் பக்கமே சுற்றிக் கொண்டிருந்திருக்கிறார்.

டாம் குருய்ஸின் கண்களில் படுவதற்காக பார்டிகள் ஏற்பாடு செய்வதும், வீடுகள் வாங்குவதுமாக அந்த அம்மையார் இருந்ததைக் கண்டு அந்த அம்மையாரின் கணவர் பைத்தியம் பிடித்தது போலாகிவிட்டார். பிறகு இந்த விடயம் என் கவனத்துக்கு வந்தது. அந்த அம்மையாரும் எப்படியோ என்னிடம் வந்து சேர்ந்தார். முந்தைய பிறவியில் டாம் குருய்ஸ் தனது கணவராக இருந்திருக்கிறார் என்பதில் அந்த அம்மையார் 100வீதம் உறுதியாக இருந்தார். அந்த அம்மையார் மிகவும் உறுதியாக இருக்கிறார் என்பதை நான் அறிந்து கொண்டேன். எனவே, நான் கூறினேன், ஆமாம், அப்படித்தான், ஆனால் முந்தைய பிறவியில் டாம்குருய்ஸைத் தெரியும். அவர் முந்தைய பிறவியில் சகிக்க முடியாத அளவிற்கு அருவருப்பான தோற்றத் துடன் இருந்தார். உங்களுக்கு நினைவிருக் கின்றதா? என்று. அந்த அம்மையார் பித்துப்பிடித்ததுபோல் ஆகிவிட்டார். முன் பிறவி விடயங்கள் இப்படித்தான் மக்களைப் பைத்தியத்தில் தள்ளுகிறது.



**கேள்வியாளர்: ஐந்து வருடங்களுக்கு முன் இறந்த என் தந்தையுடன் தொடர்புகொள்ள முடியுமா? அவர் தற்போது எங்கிருக்கிறார் என்பதை அறிய முடியுமா?**

**சத்குரு:**

இக்கேள்வி உங்கள் உணர்ச்சிவயப்படுதலால் வெளிவருவதை என்னால் அறிய முடிகிறது. நான் உங்களைக் கேலி செய்வதற்காக இதைக் கூறவில்லை. இதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். அதாவது, உங்கள் தந்தையுடன் உள்ள உங்கள் தொடர்பு அவர் உயிருடன் இருக்கும்வரை மட்டும்தான். உங்கள் தந்தையென்று நீங்கள் அறிந்திருப்பது ஒரு குறிப்பிட்ட உடலையும் மனதையும்தான். அவரைப் பற்றிய வேறெதுவும் உங்களுக்குத் தெரியாது.

"என் தந்தை ஒரு நல்ல மனிதர்" என்று நீங்கள் சொல்லிக்கொள்ளலாம். ஆனால் உண்மையில் உங்கள் தந்தை நல்லவரா கெட்டவரா என்பது உங்களுக்குத் தெரியாது.

**கவலையில் உள்ளத்தைச் செலுத்தக்கூடாது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் தந்தை நல்ல இதயம், நற்குணம், சாந்தம், அன்பு கொண்ட மனிதனாக இருந்திருக்கலாம். ஆனால், அவர் யாரோ ஒருவரிடம் கொடூரமாகவும், உங்களிடம் அன்பாகவும், நேர்மையாகவும் இருந்திருக்கலாம். சமுதாயத்தில் தந்திரமுடன் நடந்துகொண்டிருக்கலாம். உங்களுடன் எப்படி இருந்தார் என்பதுதான் உங்களுக்குத் தெரியும். சமுதாயத்தில் நல்ல மனிதராகவும் உங்களிடம் நேர்மையின்றியும்கூட இருந்திருக்கலாம். நீங்கள் அவருடைய உடம்பு, எண்ணங்கள் மற்றும் உணர்வுகள் ஆகிய சில பகுதிகளை மட்டுமே அறிவீர்கள்.



உங்கள் தந்தை இறக்கும்போது கட்டாயமாக அவருடைய உடலை இங்கே விட்டுவிட்டுத்தான் செல்வார். உடலை இங்கே விட்டுச்சென்று விடுவதால், இனி அவருடன் உங்களுக்கு எந்தத் தொடர்பும் இல்லை. நீங்கள் மிகவும் உணர்ச்சிமயமாக இருந்தாலும் பயன் இல்லை. ஏனெனில் அவருடன் இருந்த தொடர்பு முற்றிலும் முடிந்து விட்டது. இதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். அவர் உயிருடன் இருக்கும்வரைதான், உங்களால் அவருடன் தொடர்புகொள்ள முடியும். ஆனால், அவர் உயிரோடு இருக்கும்பொழுது அவருடன் பேசுவதுகூட இல்லை. இறந்த பின்பு தொடர்பு கொள்ள விரும்புகிறீர்கள். இந்த முரண்பாடுகளை உங்களிடம் வைத்துக்கொள்ளாதீர்கள். அவர்கள் உயிரோடு இருக்கும்போது உங்களை முழுமையாக அவர்களுக்குக் கொடுங்கள். உங்களால் இயன்ற அனைத்தையும் அவர்களுக்குச் செய்யுங்கள். அவர்கள் உங்களைப் பிரிந்து சென்றபின்பு, உங்களால் அவர்களுக்கு எதுவும் செய்ய முடியாது. எப்படியானாலும் ஒருநாள் அவர்கள் உங்களைப் பிரிந்து சென்றுவிடுவார்கள். எனவே, அவர்கள் உங்களோடு இருக்கும்போது, உங்களால் முடிந்தவரை அவர்களுடன் ஈடுபாடு கொள்ளுங்கள். அவர்கள் இருக்கும்போது, உங்களால் அவர்களைப் பார்ப்பதற்கோ அவர்களுடன் பேசுவதற்கோ அல்லது நேரத்தைப் பகிர்வதற்கோ முடிவதில்லை. அவர்கள் மீது கோபம் அடைகிறீர்கள். ஆனால் அவர்கள் இறந்தபின்பு, அவர்களுடன் பேசுவதற்காகச் சொர்க்கத்துக்குச் செல்ல விரும்புகிறீர்கள். அவர்களுடன் தொடர்பு கொள்வதற்கு, அங்கே e-mail வசதியில்லை.

எனவே இறந்தவர்களைப் பற்றி கவலைப்படத் தேவையில்லை. இறந்தவர்களை இறந்தவர்களிடம் விட்டுவிடுங்கள். உங்கள் வேலை உயிரோடு இருப்பவர்களுடன்தான். உயிரோடு இருப்பவர்களுடன்தான் நமக்கு வேலை என்றால், அதை முழுமையாகச் செய்யவேண்டும் என்பதை நாம் தெரிந்திருக்க வேண்டும். உங்களைச் சுற்றியுள்ள உயிர்களிடம் ஈடுபாடு கொள்ளுங்கள். இங்கிருக்கும்போது ஈடுபாடின்றி இருக்கிறீர்கள். உங்களுக்கு அருகில் இருப்பவரிடம் "ஹலோ" என்று சொல்வதற்குக்கூட தயங்குகிறீர்கள். ஆனால் இறந்தவர்களுடன் தொடர்புகொள்ள விரும்புகிறீர்கள் அப்படி ஏன்? உங்களைச் சுற்றிலுமுள்ள உயிர்களிடம் ஈடுபாடு கொள்ளுங்கள். அதுவே போதுமானது. பிறக்காதவர்களுடனும் இறந்தவர்களுடனும் எந்தத் தொடர்பும் வேண்டியதில்லை.

(தொடரும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உண்மையே அழகு

திரு குமாரசாமி சோமசுந்தரம் அவர்கள்

உண்மையை உணர்ந்து கொள்ளவும், உண்மையின் அடிப்படையில் வாழ்க்கையை அமைத்துக் கொள்ளவும் மனிதர்களுக்கு மட்டுமே இயலும். மற்றைய உயிரினங்களின் ஆற்றலுக்கு அது அப்பாற்பட்டது. அந்த வகையில் மனிதர்கள் ஆற்றல் மிகுந்து விளங்குகின்றனர். ஆனால் இயல்பாகத் தம்மிடம் உள்ள அதி அற்புத ஆற்றலை வாழ்க்கையில் மனிதர்கள் பயன்படுத்துவதாகத் தெரியவில்லை. உண்மைக்கு மதிப்பளித்து, வாழ்க்கையில் அதனை உபாசிக்கும்போதுதான், உலகில் நீதி நிலைபெறுகிறது, நேர்மை உரம் பெறுகிறது. மனித வாழ்க்கையில் சாந்தி நிலவுகிறது.

"உண்மையே அழகு, அழகே உண்மை
அழகே செம்மை, செம்மையே அழகு
உண்மையே செம்மை, செம்மையே உண்மை"

இக்கூற்றுக்கள் பண்டைய கிரேக்க தத்துவ ஞானிகளுக்கும், இந்திய தத்துவ ஞானிகளுக்கும் உடன்பாடானவை. மனித வாழ்க்கையில் உண்மை, அழகு, நன்மை எனும் பண்புகள் மிளிர வேண்டும் என்பதில் மேலைத்தேய அறிஞர்களும், கீழைத்தேய அறிஞர்களும் பண்டுதொட்டு இன்றுவரை உறுதியாக இருந்து வருவதிலிருந்து, அப்பண்புகளின் முக்கியத்துவம் தெளிவாகின்றது.

சத்தியம் எனும் வடசொல், தமிழில் உண்மை, வாய்மை, மெய்ம்மை என்ற சொற்களால் உணர்த்தப்படுகிறது. தெய்வப்புலவர் திருவள்ளுவர், பொய்யாமை என்று குறிப்பிடுகிறார். உள்ளத்தால் பொய்யாமை உண்மை எனவும்; வாய்மொழியால் பொய்யாமை வாய்மை எனவும்; உடல் ஆற்றும் செயலினால் பொய்யாமை மெய்ம்மை எனவும் வேறுபடுத்தி விளக்கம் தரப்படுகிறது. மனம், மொழி, மெய்யினால் பொய்யாமையே சத்தியம் ஆகும்.

பொய்யாமை, மனித விழுமியங்களுள் தலையாயது; அறங்கள் யாவற்றினும் முதன்மையானது.

"பொய்யாமை பொய்யாமை யாற்றின் அறம் பிற
செய்யாமை, செய்யாமை நன்று"

எனவும்,

"எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு" எனவும் வள்ளுவர் கூறுகின்றார்.

சமூகத்திலோ, குடும்பத்திலோ அதன் உறுப்பினர்களிடையே நல்ல சுமுகமான மனித உறவுகளைக் கட்டியெழுப்புவதற்கு அத்திவாரமாக விளங்குவது பொய்யாமை. பரஸ்பர நம்பிக்கை, விசுவாசம், அன்புப் பிணைப்பு என்பன மனித உறவுகளைப் பலப்படுத்துபவை. உண்மை

நாகரிகம் என்பது மனப்பண்பாட்டையே குறிக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ள இடத்திலேயே இச்சீரிய பண்புகள் வாழ்கின்றன. இப் பண்புகள் வாழுகின்ற இடங்களிலேயே மகிழ்ச்சியும், அமைதியும் பிரவாகிக்கின்றன. மாறாக பொய்ம்மையும், புரளியும், புரட்டும் மனிதர்களிடையே காணும்போது, அத்தகையோர் அங்கம் வகிக்கும் சமூகத்திலோ, குடும்பத்திலோ மனித உறவுகள் பலவீனப்பட்டு விடுவதால், ஆங்கு மகிழ்ச்சியோ, சாந்தி சமாதானமோ காண்பது அரிதாகி விடுகின்றது. உண்மையாளர்கள் உலகத்திலுள்ளவர்களின் உள்ளங்களில் நீங்காத இடம்பெற்று விடுகின்றனர். யாவரினதும் அன்புக்கும் நட்புக்கும் உரித்தாகி விடுகின்றனர். ஆனால் பொய்ம்மையாளர்கள் அனைவரினதும் வெறுப்புக்கும் வேதனைக்கும் இலக்காகி விடுகின்றனர். அவர்கள் துன்பப்படும்போது அவர்களுக்காகச் சிறிதளவேனும் அனுதாபம் காட்ட ஒருவர்கூடக் கிடைக்காது போய்விடுகின்றது.

"உண்மை வெல்லும், பொய் தோற்கும்" என்ற விடயம் எல்லோர்க்கும் தெரிந்ததுதான். "பொய் சொன்ன வாய்க்குப் போசனம் கிடையாது" என்ற முதுமொழியும் யாவர்க்கும் மனப்பாடம்தான். "உண்மையின் உயர்வு, வாய்மையின் வெற்றி" பற்றி மேடைகளில் மணிக்கணக்கில் பேச வல்லார் பலர் உள்ளனர்.. ஆயினும் நடைமுறை வாழ்க்கையில் உண்மை பேசுவதற்குப் பயப்படும் நிலையைத்தான் மனிதர்களிடையே காண்கின்றோம். உண்மையைப் பேச, செயலில் காட்ட ஏன் அஞ்ச வேண்டும்? ஏன் தயங்க வேண்டும்? உண்மையைச் சொன்னால் கேட்பவர்களுக்கு ஏன் உடம்பெல்லாம் நோகவேண்டும்? இது புரியாத புதிராக தோன்றினாலும், சிறிது அவதானத்துடன் ஆராயின் ஓரளவு உண்மையே புலப்படும்..

சிலர் பொய்யையே பேசிப் பேசிப் பழக்கப்பட்டு விட்டதால், பொய்பேசும் பழக்கம் அவர்களுக்கு வழக்கமாகிவிட்டது. மீளுவது சிரமம்தான். என்றாலும், சிரத்தையெடுத்தால் மீண்டு விடலாம். தண்டனைக்குப் பயந்து பொய் சொல்பவர்களே மிகப் பலராக உள்ளனர். சிறுவர்களிடையே மட்டுமல்ல, வளர்ந்த பெரியவர்களிடமும் இந்நிலை காணப்படுகிறது. குற்றத்தையோ, தவறான நடத்தையையோ மறைப்பதற்குப் பிள்ளைகளை பெற்றோரின் கோபத்திற்கோ, தண்டனைக்கோ உள்ளாகாமல் தப்பித்துக் கொள்கின்றனர். பிள்ளைகள் உண்மையைச் சொல்லிக் குற்றத்தை ஒப்புக்கொள்ளும் பட்சத்தில் அநேகமான பெற்றோர் அதற்குரிய தண்டனையை வழங்கி விடுகின்றனர். உண்மை பேசித் தண்டனை பெறுவதிலும், பொய் பேசித் தப்பித்துக்கொள்ளப் பார்க்கிறார்கள் பிள்ளைகள். எனவே பெற்றோர்கள் இதுவிடயத்தில் கவனம் செலுத்தி, உண்மை கூறித் தவறுகளை ஏற்றுக்கொள்ளும் பிள்ளைகளை மன்னித்து, நல்ல புத்திமதிகள் கூறி, அவர்களைத் திருத்துவதே மேலான செயல். உண்மை பேசினால் தண்டனை கிடைக்காது என்ற உறுதியை ஏற்படுத்த வேண்டும். அதேவேளை பெரியவர்களும் உண்மைபேசி, நேர்மையாக வாழும்போதுதான் மற்றையோரைத் திருத்தும் உரிமை உண்டு என்பதையும் உணர்ந்துகொள்ள வேண்டும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ச்சி...

# ஸ்ரீ ரமண நினைவலைகள்

## 6. மனங்கவர் ரமணன்

பகவானால் ஆமோதித்து அனுமதிக்கப்பெற்ற ரமணாஷ்டோத்திரத்தை உலகெங்கும் உள்ள ரமண சத்சங்கங்களில் பூஜையில் ஓதுவதை நினைக்கும்போது எனக்கு ஒரு சமயம் விசுவநாதசுவாமி தெரிவித்த விஷயம் ஞாபகம் வருகிறது:



"என் (விஸ்வநாத சுவாமியின்) தாயாருக்குத் தமிழிலும் சமஸ்கிருதத்திலும் நல்ல பாண்டித்தியம் இருந்தது. பகவானின் தீவிர பக்தையான அவரிடம் ஒரு மிகச் சிறிய நோட்டுப்புத்தகம் இருந்தது. அதை அவர் தினம் ஆராதித்து வந்தவுடன், யாரையும் அதைத் தொடக்கூட விடமாட்டார். அவர் காலத்திற்குப் பின்தான் அது எப்பேர்ப்பட்ட அரிய பொக்கிஷம் என்பதை அறிந்தோம். பகவான்மீது நான் எழுதியிருந்த அஷ்டோத்திரத்தைத் தானே தைத்த அந்த மிகச்சிறிய நோட்டுப் புத்தகத்தில், அழகிய சின்னச் சின்ன கிரந்த எழுத்துக்களில் எழுதி, அட்டையில் "ரமண அஷ்டோத்ர சத நாமஸ்துதி" என்று குறிப்பிட்டு தன் தங்கக் கையினால் பகவான் என் அம்மாவுக்கு அளித்திருந்தார். அந்த அரிய ரத்தினத்தை என் தாய் யாருடனும் பகிர்ந்து கொள்ள விரும்பாதது இயற்கைதானே!

நான் பகவான்மீது சில நாமாவளிகள் இயற்றி அவ்வப்போது பகவானிடம் சமர்ப்பிப்பது உண்டு. அதை பகவான், "நம்ம விஸ்வநாதன் என்மீது அஷ்டோத்திரம் எழுதுகிறான்" என்று நாயனாவிடம் (காவ்ய கண்ட கணபதி முனிவரிடம்) காண்பிப்பார். இதேபோல் இதுபோன்ற ஒவ்வொரு தாளையும், ஆங்காங்கே திருத்தங்கள் செய்து, பகவானிடமே திருப்பித் தருவார் நாயனா. இந்த விதம், அஷ்டோத்திர நாமம் முழுவதும் எழுதப்பெற்று, அது என் ஆசான் நாயனாவினாலும், பிரபு பகவானாலும் அங்கீகரிக்கப் பெற்றது. பகவானின் 108 நாமங்களை எழுத வேண்டுமென்ற என் நெடுநாளைய ஆவலும் பூர்த்தியடைந்தது!"

"ஒரு சமயம் அடியார் ஒருவர் பகவானிடம், தான் பாராயணம் செய்வதற்கேற்ற ஒரு ஸ்தோத்திரம் அருளும்படி வேண்ட, பகவான் இந்த ரமண அஷ்டோத்திரத்தை சிபாரிசு செய்தது. தெலுங்கில் பகவானின் சரிதையை எழுத விரும்பிய ஒருவரிடம், ரமண அஷ்டோத்திரத்தின் ஒவ்வொரு நாமத்தையும் விரிவாக்கினாலே, சரிதமாகிவிடும் என்றார். இதிலிருந்தே அஷ்டோத்திரத்தின் முக்கியத்துவத்தை தெரிந்து கொள்ளலாம் என்றார் விசுவநாத சுவாமி.

பழிக்குப்பழி வாங்குவது கொடிய செயல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரபாகரன் ஒரு கடும் பகுத்தறிவுவாதி. ஆன்மீக விஷயங்களுக்கும் அவருக்கும் வெகுதூரம். அவர் பகவானைப் பற்றிக் கேள்விப்பட்டிருந்தார். புகைப்படங்களையும் பார்த்திருந்தார். ஆயினும் அவருக்கு பகவானிடம் பக்தியேதும் ஏற்படவில்லை. அவரை அடியோடு மாற்றிய சம்பவம் ஒன்று விரைவிலேயே நிகழ்ந்தது.

ஒருநாள் இரவு பிரபாகரனுடைய கனவில் அவருடைய மேலதிகாரியுடன் பகவான் தோன்றினார். மேலதிகாரி "இது யார் தெரியுமா" என்று பகவானைச் சுட்டிக்காட்டிக் கேட்டார். இவர் தெரியாது என்றதும் இதுதான் ஸ்ரீ ரமண மகரிஷி. நீ திருவண்ணாமலைக்குப்போய் அவரைத் தரிசித்துவிட்டு வா" என்றார். தனக்கு அது தேவையில்லை, தன்னிடம் பணமும் இல்லை என்று பிரபாகர் கூற, பணம் தான் தருவதாகவும் எவ்வளவு தேவைப்படும் என்றும் கேட்டார் மேலதிகாரி. சுமார் அறுபது ரூபாய் தேவைப்படும் என்று பிரபாகர் விடைதர, கனவு கலைந்து விழித்துக் கொண்டார்.

அவர் அலுவலகத்தில் இக்கனவைப் பற்றி, மேலதிகாரியிடம் தெரிவிக்கத் தயங்கினார். ஆனால் சில நெருங்கிய நண்பர்களிடம் தான் கண்ட கனவைத் தெரிவித்தார். அவர்கள் தூண்டுதலின் பேரில் ஒருநாள் மேலதிகாரியிடம் தான் கண்ட கனவைப்பற்றி விபரமாக எடுத்துரைத்தார். மேலதிகாரியோ அதைச் சற்றும் நம்பாமல் அலட்சியமாக, "போய் வேலையைக் கவனி. நன்றாக வேலை செய்து. பணம் சேர்த்து பின் பகவானிடம் போகலாம்" என்று சற்று கடுமையாகச் சொல்லிவிட்டார். மறுகணமே மனம் மாறி, "உனக்கே பகவானைப் பார்க்க ஆர்வம் இருக்கிறதா" என்று கேட்டார். "ஆம்" என்று பிரபாகர் சொன்னதும், எவ்வளவு பணம் தேவைப்படும் என்று கேட்டார். ஆனால் பிரபாகர் பதில் கூறுமுன்பே ரூபாய் அறுபதுக்கு காசோலை எழுதிக்கொடுத்து விட்டார். கனவில் கேட்ட அதே தொகை! இது பகவான் செயல் என்று துல்லியமாகத் தெரிந்துவிட்டது. பிரபாகரனின் அருணாசலப் பயணம் தொடங்கியது. இவையெல்லா நடப்புகளையும்விட ஆச்சரியம் என்னவென்றால், ரமணாச்ரமத்தை அடைந்து ஹாலில் நுழைந்ததும் பகவான் யாருடைய வருகைக்காகவோ கூர்ந்து நோக்கியவாறிருந்ததை பிரபாகர் கண்டார். இவர் ஹாலுக்குள் நுழைந்தவுடன் பகவான் மலர்ந்த புன்முறுவலுடன் தலையசைப்பதைக் கண்டவுடன் பிரபாகருக்கு மெய்சிலிர்த்தது. தன் வாழ்விலேயே முதன்முதலாக தரையில் விழுந்து சாஷ்டாங்க நமஸ்காரம் செய்தார். ஒரே பார்வையில் பரம பக்தரானார். (கல்மனத்தை, மென்மனமாக்கும் ரசவாதம் என்பது இதுதானோ!)

பிரபாகர் பகவானிடம், "என்னை அழைத்தீர்களா?" என்று மூன்று வெவ்வேறு சமயங்களில் கேட்டிருக்கிறார். மூன்று முறையும் பகவானிடமிருந்து "ஆம்" என்ற உறுதியான விடை கிடைக்கவே, அவருக்கு ஏற்பட்ட அசைக்க முடியாத ஆத்ம பந்தம் மேலும் உறுதிப்பட்டது.

பிரபாகர் ஆச்ரமத்தில் தங்கியிருந்த சமயங்களில், அவர் கேட்ட கேள்விகள் அனைத்துக்கும் பகவான் விடையளித்தார். ஒருமுறை பகவான் பிரபாகரை நோக்கி பின்வருமாறு கூறலானார்: நீ உன்னைப் பிரபாகர் என்று கூறிக்கொள்கிறாய். ஆயின் இந்தப் பிரபாகர் என்பது யார்? ஏன் நீ (இந்த உடல்தான்) பிரபாகர் என்று நினைக்கிறாய்? உன் பெற்றோர் உன்னைப் பிரபாகர் என்று அழைத்தார்கள். நீ பகுத்தறிவுவாதியாக இருந்தும் ஏன் அதை ஒப்புக் கொள்கிறாய்? இந்தப் பிரபாகர் என்பது யார்? உன்னுடைய பகுத்தறிவைக் கொண்டு உண்மையிலேயே நீ யார் என்பதை அறிய முயற்சி செய். அப்பொழுது நாம ரூபங்களோடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடிய இந்தப் பிரபாகர் மறைந்து உன்னுடைய உண்மையான சொரூபம் ஜொலிக்கும். இவ்வுலக துன்பங்களை எல்லாம் அனுபவிப்பவன் நான் என்ற தவறான எண்ணம், அக்கணமே அழிந்துவிடும்."

பகவான்மீது வைத்த ஆழ்ந்த பக்தியினாலும், அன்பினாலும், வாழ்க்கையில் தடைகள் பல வந்தபோதிலும் பிரபாகர் அவைகளையெல்லாம் கடந்து வாழ்க்கையில் அமைதியைக் கண்டார்.

பிரபாகர் வடமொழியில் அத்தனை புலமை பெற்றவர் இல்லையாயினும், பகவான்மீது தான் சரணடைந்த விதத்தை நூறு பாக்கள் அடங்கிய "பிரபத்தி சதகம்" என்ற பாமாலையாக எழுதினார். இந்நூலிலுள்ள பிழைகளை, பகவான் தன் திருக்கரங்களால் திருத்தியபின், ஆச்ரம ஆவண காப்பகத்தில் சேர்த்துவிட்டார்.

இந்நூலின் ஆரம்பமே மனதை உருக்கக்கூடிய வகையில் அமைந்திருக்கிறது:- "ஓ பகவான்! என் பக்தி பரிபூரணமுறுவதற்கு என் பகுத்தறிவின் திறமையோ, ஆன்மீக முதிர்ச்சியோ, வேறெதுவுமே காரணமல்ல, என்மீது அளவற்றுப் பொழியும் உன் பேரருள் ஒளியே காரணம்.".

(தொடரும்...

## சமயமும் விஞ்ஞானமும்

சமயத்திற்கும் விஞ்ஞானத்திற்கும் இடையே ஒருவித தகராறு காணப்படுகிறது என்றொரு பரவலான நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. ஆனால் இது உண்மையன்று. ஒருவேளை மென்மனதுடைய சமயவாதிகளுக்கும், கடினமதி படைத்த விஞ்ஞானிகளுக்குமிடையே முரண்பாடு காணப்படலாம். ஆனால் உண்மையில் அது விஞ்ஞானத்திற்கும், சமயத்திற்குமிடையிலானதல்ல. இவ்விருவரதும் உலகங்கள் வெவ்வேறானவை. அவர்களது வழிமுறைகள் கூட வேறானவையே. விஞ்ஞானம் ஆராய்ச்சி செய்கிறது. அறிவினைக் கொடுக்கிறது. அது ஆற்றலுடையதாகும். சமயமோ மனிதனுக்கு விவேகத்தைக் கொடுக்கிறது. இது கட்டுப்பாடானதாகும். விஞ்ஞானம் பிரதானமாக ஆதாரங்களைக் கொண்டது. சமயமோவெனில் பெறுமதி மிக்கவற்றுடன் கூடியது. இவ்விரண்டும் எதிரெதிரானவையல்ல. அவை ஒன்றையொன்று மிகை நிரப்புவனவாகும்.

விஞ்ஞானமானது சமயத்தினை மதியீனம், தெளிவின்மை ஆகியவற்றின் பள்ளத்தில் வீழ்ந்துவிடாமல் பிடித்து வைத்திருக்கிறது. சமயமோ விஞ்ஞானத்தினை வழக்கத்தில் இல்லாததான பொருள்முதல் வாதம், சூனியவாதமென்ற சேறுகளில் வீழ்ந்துவிடாமல் தடுத்து வைத்திருக்கிறது.

-மாட்டின் லூதர் கிங்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதர்மம் அழிந்து தர்மம் தளைக்கட்டும்

செல்வி S. ஜடா அவர்கள்

இந்து சமயத்தவர்களால் கொண்டாடப்படும் பண்டிகைகளுள் மிகவும் முக்கியமானது தீபாவளி ஆகும். இந்து சமயத்தில் விரதங்களும் பண்டிகைகளும் நிறைந்து காணப்படுகின்றன. மனிதனிடம் இருக்கின்ற மிருக இயல்புகள் தணிவதற்கும், தெய்வீக இயல்புகள் சிறப்படைவதற்கும் விரதங்கள் துணையாக இருக்கின்றன. மனம் பொறிவழிப் போகாது நிற்றற் பொருட்டு உணவை விடுத்தேனும் சுருக்கியேனும் மனம், வாக்கு, காயம் ஆகிய திரிகரணங்களாலும் இறைவனை மெய்யன்போடு வழிபட்டு வருதலே விரதமாகும் என நாவலர் பெருமான் விரதத்திற்கு வரைவிலக்கணம் தந்துள்ளார். மனம் பொறிவழி போகாது நிற்றலைக் கருத்தில் கொள்ளாது விரதம் அனுஷ்டிப்பது உடம்பினை வெறுமனே பட்டினி போடுவதாக அமைந்துவிடும். விரதம் என்பது ஒருவகைத் தவம் ஆகும். விரதத்தை தவமாக அனுஷ்டிப்பவர்களுக்கு விரதத்தின் பயன் உடனே கிடைக்கும்.

மனிதன் ஒரு சமூகப் பிராணி. தான் வாழும் சமூகத்தோடு இணைந்து வாழ்பவனே முழு மனிதன் ஆகின்றான். குடும்பத்தில் மகிழ்ச்சியையும் சமூகத்தில் ஒருங்கிணைப்பையும் ஏற்படுத்தக்கூடிய பண்டிகைகளில் தீபாவளியும் ஒன்றாகும். அதர்மமும் அநியாயமும் இந்த மண்ணில் என்றும் நிலைப்பதில்லை. இறைவன் சிலருக்கு சில சிறப்பம்சங்களைக் கொடுத்துப் பார்ப்பதுண்டு. உலகியலில் சில சிறப்புக்களையும் ஆற்றல்களையும் பெற்றவர்களில் சிலர்



தான்தோன்றித்தனமாக நடந்து இறைவனால் தமக்கு அளிக்கப்பட்ட செல்வங்கள் அனைத்தையும் இழந்து விடுவார்கள். அத்ர்மமே வடிவெடுத்தவர்கள் என்றோ ஒரு நாள் இறைவனால் அழிக்கப்படுவார்கள் என்ற உண்மையை புராணக் கதைகள் மூலம் சமயம் எடுத்து விளக்குகின்றது. விநாயகப்பெருமான் கஜமுகாசுரனை அழித்தமை போன்ற நிகழ்வுகள் இதற்கு நல்ல உதாரணங்களாக காணப்படுகின்றன. இவ்வாறு காத்தல் கடவுளாகிய விஷ்ணு பகவான் கொடிய அசுரனாகிய நரகாசுரனை வதம் செய்த நாளே தீபாவளிப் பண்டிகை எனப் புராணங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறுகின்றன. காமம், குரோதம், லோபம், மோகம், மதம் ஆகிய அகப் பகைகளை நீக்கி ஞானத்தைப் பெற முயலும் நன்நாளே தீபாவளித் திருநாள் ஆகும். மனம் அடங்கினால் முத்தியையும், சினம் அடங்கினால் சித்தியையும் பெற்று விடலாம் என்பது சித்த புருஷர்களின் கருத்து ஆகும். தெய்வம் வீற்றிருந்து திருவருள் புரிய வேண்டிய மனத்தினை பேய் பிசாசுகள் குடியிருந்து அல்லல் படுத்தும் இடமாக நாம் மாற்றக்கூடாது. பொய், கயமை, சினம், சோம்பல், கவலை, மயக்கம், வீண்புழுக்கம், அச்சம் என்னும் அட்டமத்துப் பிசாசுகளையும் அகற்றுவதற்கு ஞானம் என்கிற நாள் நமக்கு தேவை என்றே மகாகவி பாரதியும் கூறுகின்றார்.

சூரியனுடைய ஒளி புறவிருளாகிய பூத இருளை நீக்குகின்றது. அக இருளாகிய அஞ்ஞானத்தை அகற்றுவதற்கு அகத்தில் ஞான ஒளி தோன்றவேண்டும். தீபங்களை வரிசையாக ஏற்றி இறைவனைத் தீப ஒளியின் ஊடாக வழிபடும் தெய்வத் திருநாளே தீபாவளிப்பண்டிகை ஆகும். இல்லங்கள் ஆலயங்கள் எல்லாம் தீப ஒளித் திருநாளில் தீபங்களால் பிரகாசிக்கும்.

நல்லதொரு குடும்பம் இறைவன் வீற்றிருக்கும் கோயிலாகக் காணப்படும். குடும்ப அங்கத்தவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து மகிழ்ச்சியாக கொண்டாடப்படும் பண்டிகையே தீபாவளித் திருநாளாகும். புத்தாடை உடுத்து தெய்வ வழிபாடு செய்து உறவுகளுடன் இணைந்து அறுசுவை உணவுகளையும் உண்டு இன்பமாக இருக்கும் நன்நாள் தீபத்திருநாளாகும்.

அண்ட சராசரம் எல்லாம் வியாபித்திருக்கும் பரம்பொருளாகிய இறைவனை இந்த பிண்டமாகிய உடம்பிலே ஞானிகள் கண்டார்கள்.

“உடம்பினை முன்னம் இழுக்கென்றிருந்தேன்
உடம்பினுக்குள்ளே உறுபொருள் கண்டேன்
உடம்புள்ளே உத்தமன் கோயில் கொண்டான் என்று
உடம்பினை யானிருந்து ஓம்புகின்றேனே”

எல்லோருடைய உள்ளத்திலும் இறைவன் ஞான தீபமாக வீற்றிருக்கின்றான் ஆனால் அஞ்ஞானத்தினால் அந்த ஞான தீபம் மறைக்கப்பட்டிருக்கின்றது என்றே பகவத் கீதை குறிப்பிடுகின்றது. அந்த அஞ்ஞானத்தை இறையருளின் துணையினால் தான் அகற்ற முடியும். அதற்காக இறைவனது திருவருளைப் பிரார்த்திக்க வேண்டும். தீபாவளித் திருநாளன்று ஏற்றப்படும் திருவிளக்கு மெஞ்ஞான ஒளியை வேண்டி மேற்கொள்ளப்படும் அத்தகைய ஒரு வழிபாடே ஆகும். தீபாவளியன்று நல்லெண்ணெய் தேய்த்து வெந்நீரில் நீராடுவது சம்பிரதாயம் ஆகும். எள்எண்ணெயில் லட்சுமியும் நீரிலே கங்கையும் வருவது ஐதீகம் ஆகும். (“தைலே லக்ஸ்மி” “ஜலேகங்கா”) எண்ணெய் தேய்த்து நீராடுவதால் வறுமை தொலைந்து செல்வம் பெருகும். உலகிலே வாழும் மக்கள் பிறந்த நாளையே கொண்டாடி மகிழ்வார்கள். ஆனால் இறந்த ஒருவருடைய திருநாளைப் பண்டிகையாகக் கொண்டாடுவது தீபாவளித் திருநாளின் சிறப்பும் ஆகும்.

வங்காளிகள் இந் நாளைக் “காளி பூஜை” திருநாளாகக் கொண்டாடுகிறார்கள். வட இந்தியாவிலும் கிழக்கு ஆசியாவிலும் “குபேர பூஜை” நாளாகத் தீபாவளி கொண்டாடப்படுகின்றது. ஸ்ரீராமன் வனவாசம் முடிந்து தீபாவளித் திருநாளில்தான் அயோத்தி நகரம் திரும்பினார் எனக் கூறப்படுகிறது. இவரை வரவேற்பதற்கு அயோத்தி நகர் முழுவதையும் விளக்குகளால் அலங்கரித்தவர்கள் எனவும் அத்திருநாளே தீப ஆவலி (தீபாவளி) தீபத் திருநாளாக மலர்ந்தது என்றும் கூறுகின்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகாபலிச் சக்கரவர்த்தி முடிசூடிக்கொண்ட நாளும் தீபாவளித் திருநாளே ஆகும். மகாவீரர் பரிநிர்வாணம் அடைந்ததும், சீக்கியமத ஸ்தாபகர் குருநானக், ஆரிய சமாஜ இயக்கத் தலைவரான சுவாமி தயானந்த சரஸ்வதி முதலியோர் வீடுபேறு அடைந்ததும் இத் திருநாளிலேயே ஆகும்.

ஆதிசங்கரர் ஞானபீடங்களைத் தீபாவளித் திருநாளிலே தான் தோற்றுவித்தார் என்றும் கூறப்படுகின்றது. தீபாவளித் திருநாளில் ஏற்றப்படும் தீபமே காலதேவனான யமனுக்கு உவப்பானது. ஆதலால் இதனை "யமதீபம்" என்று வாமன புராணம் கூறுகின்றது.

இத்தீபாவளித் திருநாளில் உலகைச் சூழ்ந்துள்ள பகை, கோபம், பேராசை போன்ற இருண்ட எண்ணங்கள் அகலவும் நட்பு, அன்பு, சாந்தம், பரோபகாரச் சிந்தனை முதலிய நற்குணங்கள் ஒளிரவும் தீபம் ஏற்றுவோம். அஞ்ஞானம் நீங்க ஞானதீபம் ஏற்றுவோம். அத்தீப ஒளியில் அமைதி பிறக்கட்டும். அன்பு பெருகட்டும், மகிழ்ச்சி மலரட்டும். இந்த ஒளித் திருநாளில் உலகத்தை எல்லாம் தனது அருள் நிழலில் காப்பாற்றி அருளவேண்டும் என்று அனைவரும் எல்லாம் வல்ல பரம்பொருளின் பாதங்களைப் பணிவோமாக.

# நல் வாழ்வுதரும் சந்நிதியான்

நற்றமிழ் உரைத்திடும் தொண்டைமானாற்றான்
அடியவர் நோய் தீர்க்கும் இனிய மருந்தாய்
நற்றவ ஆற்றின் கண்ணிடை நீராட
கணமே பிணி தீர்ந்து ஓடிவிட
பற்பல அடியவர் பசிப்பிணி போக்கிட
சந்நிதி ஆச்சிரமம் செல்லப் பறந்திடுமே
நற்றமிழ் அறிவுப் பசியைப் போக்க
இனிய விருந்தாம் ஞானச்சுடர்

வெள்ளிதோறும் சந்நிதியான் ஆச்சிரமத்தில்
காதுக்கு இனிய தமிழ் விருந்து
பள்ளிச் சிறாரின் பஞ்சமதில் கல்விக்கு
இனிய ஊக்குவிப்பு நல்வழிப் படுத்தலும்
உள்ளம் வெகுண்டு திரியும் மானிடர்க்கு
மனநிறை வுக்கோர் பெரும் சந்நிதி
வெள்ளை உள்ளம் படைத்த ஆச்சிரம
சுவாமியை இறை பணிக்குப் படைத்தமை



மனோஜ்குமார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனிப்பெருந் தமிழ்த்தெய்வம் முருகப்பெருமான் என்பதற்கான இலக்கிய வரலாற்றுச் சான்றாதாரங்கள்

(தொடர்ச்சி...



திரு கனகசபாபதி நாகேஸ்வரன் அவர்கள்

## 1.6 திருமுருகாற்றுப்படையும் திருப்பரங்குன்ற வரலாறும்:

திருமுருகாற்றுப்படை மட்டுமன்றி, பன்னிரு பிறநூல்களையும் நக்கீரதேவ நாயனார் இயற்றினார். கைலை பாதி, காளத்தி பாதி அந்தாதி, இறையனாராகப் பொருளுரை, திருவீங்கோய்மலை எழுபது, திருவலஞ்சுழி மும்மணிக்கோவை, திருவெழுகூற்றிருக்கை, பெருந்தேவபாணி, கோப்பிரசாதம், காரெட்டு போற்றிக் கலிவெண்பா, திருக்கண்ணப்பதேவர் திருமறம், நாலடி நாற்பது, களவியலுரை என்பனவாம்.

திருப்பரங்குன்றம் பற்றிப் பலரறியாத செய்திகள் வருமாறு: "பராசரர் புத்திரர்களை ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிகள் காத்தருளிய ஸ்தலம் திருப்பரங்குன்றம். தவிர, அவர் சூரபன்மன் முதலிய அசுரர்களைக் கொன்று, இந்திராதி தேவர்கள் சிறைமீட்டு, அவர்களைத் தேவலோகத்துக்கு அனுப்பிய காலத்தில், தேவேந்திரன் இவரது பராக்கிரமத்துக்கு மகிழ்ந்து தன் புத்திரியாகிய தெய்வயானை அம்மையாரை அவருக்கு பாணிக்கிரஹணம் செய்து கொடுத்த ஸ்தலம் இதுவாகும். "முருகா முருகா" என்று அல்லும் பகலும் சொல்லிவரும் ஒரு பெண்ணின் கணவன், அந்நாமத்தை விடுத்துத் தன் பெயர் கூறப் பலமுறை சொல்லியும் அவள் கேளாமல் "முருகா" என்று மீண்டும் சொல்லி வந்ததற்காக அப்பெண்ணினது கைவிரலைச் சேதிக்க, அந்த விரலானது முருகப்பெருமானது திருவருளால் முன்போல் வளரப்பெற்ற அற்புதச் செயல் நிகழ்ந்த மகிமை வாய்ந்த தலம் இதுவே. தவிர, நக்கீரர் உட்பட ஆயிரம் முனிவர்களைப் பூதமானது குகையில் அடைத்து வைத்தது திருப்பரங்குன்றத்து மலைக்குகையிலென்று சொல்லுகின்றார்கள். அதற்கு அநுகூலமாக இந்த ஷேத்திரத்தில் பங்குனி மாதத்தில் நடக்கும் பிரம்மோற்சவம் நான்காம் திருவிழாத் தினத்தன்று நக்கீரரைச் சிறைமீட்ட உற்சவம், வெகு விமரிசையாய்ப் பிரதி வருஷமும் நடைபெறுவதைப் பிரத்தியஷமாகப் பார்க்கலாம். இதுவன்றி, இத்திருப்பரங்குன்றத்து மலையுச்சியில் ஒரு பெரிய கற்பாறையின் கீழுள்ள ஒரு குகையில், நக்கீரர் உட்பட ஆயிரவர்களை அடைத்து வைத்திருந்ததாகவும், அதை முருகப்பெருமான் தன் வேலாயுதத்தால் பிளந்து, அம்முனிவர்களை வெளியாக்கியதாகவும் சொல்லுவதற்கியைய அப்பாறை இருகூறாகப் பிளந்திருக்க நாளைக்கும் பார்க்கலாம். இந்த மலையை மகம்மதியர்கள் "சிக்கந்தர் மலை"யென்று சொல்லுகிறார்கள். இந்த மலையிலுள்ள- மூலஸ்தானத்திலுள்ள மூர்த்தி விக்கிரகம் மற்றத் தலங்களைப்போலல்லாமல் மலையிலே குடைந்து உருவமைக்கப்பட்டிருக்கிறது. இது பிருதுவி மயமென்று கூறுவதால், தீர்த்தத்தினாலும் மற்றைய திரவியங்களினாலும் அபிஷேகம் செய்வதில்லை. வருஷத்துக்கு இருமுறை மட்டும் புனுகுச் சட்டம் சேர்ந்த வாசனைக் குளம்பினால் அபிஷேகம் செய்கிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த ஸ்தல மூர்த்திக்கு கந்தன் என்று பெயர். நக்கீரர் மதுரை வாசியாயுள்ள கணக்காய நாயனார் புதல்வராதலால், தான் ஜெனித்த மதுரை ஷேத்திரத்தைப் புகழ்ந்து, அதற்கடுத்தது திருப்பரங்குன்றம் என்பதை இப்படைவீட்டில் சொல்லியிருக்கிறார் என்பார்கள்.

"நக்கீரர் திருவுருவத்தைத் திருப்பரங்குன்றத்தில் முருகக் கடவுளின் பக்கத்திலே இன்றும் பார்க்கலாம். மதுரையிலும் நக்கீரருக்கு ஒரு கோவில் உண்டு. அது பல்கத்தர் கோயில் என்று சொல்லப்படுகிறது என்பர். (பி.ஞீ)(ப.33) ( திருமுருகாற்றுப்படைமூலமும் பரிமேலழகர் உரையும், கோ. வடிவேலு செட்டியாரவர்களால் பரிசோதிக்கப்பெற்றது, ஸ்ரீ சாது இரத்தின சற்குரு புத்தகசாலை, சென்னை பக். 33-34)

## 1.7: விஜயநகரப் பேரரசு காலச் சைவாதீனங்கள்:

சைவ சமய வளர்ச்சியில் அடியார்கள், அரசர்களின் பங்களிப்புக்குப் பின்பு சைவத் திருமடங்களின் பங்கு கணிசமானதாக அமைந்தது. விஜய நகர நாயக்கர் காலத்திலே இஸ்லாமியரின் ஆதிக்கத்தால் சமய உணர்வு குன்றியநிலையில் சைவாதீனங்கள் பல்கிப் பெருகிச் சைவ சமயத்தைக் கண்ணுங் கருத்துமாகக் காத்தன. அக்காலத்தில் தோன்றிய சைவாதீனங்களில் திருவாவடுதுறை ஆதீனமும், தருமபுர ஆதீனமும் பெரிய ஆதீனங்களாகும். இவற்றில் முதலில் தோன்றிய திருவாவடுதுறை ஆதீனம் புலமையால் சிறந்தது. அடுத்துத் தோன்றிய தருமபுர ஆதீனம் தவத்தாற் சிறந்தது என்பர். இவ்வாறு சைவ சமயத்தின் உயர்வையும், பெரு மதிப்பையும் சைவ உலகறியச் செய்த பெருமை இந்தச் சைவாதீனங்களையே சாரும்.

நாயக்கர் கால ஆதீனங்கள் சைவத்தையும் அதன் தத்துவமான சைவசித்தாந்தத்தையும், தமிழையும் பேணிப் பாதுகாக்கும் காப்பரண்களாக விளங்கின. அந்நியர்களின் ஆதிக்கத்தால் சிதைவடைந்த ஆலயங்களைப் புனரமைத்துக் குடமுழுக்குக் கிரியைகள் செய்வதில் ஆதீனங்கள் மும்முரமாக இயங்கின. ஆலய வழிபாடுகளைப் பேணவும், சொத்துக்களைப் பாதுகாக்கவும், அர்ப்பணிப்புடன் செயற்பட்டன. மடாதிபதிகள், புலவர்கள், ஓதுவார்கள் எனப்பலர் சித்தாந்த, பிரபந்த, தலபுராண நூல்கள் பலவற்றை இயற்றினர். சித்தாந்த சாஸ்திர நூல்கள் பலவற்றுக்கு விளக்கவுரை செய்தனர். இதனால் சைவ சித்தாந்தம் இக்காலத்தில் - நாயக்க மன்னர்களது காலத்தில் விரிவுநிலை எய்தியது. ஆதீனங்கள் பழைய நூல்களைக் காத்தல், புதிய நூல்களைப் படைத்தல், சைவப்புலவர்களை பண்ணிசை வல்லார்களான ஓதுவார்களைக் கௌரவித்தல் போன்ற தொண்டுகளையும் புரிந்து இக்காலத்தில் ஏற்பட்ட சைவசமய கடவுள் வழிபாட்டு வளர்ச்சிக்கு உறுதுணையாகி விளங்கின.

கிருஷ்ண தேவராயர் வைணவ சமயத்தைப் பின்பற்றினாலும் அவர் சைவ சமயத்தை ஆதரிக்காமல் இல்லை. சோழ நாட்டுச் சிவன் கோயில்களுக்குப் பல கொடைகளும், திருப்பணிகளும் புரிந்தார் எனச் சாசனம் சொல்லுகிறது. கி.பி 1517இல் சிதம்பரக் கோயிலின் வடக்குக் கோபுரத்தைக் கட்டியதோடு பொற்காசுகளும் நன்கொடையாக அளித்தார். அவருடை அரசவையில் திம்மண்ணர் தூர்ஜதி மல்லண்ணா போன்றவர்கள் சைவப் பிரதானிகளாக இருந்தார். அவரது அரசவையை அணி செய்த ஹரிதாஷர் என்பவர் வைணவப் புலவராக இருந்தாலும் சைவம், வைணவம் ஆகிய இரு சமயநெறிகளை விளக்கும், "இரு சமய விளக்கம்" என்ற நூலை இயற்றினார் என அறியமுடிகின்றது.

(தொடரும்...




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவராத்திரி வழிபாட்டில் சக்தி தத்துவம்

திரு காரை எம்.பி. அருளானந்தன் அவர்கள்

நவராத்திரி காலம் பெண்களின் சக்தியை, பெண்களின் பெருமையை, பெண்களின் திறமையை, பெண்களின் வழிபாட்டுத்தன்மையை அடையாளம் காட்டும் காலமாகும் அகிலாண்டகோடி பிரம்மாண்ட நாயகியாய் சச்சிதானந்த சொரூபியாய் எதற்கும் உள்ளிருப்பவளாய் எல்லாவற்றிற்கும் அப்பாற்பட்டவளாய் விளங்கு பவளே அம்பிகை. புரட்டாதி மாதம் அஷ்டமித் திதியில் துர்க்கனை அழித்தாள் எனவே இவள் துர்க்கை, சடைமுண்டனை சம்ஹாரம் செய்தாள் எனவே இவள் சாமுண்டி, குரு என்ற அசுரனை அழித்ததால் இவள் காள ராத்திரி. இன்னும் மகிஷனை அழித்ததால் மகிசாசுரமர்த்தனி இப்படியே அம்பிகையின் பெயர்கள் ஆயிரம் இருக்கின்றன.



நம்மைப் பெற்றதாய், நமக்கு பால் தந்த பசு, நம்மைத் தாங்கிக் கொண்டிருக்கும் பூமி, நம்மை காப்பாற்றிக் கொண்டிருக்கும் சக்தி, ஆகிய இந்த நான்குமே சக்தியின் தத்துவமாகும். சக்தியும், சிவனும், விஷ்ணுவும் ஒரே பரம சக்தியின் மூன்று ரூப பேதங் கள்தான். அம்பாள் என்ற சக்தி மற்றைய இரண்டு பேரோடும் பிரிக்க முடியாமல் சம்பந் தப்பட்டிருக்கிறாள். ஒருவருக்கு பத்தினி யாகவும், இன்னொருவரிற்கு சகோதரியாகவும் இருக்கிறாள். இந்த மூவரும் ஒரே பரம் பொருளாவார். எல்லாவற்றிற்கும் அடிப்படையாக இருக்கின்ற சத்தியம் சிவம் என்றும் அதுவே பலவாக தெரிவதற்கு காரணமான சக்தி அம்பாள், அல்லது விஷ்ணு என்றும் புரிந்து கொள்ளலாம்.

"நவராத்திரி என்றால் ஒன்பது இரவு" என்பது பொருள் பராசக்தியை பல வடிவங்களாகப் பூசித்து விழா நடாத்தி வருகின்றனர். பெண்களுக்காகவே நடாத்தப்படும் விழாவாக நவராத்திரி விழா திகழ்கின்றது.

முதன்மூன்று நாட்களில் பார்வதி தேவியையும் நடுமூன்று நாட்களில் இலட்சுமி தேவியையும் இறுதி மூன்று நாட்களில் சரஸ்வதி தேவியையும் முறையே வழிபட்டு பத்தாம் நாள் விஜயதசமி விழாவை சிறப்பாக கொண்டாடி வருகின்றனர்.

நற்செயல்களையே நாள்தோறும் செய்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவராத்திரி ஒன்பது நாட்களும் தேவி ஊசி முனையில் நின்று தவமியற்றியதால் இந்த நாட்களில் இந்துக்களின் வீடுகளில் ஊசி நூலெடுத்து துணி மணிகளைத் தைப்பதை தவிர்த்து வருகின்றனர்.

மகிஷாசுரன் என்ற அரக்கன் கடுந்தவம் புரிந்து பிரமாவிடமிருந்து தனக்கு தேவர்கள், மனிதர்கள், அசுரர்களால் மரணம் ஏற்படக் கூடாது என்ற வரத்தினைப் பெற்று விட்டான் ஆண்களால் மரணம் ஏற்படக் கூடாது என்று அந்த அரக்கன் வரம் பெற்றமையால் சண்டிதேவியால் அவனுக்கு அழிவு நேரிடுகிறது. தேவியானவள் ஒன்பது நாட்களும் கொலுவிருந்து பத்தாவது நாள் மகிஷாசூரனை வதம் செய்தமையால் தேவி மகிசாசுரமர்த்தனி என அழைக்கப்படுகின்றாள்.

இச்சக்தி இச்சாசக்தி, ஞானாசக்தி, கிரியாசக்தி ஆகிய சக்திகளின் வடிவமாக துர்க்கை, இலட்சுமி, சரஸ்வதி ஆகிய மூன்று தேவிகளையும் நவராத்திரியில் வழிபடுவது இந்து மக்களின் மரபாகும். நவராத்திரி முடிந்து விஜயதசமியன்று ஆலயங்களில் சிறப்பான பூசைகள் நடைபெறும்

இந்நாளில் தான் தேவி அந்திவேளையில் மகிஷாசுரனை அழித்தாள். தீமையை தருமம் வெற்றிகொள்ளும் .இந்நாளில்தான் குழந்தைகளுக்கு வித்தியாரம்பம் செய்வது வழக்கம். ஞானா சக்தியின் தோற்றமாக சரஸ்வதி தேவியின் அருளுக்குப் பாத்திரமாகும் பொருட்டு கல்வி பயிலத் தொடங்குமுன் சரஸ்வதியை வழிபடும் வழக்கம் ஏற்பட்டு வருகின்றது.

இவ்வாறாக மும்மூன்றான ஒன்பது இரவுகளிலும சக்தியின் முக்குணங்களாகிய தாமதம், இராசதம், சாத்வீகம் துலங்கும் வகையிலும், முதன் மூன்று நாளிரவும் வீரச் செயலுக்கேற்ற இச்சா சக்தியாகிய சிவப்பு நிறங்கொண்ட உமை துர்க்கை வடிவாகவும், அடுத்த மூன்றிரவும் இரக்கச்செயலுக்குரிய பச்சை நிறங்கொண்ட கிரியா சக்தி என்னும் திருமகளாகிய இலக்குமி வடிவிலும், மீதி மூன்று நாளிரவும் ஞான சக்தி என்னும் வெண்ணிறங் கொண்ட கலைமகளாகிய சரஸ்வதி வடிவிலும் பாவனை செய்து வழிபாடாற்றுகிறோம். இத்தகு சக்தி வழிபாட்டின் மேன்மையைப் புலப்படுத்துவது நவராத்திரி வழிபாடாகும்

## என்றும் ஒளிர்பவன் நீயே கிருஷ்ணா




காத்து நிற்பவன் நீயே கிருஷ்ணா
கர்வம் அழிப்பவன் நீயே கிருஷ்ணா
ஆத்திரம் கொண்ட அசுரன் உடைய
ஆணவம் அழித்தவன் நீயே கிருஷ்ணா
பாத்திரம் ஏற்றுத் தேரில் பார்த்தன்
பாகனாய்ச் சென்றவன் நீயே கிருஷ்ணா
ஏத்தும் அடியவர் வாழ்வில் ஒளியாய்
என்றும் ஒளிர்பவன் நீயே கிருஷ்ணா

துன்பம் எமக்கொரு மௌன ஆசிரியன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(தொடர்ச்சி...

# பெண் எனும் மகாசக்தி

திரு மூ. சிவலிங்கம் அவர்கள்

## மங்கையற்கரசியார்

பாண்டிய நாட்டு மன்னனான கூன்பாண்டியன் சிவபக்தையான மங்கையர்க்கரசியாருடன் இல்லறம் பேணிச் சிறப்புடன் வாழ்ந்தான். சமண மதத்தினரின் தூண்டுதலால் சமண மதத்தைப் பேணிக் காத்து வந்தான். கணவன் சமண மதத்திலிருந்தபோதும் மங்கையர்க்கரசி சைவசமயம் நலிவுறா வண்ணம் அரும்பாடுபட்டாள். மந்திரியான குலச்சிறையாரும் உறுதுணையாக இருந்து சைவத்தை விருத்தி செய்தனர்.

அக்காலத்தில் திருஞானசம்பந்தப் பெருமான் மதுரைக்கு வந்தபோது குலச்சிறையார் மூலம் அரச அரண்மனைக்கும் அழைத்து வரப்பட்டார். திருஞானசம்பந்தரின் வருகையை அறிந்த சமணர்கள் அவர் தங்கியிருந்த தங்குமிடத்துக்குத் தீயிட்டனர். இதனையறிந்த மங்கையர்க்கரசியார் அஞ்சியபோது திருஞானசம்பந்தர் இறைவனின் திருவருள் துணை நிற்பதால் எவரும் அஞ்சவேண்டியதில்லை எனக் கூறினார். மடத்துக்கு இட்ட தீயை நோக்கி "பையவே சென்று பாண்டியர்க்காகவே" எனப் பாடலில் அமைத்துப் பாடினார். பாண்டியன் வெப்பு நோயால் பாதிக்கப்பட்டான். சமணர்களால் மாற்றமுடியாத நோயைத் திருஞானசம்பந்தர் சிவசின்னமான திருநீற்றினால் குணப்படுத்தினார். பாண்டியனின் கூன் முதுகையும் திருநீற்றின் பெருமையால் சுகப்படுத்தினார். குணமடைந்த பாண்டியன் சமணர்களைத் துரத்திவிட்டுச் சைவ சமயத்தைப் போற்றி வழிபட்டான்.

சமணர்களைத் துரத்தியும் பாண்டியனைக் குணப்படுத்தியும் சைவ சமயத்தை வளர்க்க முன்வந்த மங்கையர்க்கரசியைத் திருஞானசம்பந்தப் பெருமான் "மங்கையர்க்கரசி வளவர்கோன் பாவை" என்னும் தேவாரப் பதிகத்தைப் பாடிப் பெருமைப்படுத்தினார். மங்கையர்க்கரசியாரின் பெருமையால் அறுபத்து மூவர் கொண்ட நாயன்மார் பட்டியலில் மூன்று பெண் அடியார்களுள் ஒருவராக அமைந்து பெருமை தேடிய மகாசக்தியானாள்.

## திலகவதியார்

திருவாமூரில் வாழ்ந்து சிவநெறி பேணிய வேளாண் குலத்துப் புகழனார் மாதினியார் தம்பதியினர் செய்த முற்றவப் பயனாக சிவனடியார்களான திலகவதியார், மருணீக்கியார் என்போரின் மாதா பிதாவான பேறடைந்தனர். சிவநெறி போற்றி வாழ்ந்த திலகவதியார் மணப்பருவம் வந்ததும் கலிப்பகையார் என்னும் போர் வீரனுக்கு திருமணம் நிச்சயம் செய்யப்பட்டிருந்தார். பண்டைய தமிழரின் தூய பண்பாட்டின் படி திலகவதியார் கலிப்பகையாரையே மனதிற் பதித்திருந்தார். விதி செய்த சதியால் கலிப்பகையார் போர் முனைக்குச் சென்றதும் மரணத்தைத் தழுவிக் கொண்டார். இதனால் திலகவதியார் வாழ்வில் சோகம் சூழ வாடியிருந்தார். குறுகிய காலத்தில் இவர்களின் பெற்றோர் இருவரும் ஒருவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின் ஒருவராகச் சிவபதமடைந்தனர். இதனால் மனம் தடுமாறிய நிலையில் தாமும் உயிர் நீக்க முற்பட்டார். இதையறிந்த மருணீக்கியாரின் வேண்டுதலின்பேரில் இருவரும் உயிர்வாழச் சித்தங்கொண்டனர். பின்னர் திலகவதியார் தம்மை சிவப்பணியில் முழுமையாக இணைத்தார்.

சிறிது காலத்தில் மருணீக்கியார் சமண சமயத்தில் பிரவேசித்தார். இவரின் திறமையால் சமண மதத்தில் உயர் பதவிகளை அலங்கரித்தார். இவரின் சமண மதப்பற்று நீண்ட காலத்தை அனுபவிக்க நேர்ந்தது. தன் தம்பி நீண்டகாலமாகச் சமண சமயத்தில் மூழ்கி இருந்ததால் அவரைச் சைவ சமயத்தில் சேர்க்குமாறு திலகவதியார் வீரட்டானேஸ்வரரை வேண்டினார். இறைவன் தமது பக்தையின் வேண்டுதலை ஏற்று மருணீக்கியாருக்குக் கொடிய சூலை நோயைக் கொடுத்தார். நோயின் வெம்மை தாங்காத மருணீக்கியார் திலகவதியாரிடம் வந்தடைந்தார். தன்னை நாடிவந்த தம்பிக்குத் திலகவதியார் திருநீறிட்டு வீரட்டானேஸ்வரர் ஆலயத்துக்கு அழைத்துச் சென்றார். ஆலயத்தை அடைந்ததும் மருணீக்கியார் இறைவன் முன் வீழ்ந்து வணங்கிச் சரணடைந்தார். மேலும் வணங்கிய வண்ணம் "கூற்றாயினவாறு விலக்ககலீர்" என்னும் தேவாரத்தை இறைவன்மீது பாடினார். அவரின் சூலைநோயும் விலகியது. மருணீக்கியாரின் பாடல்களில் மகிழ்ந்த இறைவன் அவரை நற்றமிழில் பாடியதால் "நாவுக்கரசர்" என அழைத்தார்.



நற்பேறு பெற்ற நாவுக்கரசர் தமிழகத்திலுள்ள சிவாலயங்கள் அனைத்தையும் தரிசித்துப் பாடல்கள் பாடியும், உழவாரத் தொண்டுமூலம் சிவாலயங்களைக் கூட்டிப் பெருக்கியும் இன்புற்றார். இதையறிந்த சமணர்கள் திருநாவுக்கரசருக்குப் பல துன்பங்கள் ஏற்படுத்தினர். இறைவனைப் பாடிப்பணிந்து இறைவனருளால் துன்பங்களிலிருந்து விடுவிக்கப்பட்டார். மேலும் பல அற்புதங்களையும் செய்ய இறையருள் உதவியது.

தேவார முதலிகள் மூவருள் திருநாவுக்கரசர் முதியவர். இவர் தரிசித்த சிவாலயங்களில் இறைவனைத் துதித்துப் பாடிய பாடல்கள் 4045. இப்பாடல்கள் பன்னிரு திருமுறைகளுள் நாலாம், ஐந்தாம், ஆறாம் திருமுறைகளாகத் தொகுக்கப்பட்டுள்ளன. முதுமையிலும் சைவம் வளரப் பாடியும் பணிசெய்தும் வாழ்ந்ததால் "அப்பர்" என அழைக்கப்பட்டார். அறுபத்துமூவர் பட்டியலிலும் இவர் இணைக்கப்பட்டுள்ளார்.

திலகவதியார் இளமையிலிருந்து தனது தம்பிக்காக உயிர் வாழ்ந்து வாழ்நாட்களைச் சிவப்பணியில் இணைத்தார். சமண சமயத்துக்கு மாறிய தம்பியை இறையருளை வேண்டி மீண்டும் சிவநெறியைப் போற்ற வைத்தார். அப்பர் முதுமைக் காலத்திலும் பல அற்புதங்கள் செய்தும் சிவப்பணிக்காக பல பாடல்கள் பாடியும் யாவராலும் போற்றும் வண்ணம் வழிகாட்டி வைத்த திலகவதியார் இச் சைவ உலகில் பெண் என்னும் மகாசக்தியாகப் பிரகாசிக்கிறார்.

(தொடரும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்ல கதி கேள் மனமே

திரு ஆ. இராசரெத்தினம் அவர்கள்

"இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது கடவுளை வணங்கி, முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம்" என்பது நாவலர் வாக்கு. முத்தியின்பம் என்பது பிறப்பின்றி விடுதலை பெறுதல் என்று பொருள்படும். ஆன்மாவானது மீண்டும் உலகில் வந்து பிறவாமையாகும். நாங்கள் இன்று உடலால் வினையையும், வினையால் உடலையும் மாறிமாறி எடுத்து உழலுகிறோம். இதற்குக் காரணம் எமது அறியாமையே. அறியாமையால் நாம் மனம் போன போக்கில் போய்விடுகிறோம். இதனையே "மாறி நின்றென் மயக்கிடும் வஞ்சப்புலன்" என்றார் மணிவாசகர். வஞ்சப்புலன் மூலம் மனம் எமக்கு கேடு செய்கின்றது. அதனாலன்றோ அருணகிரியார் மனத்தை முன்னிலைப்படுத்தி நல்லுபதேசம் செய்கிறார்.

"கெடுவாய் மனனே" என்றும்,

"உய்வாய் மனனே" என்றும்,

"புரிவாய் மனனே" என்றும் அனுபூதியில் சுட்டிக் காட்டுகிறார். தவநெறிவிட்டு. அவநெறிப்பட்டு அழிகின்ற உலகினருக்கு அறிவுறுத்தும் பொருட்டு அடிகளார் மனதை முன்னிலையாக்கிக் கூறியுள்ளார்.

மனம் என்பது பல பிறவிகளிலும் செய்துகொண்ட தீவினையால் கல்போல் ஆகிவிட்டது. அதனை,

"நெஞ்சக் கனகல்" என்றும்,

"திணியான மனோசிலை" என்றும் அருபூதியில் குறிப்பிடுகின்றார்.

"கள்வனுக்கு விதானை வேலை கொடுப்பது" என்றொரு பேச்சுவழக்கு ஊரில் உண்டு. இதன் கருத்து யாதெனில், அட்டூழியங்களுக்கு கர்த்தாவாக உள்ளவனை இனங்கண்டு, புத்திமதிமூலம் திருத்தினால் நன்மையுண்டு. அதையே அருணகிரியாரும் "கதிகேள்" என்று மனதிற்கு உபதேசம் செய்கிறார்.

மனதில் பல தீய குணங்கள் படிந்துள்ளன. காமம் முதலிய ஆறு பகைவர்களே அவையாகும். அவற்றிலே மிகவும் கொடியது ஆசை ஆகும். இது மனதைப் பற்றிக்கொண்டு கேடு விளைவிக்கும், இதனால் துன்பம் உண்டாகிறது.

"ஆசை படப்பட ஆய்வரும் துன்பம்" ஆசையை விடவிட ஆனந்தம் மேல் எழும் என்றார் திருமூலர். ஆசை அற்றால், அதன் இனமாகிய ஏனைய ஐந்தும் அறும். பிறவித் துன்பத்திற்கு வித்தாக இருப்பதும் இந்த ஆசைதான். ஆகவே ஆசையை விட்டால் இறைவன் திருவருளைப் பெறலாம்.

ஆசை மூன்று வகையாக மனதை மயக்குறச் செய்யும். அவை மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை. மண் ஆசை நிலத்திலும் நாட்டிலும் உண்டாகும் ஆசை. பெண் ஆசை பருவம் பற்றி வருவது. மற்றையது பொன் ஆசை பொருள் பற்றி வருவது. இது அநேகமாக எல்லோரிடமும் உள்ளது. தான் ஈட்டிய பொருளையும் வேறு வழியில் வந்த பொருளையும் பாதுகாப்பதும் மேலும் மேலும் பிறர் பொருளைக் கைப்பற்ற முயல்வதும் போன்ற செயலுக்குக் காரணமாக இருப்பது இந்தப் பொருளாசைதான்.

கிடைக்காத ஒன்றுக்காய் கவலைப்படாதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த ஆசையில் உள்ள மூன்று பிரிவில் தலைமையானது பொருள் ஆசைதான் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். அதனை அறுப்பது மிகவும் அரிய செயல். அதற்கு வழி என்ன? இறைவனை இறுகப் பற்றிக்கொண்டால் ஏனைய பற்றுகள் வலுவிழந்து அகன்று விடும். இதனாலேயேதான்,

"பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு" என்றார் வள்ளுவர்.

ஒரு குழந்தை தன் கையில் ஒரு அபாயகரமான ஆயுதத்தை வைத்து விளையாடுகிறது. அதனைக் காண்பவரின் மனம் ஏங்குகிறது. குழந்தையிடம் அதைப் பறித்தால் அழும். அதற்கு ஒரு நல்ல விளையாட்டுப் பொருளைக் காட்டினால் பிள்ளை தானாகவே அந்த அபாயமான பொருளை எறிந்துவிட்டு இந்த விளையாட்டுப் பொருளை வாங்கி விளையாடி மகிழும். இது எல்லோருக்கும் மகிழ்ச்சி. வலிந்து பறித்தால் ஆபத்து. ஆகவே இந்தப் பொன்னாசையைத் திசை திருப்பிவிட வேண்டும். அதாவது தான் ஈட்டிய பொருளை மனமுவந்து ஈவதில் செயற்பட்டு, அதில் ஒரு இன்பம் அடையவேண்டும். தன் பொருளை ஒழித்து வைக்காமல் வழங்கத் தலைப்பட்டால் அந்தப் பொருளின்பால் உள்ள பற்றுக் குறைந்து விடும். பொருள் இல்லாத வறியவர்களும் பயன் அடைவார்கள். "பொருள் ஆசையை ஒழி" என்று எதிர்மறையாகக் கூறாது, "அறஞ் செய்" என்று உடன்பாடாகக் கூறின், செய்முறையில் நிகழ்வதற்கு அறஞ் செய்ய முற்படலாம். அதனாலேயே "அறஞ்செய விரும்பு" என்று வற்புறுத்தினார் ஔவையார்.

அநாதியாய் வரும் உடல், உடமை பற்றினை விடுவதற்கு இறைபற்று ஒன்றே போதுமானது. "கெடுவாய் மனனே கதிகேள் கரவாதிடுவாய்" "கரவாதிடுவாய்" என்பது உன்பால் வந்து இரப்பவற்கு இல்லையென்று கூறி உள்ளதை ஒழிக்காமல் இயன்றவரை அன்பாகக் கொடுப்பாயாக"

வறியவர்கட்கு வழங்காது செல்வத்தை ஒழித்து வைப்பவர்களுக்காக இறைவன் கொடிய நரகத்தை படைத்துள்ளான். "கரப்பவர் தங்கட்கெல்லாம் கடுநரகங்கள் வைத்தார்" என்றார் அப்பர் சுவாமிகள். மேலும் கரப்பவர்களுக்கு இறைவனும் தன்னைக் கரந்து கொள்வான் என்பது இன்னொரு பொருளாகும்.

"கரவாடும் வன்நெஞ்சர்க்கு அரியான்" இறைவன் என அப்பர் கூறுகிறார். ஒழித்து வைப்பவர் செல்வத்தை தீயோர் கவர்ந்து விடுவர். இதனை,

"வைத்தீட்டினார் இழப்பவர் வான்தோய்
உய்த்தீட்டுத் தேனீக்கரிமலைநாட"

என்று கூறுகிறது நாலடியார்.

இப்படியாக வறியோர்க்கு வழங்கும் பொழுது இது என்னுடைய செல்வம் நான் வழங்குகிறேன் என்று நினையாது "இச்செல்வம் இறைவன் தந்தது, இறைவனுக்கே தருகிறேன்" என்று எண்ண வேண்டும். தான தருமங்கள் செய்யும்போது நான்- எனது என்ற செருக்கற்று யாவும் சிவன் தந்தது என்ற நினைப்போடு பற்றற்றுச் செய்தல் வேண்டும். இதனால் வரும் நல்வினையோ, தீவினையோ எம்மைச் சாராது. நல்வினையும், தீவினையும் பொன்விலங்கும் இரும்பு விலங்கும் போன்றது. எனினும் பிறவியை அறுக்க நாம் பற்றற்ற நிலையில் வினைகளை ஆற்ற வேண்டும். இதைத்தான் பகவத்கீதையும் எமக்கு "கடமைகளைச் செய், பலனை எதிர் பாராதே" என உபதேசிக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதையே அருணகிரியாரும் "கரவாது இடுவாய்" என்றும் வடிவேல் இறைதாள் நினைவாய் என்றும் உணர்த்தினார். ஆகவே அதுவே இன்ப துன்பத்திற்குக் காரணமான வினை யாவையும் விடுவதற்கு வழி என்றார். அதனால் வினையின்றேல் பிறவி இல்லை. இறைவனுக்கு எமது செயல்களை சமர்ப்பணம் செய்தால் பிறவி வேரறும். பேரின்ப வாழ்வு கிடைக்கும்.

"தான தருமங்கள் தவமும் புரியுங்கள். ஞான வீடு நமக்கெளிதாமே" என்று சிவயோக சுவாமிகள் நற்சிந்தனை எமக்கு போதிக்கின்றது. இறை நினைவுடன் தான தர்மம் செய்வது சாலச் சிறந்தது.

இதுவே பெரியபுராண வரலாறு. இலக்கியங்கள் நமக்குக் காட்டிய உண்மை. அதன் வழி வாழ்வோமாக. பேரின்பப் பெருவாழ்வு பெறுவோமாக.

## சும்மா இருப்பதே சுகம்

நாளும் பொழுதும் அன்றாட வாழ்க்கையிற் சும்மா சும்மா எனப் பல தடவைகள் இச்சொல்லைச் சும்மா சொல்கின்றோம். சும்மா வந்தேன், சும்மா இரு, சும்மா செய்வானா? சும்மா போகலாம், சும்மா கொடுப்பானா?, சும்மா சொன்னேன், சும்மா வந்தேன் எனச் சும்மா என்பது படித்தவர்களாலும், பாமர மக்களாலும் மிகவும் எளிதாக உள்ளத்து உணர்ச்சிகளையும், உணர்வுடன் கூடிய கருத்துக்களையும் வெளிப்படுத்துவதாக அமைகின்றது.

சும்மா என்பது இன்று நேற்றல்ல பல நூற்றாண்டுகாலமாக வழக்கில் இருந்து வருவதாகப் பற்றிச் சிந்திப்போமாயின் இதன் தனிச்சிறப்பை நாம் நன்குணரலாம். 17ஆம், 18ஆம் நூற்றாண்டுகளிலே தாயுமான சுவாமிகளும் தமது தனிப்பாடல்களில்,

"சும்மா இருக்கச் சுகமே சுகம்
என்று சுருதியெல்லாம்" (பாடல் 436) எனவும்
"சும்மா இருக்கச் சுகம் உதயமாகுமே"
"ஏதுக்குச் சும்மா இருமனமே"
"சும்மா இருநீ" எனும் வரிகள்மூலம் சும்மா சிறப்பித்துக் கூறுகின்றார்.

மேலும் அருணகிரிநாத சுவாமிகளும் கந்தரநுபூதிப் பாடல்களில்,

"சும்மா இரு சொல்லற என்றதுமே
அம்மா பொருள் ஒன்றும் அறிந்திலனே" எனவும்
"சொல்லுகைக் கில்லையென் றெல்லாமிழந்து
சும்மாவிருக்கும் எல்லையுட்செல்ல எனைவிட்ட" எனவும், சும்மா என்பது பற்றிப் படிப்போரைச் சிந்திக்க வைக்கும் சிறப்புடையதாக விளங்குகின்றது.சும்மா சும்மா என்பது ஒன்றுமில்லாமல், வேலை ஏதுமில்லாமல், பயனில்லாமல், காரணமில்லாமல், கவனமில்லாமல், வெறுமையாக எனப் பலபடக் கருத்துப்படுகின்றது.

15ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த காளமேகப் புலவர் மிக அழகாக,

"இம்" என்னுமுன்னே எழுநூறும் எண்ணூறும்
"அம்" என்றால் ஆயிரம்பாட்டாகாதோ- சும்மா
இருந்தால் இருந்தேன். எழுந்தேனே ஆயின்
பெருங் காளமேகம் பிள்ளாய்

எனவும்,

பெருமாளும் நல்ல பெருமான்- அவர்தம்
திருநாளும் நல்ல திருநாள்- பெருமாள்
இருந்த இடத்திற் சும்மா இராமையினால் ஐயோ
பருந்தெடுத்துப் போகிறதைப்பார் எனவும் சும்மா சொல்லைச் சிந்திக்க வைத்துள்ளார்.

சும்மா இருப்பதே சுகம் எனக் கூறுவதாக அறிவோம். நாமும் இச்சொல்லின் சிறப்பைத் தெரிந்து வாழ்க்கையிற் சும்மா இருப்பது எப்படிச் சுகம் தரும் எனும் தத்துவத்தை உணர்ந்து வாழமுயன்றிடின் சும்மா இருப்பதிற் சுகம் காணலாமன்றோ.

-நீர்வை மணி-

வறுமையே நல்ல காரியத்துக்கு விளைநிலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவலர் பக்கம்:

(தொடர்ச்சி...

# சைவ சமய வினா விடை

– ஆறுமுகநாவலர் –



105. நமஸ்காரம் எத்தனை தரம் பண்ணல் வேண்டும்?

மூன்று தரமாயினும், ஐந்து தரமாயினும், ஏழு தரமாயினும், ஒன்பது தரமாயினும் பண்ணல் வேண்டும். ஒருதரம் இருதரம் பண்ணுதல் குற்றம்.

106. நமஸ்காரம் பண்ணியபின் யாது செய்தல் வேண்டும்?

பிரதஷிணம் (வலம் வருதல்) பண்ணல் வேண்டும்.

107. எப்படிப் பிரதஷிணம் பண்ணல் வேண்டும்?

இரண்டு கைகளையும் சிரசிலேனும் மார்பிலேனும் குவித்துச் சிவநாமங்களை உச்சரித்துக்கொண்டு, கால்களை மெல்ல வைத்துப் பிரதஷிணம் பண்ணல் வேண்டும்.

108. பிரதஷிணம் எத்தனை தரம் பண்ணல் வேண்டும்?

மூன்று தரமாயினும், ஐந்து தரமாயினும், ஏழு தரமாயினும், ஒன்பது தரமாயினும் பண்ணல் வேண்டும்.

109. சுவாமி சந்நிதானங்களை எந்த முறையாகத் தரிசனஞ் செய்தல் வேண்டும்?

முன் விக்கினேசுவரரைத் தரிசனஞ் செய்து, பின் சிவலிங்கப் பெருமானையும் உமாதேவியாரையுந் தரிசனஞ் செய்து, விபூதி வாங்கித் தரித்துக்கொண்டு, அதன் பின் சபாபதி, தட்சணாமூர்த்தி, சோமஸ்கந்தர், சந்திரசேகரர், சுப்பிரமணியர் முதலிய மூர்த்திகளைத் தரிசனஞ் செய்தல் வேண்டும்.

110. விக்கினேசுவரரைத் தரிசிக்கும்பொழுது யாது செய்தல் வேண்டும்?

முட்டியாகப் பிடித்த இரண்டு கைகளினாலும் நெற்றியிலே மூன்றுமுறை குட்டி, வலக்காதை இடக்கையினாலும், இடக்காதை வலக்கையினாலும் பிடித்துக்கொண்டு, மூன்றுமுறை தாழ்ந்தெழுந்து, கும்பிடல் வேண்டும்.

111. சந்நிதானங்களிலே தரிசனம் பண்ணும் பொழுதெல்லாம் யாது செய்தல் வேண்டும்?

இரண்டு கைகளையும் சிரசில் ஆயினும் மார்பில் ஆயினும் குவித்துக்கொண்டு, மனம் கசிந்துருகத் தோத்திரஞ் செய்தல் வேண்டும்.

112. எந்தக் காலத்தில் சுவாமி தரிசனம் செய்யல் ஆகாது?

அபிஷேகம், நிவேதனம் முதலியவை நடக்கும் பொழுது தரிசனஞ் செய்தல் ஆகாது.

113. அபிஷேக காலத்திலே பிரதஷிண நமஸ்காரங்களும் பண்ணல் ஆகாதா?

அப்பொழுது உட்பிரகாரத்திலே பண்ணல் ஆகாது.

114. தரிசனம் முடிந்தவுடன் யாது செய்தல் வேண்டும்?

சண்டேசுவரர் சந்நிதியை அடைந்து, கும்பிட்டு மூன்றுமுறை கைகொட்டி, சிவதரிசன பலத்தைத் தரும் பொருட்டுப் பிரார்த்தித்தல் வேண்டும்.

ஒழுங்காக வாழ்பவன் சிறந்த போதகன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**115. சண்டேசுவர தரிசனத்தின் பின் யாது செய்தல் வேண்டும்?**

சிவ சந்நிதானத்தை அடைந்து, நமஸ்காரம் பண்ணி, இருந்து, ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தில் இயன்ற உருச் செபித்துக் கொண்டு, எழுந்து வீட்டுக்குப் போதல் வேண்டும்.

**116. நித்தியமும் நியமமாக ஆலய தரிசனம் செய்ய இயலாதவர் யாது செய்தல் வேண்டும்?**

சோமவாரம் (திங்கள்), மங்கலவாரம் (செவ்வாய்), சுக்கிரவாரம் (வெள்ளி), பிரதோஷம், பௌர்ணமிமை, அமாவாசை, திருவாதிரை, கார்த்திகை, மாசப் பிறப்பு, சூரிய கிரகணம், சந்திர கிரகணம் சிவராத்திரி, நவராத்திரி முதலிய புண்ணிய காலங்களிளாயினும் தரிசனம் செய்தல் வேண்டும்.

**117. திருக்கோயிலிலே செய்யத் தகாத குற்றங்கள் யாவை?**

ஆசாரம் இல்லாது போதல், கால் கழுவாது போதல், எச்சில் உமிழ்தல், மலசலங் கழித்தல், மூக்கு நீர் சிந்துதல், ஆசனத்து இருத்தல், மயிர் கோதி முடித்தல், சூதாடல், பாக்கு, வெற்றிலை கொள்ளல், சிரசிலே வஸ்திரம் தரித்துக்கொள்ளுதல், தோளிலே உத்தரீயம் இட்டுக்கொள்ளுதல், சட்டை இட்டுக்கொள்ளுதல், பாதரக்ஷை இட்டுக்கொள்ளுதல், விக்கிரகத்தைத் தொடுதல், நிருமாலியத்தைப் (பூசித்துக் கழித்த பொருள்) கடத்தல் நிருமாலியத்தை மிதித்தல், தூபி துவசத்தம்பம் பலிபீடம் விக்கிரகம் என்னும் இவைகளின் நிழலை மிதித்தல். வீண் வார்த்தை பேசல், சிரித்தல், சண்டை இடுதல், விளையாடுதல், சுவாமிக்கும் பலிபீடத்துக்கும் குறுக்கே போதல் முதலியவைகளாம்.

## தமிழ் வேத இயல்

**118. சைவ சமயிகள் ஓதவேண்டிய தமிழ் வேதங்கள் எவை?**

தேவாரம், திருவாசகம் இரண்டுமாம்.

**119. தேவாரம் செய்தருளினவர் யாவர்?**

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார், திருநாவுக்கரசு நாயனார், சுந்தரமூர்த்தி நாயனார்.

**120. திருவாசகம் செய்தருளியவர் யாவர்?**

மாணிக்கவாசக சுவாமிகள்.

**121. திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் எங்கே திருவவதாரஞ் செய்தருளினார்?**

சோழநாட்டில் உள்ள சீகாழியிலே வைதீகப் பிராமண குலத்திலே திருவவதாரஞ் செய்தருளினார்.

**122. திருநாவுக்கரசு நாயனார் எங்கே திருவவதாரஞ் செய்தருளினார்?**

திருமுனைப்பாடி நாட்டில் உள்ள திருவாமூரிலே வேளாளர் குலத்திலே திருவவதாரஞ் செய்தருளினார்.

**123. சுந்தரமூர்த்தி நாயனார் எங்கே திருவவதாரஞ் செய்தருளினார்?**

திருமுனைப்பாடி நாட்டில் உள்ள திருநாவலூரிலே சிவப்பிராமண குலத்திலே திருவவதாரஞ் செய்தருளினார்.

**124. மாணிக்கவாசக சுவாமிகள் எங்கே திருவவதாரஞ் செய்தருளினார்?**

பாண்டி நாட்டில் உள்ள திருவாதவூரிலே அமாத்தியப் பிராமண குலத்திலே திருவவதாரஞ் செய்தருளினார்.

**125. திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் முதலிய நால்வரும் எவ்வாறு பெயர் பெறுவார்கள்?**

சைவசமய குரவர்கள் எனப் பெயர் பெறுவார்கள்.

(தொடரும்...




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## காட்டிலே விளையாட்டு

காட்டிலே வருடக் கடைசியில் விளையாட்டுப் போட்டிகள் வழக்கமாய் நடத்தப்படும். அனைத்து விலங்குகளும் ஆர்வத்துடன் விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொள்வது வழக்கம்.

இன்னும் சில நாட்களில் அந்தக் காட்டில் விளையாட்டுப் போட்டிகள் நடைபெற இருந்தன. அதற்காக விலங்குகள் பயிற்சியில் ஈடுபட்டிருந்தன. சிங்கராஜாவின் தலைமையில், யானையின் முன்னிலையில் விளை யாட்டுப் போட்டிகள் நடைபெற இருந்தன.



போட்டிகளில் தாமே முதலாவதாக வந்து சிங்கராஜாவிடமிருந்து பரிசுகளையும் பாராட்டுக்களையும் பெறவேண்டுமென்று ஒவ்வொரு விலங்கும் தங்களுக்குள் நினைத்துக்கொண்டு போட்டிகளில் பங்குபெற கடுமை யாய் பயிற்சியை மேற்கொண்டன.

நாளை விளையாட்டு விழா தொடங்க இருந்தது. பறவைகள் அனைத்தும் ஒன்றுகூடி தோரணங்கள் கட்ட ஆரம்பித்தன. குரங்குகளும், மாடுகளும், மான்களும் விழாவிற்கான மேடையை அமைப்பதில் ஆர்வமாய் ஈடுபட்டிருந்தன. ஒட்டகச் சிவிங்கிகள் விழாவிற்கு வருகை தரும் பார்வையாளர்களுக்குத் தருவதற்காக நல்ல நல்ல பழங்களைச் சேகரித்து ஓர் இடத்தில் வைத்திருந் தன. அந்தப் பகுதி முழுவதும் விழாக்கோலமாய் இருந்தது.

அடுத்தநாள் காலை விளையாட்டுப் போட்டிகள் ஆரம்பிக்க இருந்தன. சிங்கராஜாவும் யானையும் முன்னதாகவே வந்து விழாவைத் தொடங்கி வைக்கக் காத்திருந்தார்கள்.

முதல் நிகழ்ச்சியாக மான்களின் நடனம் நடைபெற்றது. மான்களின் நடனம் பார்ப்பதற்கு கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. நடன நிகழ்ச்சி முடிந்ததும் அனைத்து விலங்குகளும் குதித்து ஆரவாரம் செய்து தங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தின. விளையாட்டுப் போட்டிகளில் முதல் நிகழ்ச்சியாக "ஓட்டப்பந்தயம்" நடைபெறும் என்று நிகழ்ச்சி அறிவிப்பாளராக செயல்பட்ட வரிக்குதிரை அறிவித்தது.



Digitized by Noolaham Foundation:
noolaham.org | aavanaham.org

ஓட்டப்பந்தய களத்தில் மான், குதிரை, புலி, ஒட்டகச் சிவிங்கி எனப் பல விலங்குகள் ஓடுவதற்குத் தயாராய் நின்றன. இதைப் பார்த்துக் கொண்டிருந்த ஆமைக்கும் ஓட்டப் பந்தயத்தில் கலந்துகொள்ள வேண்டும் என்ற ஆசை வந்தது. உடனே ஆமையும் வந்து களத்தில் நின்றது. இதைப் பார்த்த சில விலங்குகள் ஆமையைக் கேலி செய்தன. இதனால் ஆமை அவமானப்பட்டது. ஆனாலும், அது தளராமல் போட்டியில் கலந்து கொண்டது. அந்தப் போட்டியில் மான் மின்னல் வேகத்தில் ஓடி முதலாவதாய் வந்து ஜெயித்தது.

அடுத்ததாய் "உயரம் தாண்டும்" போட்டி நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது. போட்டியில் சிறுத்தை, மான் குரங்கு எனப் பல விலங்குகள் கலந்து கொள்வதாய் அறிவிக்கப்பட்டது. இந்தப் போட்டியிலும் ஆமை கலந்து கொண்டது. போட்டியில் சிறுத்தை அதிக உயரத்தைத் தாண்டி ஜெயித்தது. ஆமை சோர்ந்து போனது. அடுத்த போட்டி "நீளம் தாண்டுதல் போட்டி" என்று வரிக்குதிரை அறிவித்தது. இந்தப் போட்டியிலும் ஆமை கலந்து கொண்டது. சக விலங்குகள் ஆமையை கேலி செய்துகொண்டே இருந்தன.

மேடையில் இருந்து இதைக் கவனித்துக் கொண்டிருந்த யானை சிங்கராஜாவிடம் கலந்து ஆலோசனை செய்தது. "ஆமை ஆர்வமா எல்லாப் போட்டியிலும் கலந்துக்குது. ஆனா, பாவம் ஜெயிக்க முடியலே. ஏதாவது செய்து நாம ஆமையை உற்சாகப்படுத்தணும். என்ன பண்ணலாம்?"

யானை கேட்டதும், சிங்கராஜா யோசிக்க ஆரம்பித்தார். கடைசியில் சிங்கராஜா அந்த யோசனையை யானையிடம் தெரிவிக்க யானையும் மகிழ்ச்சியுடன் ஒப்புக்கொண்டது. வரிக்குதிரையை அழைத்து அதன் காதில் அந்த விஷயத்தைச் சொன்னது யானை.

வரிக்குதிரை மைக்கைப் பிடித்து அந்த அறிவிப்பை வெளியிட்டது. "அடுத்ததாய் மெதுவாய் ஓடும் போட்டி நடைபெறும் கலந்துகொள்ள விருப்பம் உள்ளவர்கள் களத்தில் வந்து நிற்கலாம்". இந்தப் போட்டியில் கலந்துகொள்ள எருது, குரங்கு, மாடு, ஒட்டகம் போன்ற விலங்குகள் வந்து களத்தில் நின்றன. எந்தப் போட்டியிலும் ஜெயிக்க முடியவில்லையே என்று சோர்ந்து போன ஆமை இந்தப் போட்டியில் கலந்து கொள்ளாமல் ஒதுங்கி நின்றது.

"ஆமையாரே, எல்லாப் போட்டியிலும் கலந்துக்கிட்டீங்க. இந்தப் போட்டியில மட்டும் ஏன் கலந்துக்காம இருக்கீங்க. வாங்க வந்து நில்லுங்க. போட்டி இன்னும் சில நிமிடங்களில் தொடங்கப்போகுது." வரிக்குதிரை உற்சாகப்படுத்தி அழைத்ததும் மறுக்க மனமில்லாமல் ஆமையும் வந்து களத்தில் நின்றது. நெருப்புக்கோழி கொடியை அசைத்து அந்தப் போட்டியைத் துவக்கி வைத்தது. எருது, குரங்கு, மாடு, ஒட்டகம் போன்றவைகளால் மெதுவாக ஓட முடியவில்லை. அவை வேகமாக ஓடி கோட்டைத் தொட்டுவிட்டன. ஆனால், ஆமை வழக்கம்போல மெல்ல ஓடி கடைசியாய்க் கோட்டைத் தொட்டு போட்டியில் முதலாவது இடத்தைப் பிடித்தது.

போட்டியில் ஜெயித்து முதல் இடத்தைப் பிடித்த ஆமை அடைந்த சந்தோஷத்திற்கு அளவே இல்லை. ஆமை சந்தோஷப்பட்டதைப் பார்த்த சிங்கராஜாவும், யானையும் சந்தோஷப் பட்டன. விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்படுவது நட்பையும் தன்னம்பிக்கையையும் திறமையையும் வளர்த்துக் கொள்வதற்காகத்தான் என்று உணர்த்தின.

அன்று மதியம் வரை போட்டிகள் நடந்தன. மாலை பரிசளிப்புவிழா நடைபெற்றது. விளையாட்டுப் போட்டிகளில் ஜெயித்த விலங்குகள் பரிசை சந்தோஷமாய் பெற்றுக் கொண்டன. மாலைநேரம் வந்து இருட்டத் தொடங்கியது. விழாவில் கலந்துகொண்ட அனைத்து விலங்குகளும் பறவைகளும் சந்தோஷமாய் தத்தம் இருப்பிடம் சென்றன.

**உயிருள்ளவரை வாழ்க்கைக்கு நம்பிக்கை அவசியம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரம் (தொடர்ச்சி...)

| | | | |
|---|---|---|---|
| S. கிருஸ்ணபிள்ளை | | பிரான்ஸ் | 20000. 00 |
| Dr ச. பசுபதிராசா நினைவாக | | | |
| ச. தர்மலிங்கம் | மாதர்சங்கவீதி | சித்தங்கேணி | 5000. 00 |
| கதிரேசன் நினைவாக | | | |
| தர்மலிங்கம் மூலம் நந்தகோபன் | | அவுஸ்திரேலியா | 5000. 00 |
| செ. ஈஸ்வரன் | வட்டு. கிழக்கு | சித்தங்கேணி | 10000. 00 |
| சி.ச. கணபதிப்பிள்ளை | கைதடி கிழக்கு | கைதடி | 3400. 00 |
| சதாசிவம் கிருஷ்ணகுமார் | | அச்சுவேலி | 5000. 00 |
| கு. நித்தியானந்தன் | பலாலிறோட் | யாழ்ப்பாணம் | 5001. 00 |
| ஆ. மகாலிங்கம் | சிவன்வீதி | ஆவரங்கால் | 2000. 00 |
| பூ. சுஜிதரன் | 36/1 பத்தாம் ஒழுங்கை | வவுனியா | 2000. 00 |
| சதாசிவம் செல்லமுத்து | மடத்தடி றோட் | சாவகச்சேரி | 1000. 00 |
| சிற்றம்பலம் செல்வானந்தம் | மீசாலை கிழக்கு | மீசாலை | 1000. 00 |
| திரு சிவகுருநாதன் குடும்பம் | ஈவினை | சுண்ணாகம் | 1000. 00 |
| தியாரன் டனோஷ்யன், கிருபாகரன் சனோஸ், ஹரிதரன் றறுண், ஸியாமினி கிஷான், உஷாமினி ஹரீஸ் | | லண்டன் | 100 பவுன்ஸ் |
| S. நடேசன் குடும்பம் | | கொழும்பு-6 | 5000. 00 |
| க. சுதர்சன் | | புத்தூர் | 1000. 00 |
| பொ. மாணிக்கராசா | | கிளிநொச்சி | 500. 00 |
| நா. கதிர்காமநாதன் | | கொழும்பு | 1மூடை அரிசி |
| ச. சம்பந்தநாதன் | | லண்டன் | 1மூடை அரிசி |
| கரன் ஸ்ரோர்ஸ் | | ஊரெழு | 1மூடை அரிசி |
| சிறிகரன் வெல்டிங் | | ஊரெழு | 20கிலோ அரிசி |
| ந. கணேஸ் குடும்பம் | | ஊரெழு | 20கிலோ அரிசி |
| க. சிவக்கொழுந்து மூலம் | | | |
| ம. யோகவரதன் | | | 5000. 00 |
| அ. தவக்குமார் | | லண்டன் | 10000. 00 |
| திருமதி ஜனனி காங்கேசன் | இலங்கைவங்கி | நெல்லியடி | 1000. 00 |
| ந. கங்காதேவி | வேல்பதி | புத்தூர் | 1000. 00 |
| யோகநாயகி கதிர்காமநாதன் | சங்குவேலி வடக்கு | மானிப்பாய் | 3000. 00 |

(தொடரும்...

சாந்தமான பதில் கோபத்தை அடக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய பொலிவுடன் சந்நிதியான் ஆச்சிரமம்

– வல்வையூர் அப்பாண்ணா –

சந்நிதியான் ஆச்சிரமம் சர்வ காலமும் அன்னம் வழங்கும் ஒரு அட்சய பாத்திரம். 1988 பங்குனி உத்தர நன்னாளில் அரசம்மா மடத்தில் இயங்க ஆரம்பித்த ஆச்சிரமம் 05.05.1995ல் தற்போதைய வளாகத்திற்கு இடம் மாறியது. ஒரு சுவாமி அறையும் அதனோடு இணைந்தபடியான ஓரிரு மண்டபங்களுடன் தனது அன்னப்பணியைத் தொடர்ந்தது. தேவை அதிகரிக்க அதிகரிக்க புதிய கட்டிடங்கள் தோற்றம் பெற்றதுடன், காலத்துக்குக் காலம் சிறுசிறு திருத்தவேலைகளும் நடைபெற்று வந்தன என்பதுவும் உண்மையே.

2011இல் திருவிழா முடிந்த கையுடனேயே, சற்றே பெரிய அளவிலான ஒரு திருத்த வேலையைச் செய்யும் எண்ணம் சுவாமிகளின் மனதில் இருந்தது. பழைய சமயலறை முதல்- பழைய கணனி அறை வரையிலான பகுதி நிலம்போட்டு உயர்த்தி கோப்புசங்களையும் உயர்த்திப்போட எண்ணம் கொண்டார் சுவாமிகள். நிலம் உயர்த்திப்போடப்பட்டதுடன் வேலைகள் நின்று போயின. சுவாமிகளும் சோர்ந்துவிட்டார். 2012 பிறந்தது. ஏற்கனவே திட்டமிட்டதைச் செய்துமுடிக்க வைராக்கியம் கொண்டார் சுவாமிகள். இருந்தாலும்.... முருகன் எண்ணக்கரு எப்படி இருந்தது என்பதை சுவாமிகள் அறிந்திருக்கவில்லை. என்னதான் சிந்தித்தாலும் அனுமதி அங்கிருந்து கிடைக்க வேண்டுமே....!

ஆச்சிரமத்தோடு நீண்டகாலமாகவே நெருங்கிய ஈடுபாடு கொண்டிருந்தவரான, மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும்- பத்தமேனியில் திருமணமும் செய்து- தற்போது கொழும்பை நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட திரு இ. கார்த்திகேசு என்பார் சந்நிதி முருகனைத் தரிசிக்க வந்தவர் வேலவனின் தரிசனம் முடிந்த கையோடு வழமைபோல ஆச்சிரமம் வருகிறார். இவர் கட்டிடத் திணைக்களத்தில் தொழில்நுட்ப உத்தியோகத்தராகப் பணிபுரிந்து ஓய்வு பெற்றவர். கட்டிட வேலையிலும்- கணனி அறிவிலும் மிகுந்த அனுபவம் உள்ளவர் இவர்.

திரு கார்த்திகேசு ஆச்சிரமத்திற்கு வருகை புரியும் காலங்களிலெல்லாம் சுவாமிகளிடம், "ஆச்சிரமத்தின் தோற்றத்தினை மாற்றியமைக்க வேண்டும், அந்த நல்ல பணியைத் தானே முன்னின்று செய்யவேண்டும்" எனத் தாம் பேரவாக் கொண்டிருப்பதாக அடிக்கடி கூறுவார். திரு கார்த்திகேசு தமது விருப்பத்தை வெளியிடும் போதெல்லாம் சுவாமிகளும், "மாற்றியமைப்பது என்பது இலேசுப்பட்ட காரியமல்ல. அதற்கான காலம் கனிந்து வரும்போது பார்த்துக் கொள்ளலாம்"

தானம் என்பது பிரதிபலன் கருதாத கொடை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று தட்டிக்கழித்தபடியே இருந்தார். ஆனாலும் இந்தத் தடவை, "ஆச்சிரமத்தின் கூரைப் பகுதியினைப் படிப்படியாக உயர்த்துவதற்கு ஏற்றபடியான ஆலோசனை கூறுமாறு" திரு கார்த்திகேசுவைக் கேட்டார் சுவாமிகள்.

"பகுதி பகுதியாக வேலைகளைச் செய்வதைக் காட்டிலும்- ஆச்சிரம வளாகம் முழுவதையும் ஒரே கூரையின் கீழ் கொண்டு வருவோம்" எனத் திரு கார்த்திகேசு கூறியபோது சுவாமிகள் பெரும் தயக்கம் காட்டினார். சுவாமிகளின் தயக்கத்திற்கு அடிப்படையில் நியாயமான காரணங்களும் இருந்தன. "ஆச்சிரமத்தின் எந்தக் காரியமாயினும் நிதி இருப்பு வளத்தைக் கொண்டு நடத்தப்படுவதில்லை. முற்றுமுழுதாக சந்நிதியானின் அருட்கடாட்சத்தினால் ஏதோ ஒரு வகையில் நடந்தேறுகின்றன. ஒரே கூரையின் கீழ் கொண்டுவரும் இத்திட்டத்திற்கு பெருமளவு நிதி தேவைப்படும். எதற்கும் ஒரு வாரத்தில் முடிவு செய்வோம்" என்பதே சுவாமிகளின் கருத்தாக இருந்தது. சுவாமிகளின் எண்ணத்தையும் தயக்கத்தையும் பார்த்த திரு கார்த்திகேசு அவர்கள், "ஆச்சிரமத்தின் பணிகள் இவ்வளவு காலமும் எவ்வாறு நடைபெற்று வந்ததோ, அவ்வாறே இந்தப் பணியும் நிறைவேறும். எதுவும் யோசிக்க வேண்டாம். கட்டுமாணப்பணிகள் அனைத்தையுமே தாமே பொறுப்பேற்று நிறைவேற்றித் தருவதாக" உறுதியளித்தார். இருந்தாலும், கட்டிடப் பொருட்கள் அனைத்தையும் சுவாமிகள் வழங்குவதாகவும், கட்டுமாணத்திற்குரிய கூலி முழுவதையும் திரு கார்த்திகேசு பொறுப்பேற்பது எனவும் இருவரும் ஒரு உடன்பாட்டை எட்டினர். அதன்படி சுவாமி அறைக்கு முற்பட்ட பகுதியினை முதலிற் செய்து முடிப்பது எனச் செயற்பட ஆரம்பித்தனர். கெருடாவில்- தொண்டைமானாற்றைச் சேர்ந்த இளைப்பாறிய பட வரைஞர் திரு V. அரியராசா அவர்கள், புதிய அமைப்பின் வரைபடத்தைக் கீறி வழங்கியதுடன் நேரம் உள்ள வேளையெல்லாம் ஆச்சிரமத்திற்கு வருகை தந்து பெறுமதிமிக்க ஆலோசனைகளையும் வழங்கி வந்தார்.

2012 மே மாதம் 13இல் புதிய அமைப்பிற்கான "அடிப்போடும்" நிகழ்வு நடைபெற்ற போதிலும், முறைப்படியான வேலைகள் மே மாத கடைசி நாட்களிலேயே ஆரம்பமாகியது. கோப்புசங்கள் இறக்கப்பட, பகுதி பகுதியாக இடிக்கப்படவேண்டிய பகுதிகள் இடித்து அகற்றப்பட, உயர்ந்து நிற்கின்ற இடைத் தூண்கள் கொங்கிறீற் இடப்பட்டு நிமிர்ந்துகொள்ள- வேலைகள் வேகம் கொள்கின்றன. திரு கார்த்திகேசு அவர்களுடன் கூடவே இணைந்து வேலை செய்யும் 10 பெரும்பான்மை இன இளைஞர்களும், பதுளையைச் சேர்ந்த 6 தமிழ் இளைஞர்களும், இவர்களுடன் இரவு- பகல் பாராது- அயராது- ஆறுதல் எடுக்காது கடமை புரிந்த ஆச்சிரமத்துத் தொண்டர்களும் இணைந்துகொள்ள வேலைகள் வேகம் கொள்கின்றன. வேலைகள் ஆரம்பித்து ஒரு மாதம் வரை பழைய இடத்திலேயே இயங்கி வந்த சமையற்கூடம், யூன் 13இல் ஆச்சிரம வளாகத்தின் பின்புற கதவருகே உள்ள தற்காலிக கொட்டகைக்கு இடம் பெயருகிறது.

சுவாமி அறையின் நேர்கோடு வரையுள்ள (அதாவது செண்பகமரம் உள்ள இடம் வரை) முற்பகுதி மட்டுமே மாற்றியமைக்கப்படத் திட்டமிட்டு ஆரம்பிக்கப்பட்ட வேலைகள், அனைவரதும் கடின உழைப்பின் காரணமாக எதிர்பார்த்ததைவிட குறைந்த காலத்தில் (நிலம் போடுவது தவிர்ந்த) முடிவுக்கு வர, "பின்புற வேலையையும் செய்து முடிப்போம்" என்கிற சுவாமி அவர்களின் வற்புறுத்தலால் பின்புறமும் வேலைகள் தொடர்ந்தன. ஆச்சிரமத்துடன் தொடர்பு பட்ட அனைவருக்கும் அவரவர் வழமையான வேலைப்பளுவுக்கிடையே- கட்டிட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலைகளினால் ஏற்பட்ட அசௌகரியங்கள் சொல்லுந்தரமன்று. இந்த விடயத்தில் சமையற்கூடப் பணியாளர்களே மிகக் கூடுதலான சிரமங்களை எதிர்கொள்ள நேரிட்டது. வழமையாகப் பசியாறும் முதியவர்கள், நித்தியம் பசியாற வெளியிலிருந்து வரும் அடியார்கள், திருமண வைபவங்கள், கட்டிட வேலைக்காக இங்கேயே தங்கியிருந்து பணிபுரியும் வேலையாட்கள், நிரந்தர- தற்காலிக ஆச்சிரமத்துத் தொண்டர்கள் ஆகிய அனைவருக்குமான உணவினை தற்காலிக கீற்றுக் கொட்டகையில் தயார் செய்து வழங்குவது என்பது சாதாரண விடயமல்ல. அவர்கள் காட்டிய பொறுமையும்- சிரமங்களை ஏற்றுக்கொண்ட மனப் பக்குவமும் மிகமிக உயர்ந்தது. இந்தப் பெரும் திட்டமிடலில் அவர்களது பணியே உச்சம் பெற்று நிற்கிறது.

வேலைகள் வேகம் கொண்டாலும் வழமையான ஆச்சிரமப் பணிகளுக்கு எவ்வித இடையூறுமின்றி பார்த்துக்கொள்வதில் சுவாமிகள் மிக அவதானமாக இருந்தார். வேலைகள் நடைபெற்ற மூன்றுமாதகால இடைவெளியில் 25 திருமண நிகழ்வுகள் ஆச்சிரமத்தில் இடம்பெற்றன. ஒருநாள் 7 திருமணங்கள்கூட ஒரேவேளையில் நடந்தேறியமை குறிப்பிடத்தக்கது. மருத்துவ சேவைக் கட்டிடம் தனியாக அமைந்திருந்ததால் "இலவச மருத்துவசேவைப்" பணி அணுவளவும் தடங்கலின்றி நடைபெற்றது. இந்த மூன்றுமாதகால இடைப்பகுதியில் "மூன்று ஞானச்சுடர் வெளியீடுகள், ஒன்பது வாராந்த வெள்ளி நிகழ்வுகள், மயில்வாகனம் சுவாமிகள் குருபூசை, வைகாசிப் பெருவிழா, அருணகிரிநாதர் விழா போன்ற இத்தனை விசேட நிகழ்வுகள் அனைத்தும் வழமைபோல பெருவிழாக்களாக இல்லாமல் மட்டுப்படுத்தப்பட்ட விழாக்களாக அமைந்திருந்தமை குறிப்பிட வேண்டியதே.

புதிய கட்டிட வேலைகளுக்கான சகல கட்டிடப் பொருட்களையும் தேவையறிந்து உடனுக்குடன் வழங்கி உதவியவர்களில் சங்கானை "பாக்கியரெட்ணம் இரும்பகம்" ஸ்தாபனத்தார் முதன்மை பெறுகின்றனர். ஆவரங்கால் "செல்வா ஹாட்வெயார்" ஸ்தாபனத்தாரும் கட்டிடப் பொருட்களை வழங்குவதில் பெரிதும் உதவினர். இரு பகுதியினரும் கடன் அடிப்படையில் பொருட்களை வழங்கினாலுங்கூட பல லெட்சம் பெறுமதியான பொருட்களை உடனுக்குடன் வழங்கி, வேலைகள் தடையின்றி நடைபெற உதவியமை பாராட்டப்பட வேண்டியதே. கூரைத் தகடுகள் பற்றி ஆலோசிக்கப்பட்ட வேளை, இத்தகடுகள் போதுமானது இங்கில்லாமல் இருந்தபோதும், மிகக் குறுகிய காலப்பகுதியில் கூரைத்தகடுகளை கொழும்பிலிருந்து வருவித்து உதவியமைமூலம் "பாக்கியரெட்ணம் இரும்பகம்" உரிமையாளர் ஆச்சிரமத்தின்மீது கொண்டுள்ள பற்றும் பாசமும் வெளிப்பட்டு நிற்கிறது.

சமையற்கூட வேலைகள் துரித கதியில் நிறைவேற்றப்பட்டு திருவிழா ஆரம்பிப்பதற்கு முதல் வெள்ளியன்று பரந்த- புதிய சமையற்கூடத்தில் சமையல் வேலைகள் ஆரம்பமாயின. திருவிழாவிற்கு இன்னமும் ஒரு வாரமே உள்ள நிலையில் புதிய கட்டிடத்தின் இறுதிக்கட்ட வேலைகள் இரவு பகலாக நடைபெற்றன. வர்ணம் தீட்டும் இளைஞர்கள் தமது கைவண்ணத்தை ஆரம்பிக்கின்றனர். வெளிச்சுவரில் இரட்டை நீலங்களில் (கடும் நீலம் வெளிர் நீலம்) "சந்நிதியான் ஆச்சிரமம்" பெயர் பிரகாசித்தது. வெளிவாசற் தூண்களில் உள்ள சோடி மயில்கள் அழகிய வர்ணம் பெற்று- உயிர்ப்புடன் தோகை விரித்தாடின. உள்ளே பிரதான வாசலின் மேலாக வளைவாக எழுதப்பட்ட "சந்நிதியான் ஆச்சிரமம்" எழுத்துக்கள் ஜொலித்தன. சுவாமி அறை வாசலில் இருமருங்கும் நிற்கும் துவார பாலகர்கள் நிறம் பெற்று- உயிர்ப்புற்று தம் காவற்கடமையை



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஆரம்பித்தனர். அரங்க மேடையில் கீறப்பட்டுள்ள ஸ்ரீ நடராஜ மூர்த்தியின் ஊர்த்துவ தாண்டவக் கோலம் அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியது. வர்ணம் தீட்டுவோர் ஒருபுறம். மின் இணைப்புக்கள் தருவோர் மறுபுறம். நிலத்திற்கு மாபிள் பதிப்போர் இன்னொருபுறம் என வேலைகள் இறுதிக்கட்டத்தை நெருங்கின. மண்டபங்களில் மட்டும் 26 மின் விசிறிகளும், 48 மின் விளக்குகளும் பொருத்தப்பட்டு ஒளி வெள்ளம் இரவைப் பகலாக்கியது. முருகன் துணை நிற்க, அனைவரதும் மூன்றுமாத கால அயரா முயற்சியின் பலன் 95 வீதமான வேலைகள் நிறைவுற, மறுநாள் ஆரம்பமாகும் திருவிழாவிற்கான அன்னப்பணிக்கு அனைவரும் தயாராகினர்.

● ● ● ● ● ● ● ●

முருகன் திருவிழாக் காண வந்திருந்த அடியார் கூட்டம் நண்பகலானதும் சந்நிதியான் ஆச்சிரமம் நோக்கி நகருகிறது. அவர்களுள் ஒரு வயது முதிர்ந்த மூதாட்டியும்- அவரைக் கையிற் பிடித்து அழைத்து வந்த ஒரு இளம் பெண்ணும் (பேத்தியாக இருக்கலாம்) ஆச்சிரம வாசலில் வந்து நிற்கிறார்கள். “இது மோகன்மடம் இல்லை. நீ வேற எங்கேயோ கூட்டி வந்துவிட்டாய்” என அம்மூதாட்டி உள்ளே வர மறுத்து அடம் பிடிக்கிறார். அந்த இளம்பெண் எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் மூதாட்டி சமாதானம் அடைகிறபாடாக இல்லை. உள் வாசலருகே நின்றபடி இந்த இழுபறியினை அவதானித்த சுவாமிகள் வெளியே வந்து, “இது மோகன் மடந்தான். அம்மா உள்ளே வாருங்கள்” என அழைத்த பின்னரே மூதாட்டி சமாதானமடைந்து உள்ளே வருகிறார். அவர்களுடன் நாமும் ஒருவராக பூவரச மரத்தடியை நாடிப் போகிறோம்.

அந்த மூதாட்டிக்கு மட்டுமல்ல. திருவிழாவின் முதல் நாளில் அங்கு வந்திருந்த பலபேருக்கும் கண்ணெதிரே நிஜத்தில் தெரிகின்ற ஆச்சிரமத்தின் புதிய மாற்றம் ஆச்சரியத்தையே உண்டுபண்ணியது. ஆனாலும் பழமை மாறாத மூன்று அம்சங்கள் இருந்ததையும் அன்பர்கள் அவதானித்திருப்பர்.

1) வாசலில் உள்ள பூவரச மரம்.
2) சுவாமியறை
3) சுவாமியறையின் பின்புறம் உள்ள செண்பக மரம்.

### i) பூவரச மரம்:

ஆச்சிரம வளாகத்து முகப்பில் மந்தமான ஒரு வளர்ச்சியோடு நின்ற பழைய பூவரச மரம், புதிய கட்டிடம் பொலிவுக்குப் போட்டியாக தானும் புதிய கிளைகள் பலவிட்டு நிறைந்த நிழல்தரு மரமாகி நிற்கிறது. மரத்தின்கீழ் வேலுடனும் மயிலுடனுமுள்ள விபூதி பிரசாதம் இருக்கும் சிறிய மேடையில் புதிதாக ஒரு செம்மை நிறப் பிள்ளையார் குடிவந்திருப்பதையும் அவதானிக்க முடிந்தது.

### உ) சுவாமி அறை:

முந்திய சுவாமி அறையுடன் கிழக்குப் புறமாக ஒட்டியிருந்த ஒரு அறை அகற்றப்பட்டு, சுவாமியறையின் உட்புறத்தில் எந்த மாற்றமும் இல்லாமலே ஓடுவேய்ந்த நாற்சார் கூரையும்- சுவர்ப்பகுதிகளும் புதுப்பிக்கப்பட்டுள்ளது. நாற்சார் கூரையின் முன்பக்க முகப்பில் இரு மூலைகளிலும் தொங்கிக் கொண்டிருக்கும் “திருத்தொங்கல்” சுவாமியறைக்கு அழகு சேர்க்கின்றன.

நம்பிக்கை இல்லாத இடத்தில் முயற்சி இருக்க முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமியறை வாசலில் கதாயுதம் ஏந்திய துவார பாலகர்களும் சுடர் விளக்குகள் ஏந்திய பாவையர் இருவரும் உள்ளனர். முன் மண்டப பிரதான வாசல் முதல் சுவாமியறை வாசல் வரை பச்சைக் கம்பளம் விரிக்கப்பட்டுள்ளது.

**3) செண்பக மரம்:**

சுவாமி அறையின் நேர் பின்புறமாக இரட்டைக் கிளை பரப்பி நெடிதுயர்ந்து வளர்ந்து விரிந்து நிற்கிறது செண்பக மரம். எப்பொழுதோ ஒருநாள் ஆச்சிரம சுவாமிகள் சொன்ன பழைய வரலாறு ஞாபகத்திற்கு வருகிறது. அரசம்மா மடத்திலிருந்து இன்றைய வளாகத்திற்கு ஆச்சிரமம் இடம்பெயர்ந்தபின், ஒருநாள் ஒரு மரக்கன்றுடன் வந்த ஒருவர், "இதனை எங்காவது நட்டு விடுங்கள்" என வற்புறுத்தினார். தான் சற்றே தயக்கம் காட்டிய வேளை, அவரே சுவாமியறையின் பின்புறமாக அந்த மரக் கன்றினை நாட்டிவிட்டதாகவும், மரம் ஓரளவு வளர்ந்து வந்த பின்னரே "இது செண்பக மரம்" என்பதைக் கண்டு கொண்டதாகவும் சுவாமிகள் கூறியிருக்கிறார். அதுவே இன்று வளர்ந்து பெருமரமாகி, அழகிய மஞ்சள் நிற கொடிச் செண்பக மலரை பூசையறைக்கு வழங்கி வருகிறது. செண்பக மரத்தின் வளர்ச்சிக்கு வசதியாக மேற்கூரையில் அகற்றப்பட்டுள்ள ஒரு தகர இடைவெளியினூடாக சூரிய ஒளி வெள்ளம் உள்ளே சகல இடங்களிலும் பாய்கிறது.

உள்ளே நுழைகிறோம். நமக்கு இடதுபுறம் "குடிநீர்" வழங்கும் குழாய். அதனருகே கையலம்பும் நீர்க்குழாய்கள் ஆறு. அருகே ஒரு சிறிய வாசல். உள்ளே..... பாதி மூடப்பட்ட நிலையில் அதே பழைய கிணறு. மேலாகக் கட்டப்பட்டுள்ள புதிய தண்ணீர்த் தொட்டி. இது கையலம்புவதற்கும் ஏனைய தேவைகளுக்குமாயது. தண்ணீர்த்தாங்கியின் இரண்டாவது தளத்தில் வைக்கப்பட்டுள்ள 1000 லீற்றர் கொள்ளளவு கொண்ட கொள்கலனின் இருந்து வரும் தண்ணீரே "குடிதண்ணீர்" தேவைக்குப் பயன்படுகிறது. இதற்கான நன்னீர் இணைப்பு, தொண். வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலய பொந்துக் கிணற்றிலிருந்து விநியோகிக்கப்படும் நன்னீர்த் திட்டத்தினுள் அடங்குகிறது. வடக்குப் பார்த்தபடியுள்ள ஒரு கதவினூடாக எட்டிப் பார்த்தால் விசாலமான புதிய சமையற்கூடத்தின் உட்புறம் தெரிகிறது. முந்திய சிறிய சமையற் கூடத்திலிருந்த பல இடர்பாடுகள் களையப்பட்டு விசாலமான வசதியான சமையற்கூடமாக புதிய இடம் அமைந்திருந்தது. சமையற்கூடத்திலிருந்து மைய மண்டபமான தியான மண்டபத்திற்கு வருவதற்கு வசதியாக இன்னொரு கதவும் உண்டு.

பூவரச மரத்தடியிலிருந்து நமது வலது கைப்புறமாகத் திரும்பி நோக்குகிறோம். ஒரு சிறிய தாழ்வாரப் பகுதி. இந்தத் தாழ்வாரப் பகுதியின் கூரை கிடுகினால் வேயப்பட்டிருப்பதை பார்த்து வியந்து நிற்கிறோம். "ஆச்சிரமம்" என்பதை அடையாளப்படுத்துவதற்காக பழைய முகப்பு மண்டபம் எப்படிக் கிடுகினால் வேயப்பட்டிருந்ததோ அதே காரணத்திற்காக இந்தச் சிறிய தாழ்வாரமும் கிடுகினால் வேயப்பட்டுள்ளது. நேரே தெரிவது கணனி அறை. இங்குதான் "ஞானச்சுடர்" மாதாந்த வெளியீடும், ஆச்சிரமத்திற்கு வேண்டிய அனைத்துப் பத்திரங்களும் அச்சேறுகின்றன. நடுவே ஒரு வாசல். வாசலின் வலது புறம் ஒரு மேசை; ஒரு கதிரை; மேசைக்கு முன்பாக ஒரு பழைய வாங்கு; எந்நேரமும் அழைப்புமணி அடித்தபடியுள்ள இரண்டு தொலைபேசிகள்; மேசையின் நடுவே திருவிழாக்காலத்தில் எடுக்கப்பட்ட முருகனின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவுருவப் படம். இதுவே ஆச்சிரமத்து சுவாமிகளின் பெரி....ய அலுவலகம்.... கரும பீடம்... பொக்கிஷ அறை; களஞ்சிய அறை; அத்தனையும் இதனுள் உள்ளடக்கம். அன்னதானம் பரிமாறப்படும் வேளைகள் தவிர ஏனைய நேரங்களில் சதாகாலமும் சுவாமிகள் அந்தக் கதிரையில் அமா்ந்திருப்பதைக் காணமுடிகிறது.

கணனி அறை வாசலின் இடதுபுறம் இரண்டு பழைய கால வாங்குகள். வாசற் கதவருகே இரண்டு "**அபூர்வமான புகைப்படங்கள்**" காணப்படுகின்றன.

ஒன்று: "1940 ஆனந்தாச்சிரமம்" என எழுதப்பட்டுள்ள, ஆற்றோரமாகவிருந்த அந்நாளைய ஆனந்தா ஆச்சிரம வாசற்படியில் "மயில்வாகனம் சுவாமிகள்" கம்பீரமாக நிற்கிறாா். அரையில் நாலுமுழ வேட்டியும், உடம்பினை மூடிய ஒரு கதராடைத் துண்டுடன் நிற்கும் மயில்வாகனம் சுவாமிகளின் தோற்றமானது அன்னாரை நேரே பார்ப்பது போன்ற பிரமிப்பை ஏற்படுத்துகிறது. மோகனதாஸ் சுவாமிகள் தம் குருவான மயில்வாகனம் சுவாமிகளை தம் இடப்புறத்தே- இதயத்தில் இருத்தியுள்ளமை புரிகிறது. மயில்வாகனம் சுவாமிகளிடமிருந்து கிடைத்த அறிவும்- அனுபவமும் அவற்றின் மூலம் பெற்றுக்கொண்ட நிர்வாக ஒழுங்கும், கற்றுக்கொண்ட பாடங்களுமே இன்றைய சந்நிதியான் ஆச்சிரமத்தின் வெற்றிக்கு மூலம் என்பது அனைவரும் அறிந்ததே.

இரண்டு: வாயிற் கதவின் மறுபக்கத்தில் அன்றைய நாற்பது லெட்சம் செலவில் செய்து முடித்து 06.09.1984இல் வெள்ளோட்டம் நடைபெற்று, அவ்வருடமும் அடுத்த இரு வருடங்களும் மட்டுமே வீதி வலம் வந்த உலகப் பெரும் சித்திரத்தேரின் புகைப்படம் காணப்படுகிறது. நாம் அனைவரும் செய்த பாவத்தின் பலன்..... பின்னர் நாம் எக்காலமும் கண்டுகொள்ள முடியாதபடி எரியூட்டி அழிக்கப்பட்டமை யாவருக்கும் தெரிந்ததே. சித்திரத்தேர் எரிந்து- அழிந்து போனாலும், அழியாமல் இன்றுவரை இருப்பது அந்தச் சித்திரத்தேரோடிய பெருவீதி மட்டுமே. சித்திரத்தேர் ஓடுவதற்காக வீதிகள் அகலிக்கப்பட்டு- தார் போடப்பட்டு சிரத்தையுடன் உருவாக்கப்பட்ட மூன்றாவது பெருவீதியிற்றான் தற்போதைய தேரோட்டம் நடைபெறுகின்றமை குறிப்பிடத்தக்கது. இந்த, கிடைத்தற்கரிய அபூர்வமான இரு புகைப்படங்கள் தவிர பெரியோர்கள், சித்தர்கள், யோகிகள் எனப் பலபேரது புகைப்படங்களும் கணனி அறைச் சுவரில் மட்டுமல்லாது மண்டபங்களின் அனைத்துச் சுவர்களையும் அலங்கரிக்கின்றன.

மெதுவாகக் கணனி அறையினுள்ளே எட்டிப் பார்க்கிறேன். பழையதும்- புதியதுமாக பல அச்சு யந்திரங்கள்; எந்நேரமும் கட..... கடா சத்தத்தை எழுப்பியபடி இயங்கும் யந்திரத்தை இயக்கும் இளைஞர்கள் இருவர்; சுறுசுறுப்பாகக் கடமைபுரியும் பெண் தொண்டர்கள் இருவர்; வடமூலையில் மேலதிக பாதுகாப்புச் செய்யப்பட்டுள்ள கணனி அறையில் குனிந்த தலை நிமிராமல் கணனியிற் கருத்தினைச் செலுத்தும் இளைஞர் ஒருவர் என ஐவர் மட்டுமே கணனிக் கூடத்தினுள் கடமை புரிவது தெரிகிறது.

அகன்ற உள்வாசலூடாக சுவாமி அறையை நோக்கி- கீழே விரிக்கப்பட்டுள்ள பச்சை நிறக் கம்பளத்தில் கால்பதித்து நடக்கிறோம். திரை நீக்கப்பட்டிருந்த சுவாமி அறையின் உட்புறம் மின்னொளி பரப்பி நிற்கிறது. மையத்தில் திருமுருகன் நிறைந்த பொலிவுடன் அமா்ந்திருக்கிறாா். மதிய பூசை முடிந்த நேரமாக இருந்தமையால் பூவும்- பூமாலைகளும்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலங்காரமும் கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. ஏனைய மூர்த்தங்களுக்கிடையே- அவர்களுக்குச் சரிசமமாக- மயில்வாகனம் சுவாமிகளின் திருவுருவப்படம் இருப்பதையும் பார்க்க முடிந்தது. நடுவே சுவாமி அறையும்- சுவாமி அறையைச் சுற்றியிருந்த அகன்ற மண்டபங்களின் அமைப்பும் ஒரு கோயில் முன்பாக மெய்சிலிர்க்க வைக்கும் பக்திபூர்வமான உணர்வையே ஏற்படுத்துகிறது.

சுவாமியறையின் இடது புறமாக, வடக்குப் பார்த்தபடி, வாராந்த வெள்ளி நிகழ்வுகளும்- மற்றும் விசேட நிகழ்ச்சிகளும் நடைபெறுகின்ற "அரங்கமும்" அரங்கத்தின் முன்பாக உள்ள நீண்ட மண்டபமும் காணப்படுகிறது. அரங்கம் முன்பிருந்ததைவிட சற்றே பின் நகர்ந்து- அரங்கத்தின் முன் உள்ள மண்டபம் நீளத்தாலும் அகலத்தாலும் சற்றே பருத்து கூடிய பேர்கள் அமரக்கூடிய வசதி செய்யப்பட்டுள்ளது. இம் மண்டபத்தின் வட கோடியில் "ஆச்சிரம நூலகத்தின்" நூல்கள் மிக நேர்த்தியாக அடுக்கப்பட்டுள்ள அலுமாரிகள் தெற்குப் பார்த்தபடி ஒழுங்காக வைக்கப்பட்டிருப்பது கண்ணில் படுகிறது.

சுவாமியறையின் வலப்புறத்தே இரண்டு களஞ்சிய அறைகளும், தொடர்ந்து அரைச் சுவருடனான நீண்ட மண்டபமும், முடிவில் மீண்டும் ஒரு களஞ்சிய அறையும் காணப்படுகிறது. சுவாமியறையின் வலதும் இடதுமான வீதி போன்றிருக்கும் அமைப்புக்கள் பின்புறம் உள்ள செண்பக மரமருகே அகன்ற ஒரு மண்டபத்தைச் சந்திக்கின்றன. இந்த இடம் பழைய கட்டிட அமைப்பில்- முருகேசு சுவாமிகளின் ஞாபகார்த்த மண்டபமாகவும், வெள்ளிக்கிழமைகளில் அறுபத்துமூவர் மாகேஸ்வர பூசை நடைபெறும் இடமாகவும் இருந்ததை அனைவரும் அறிவர். இப்போதும் அம்மண்டபம் முருகேசு சுவாமிகளின் ஞாபகார்த்த மண்டபமாகவே திகழ்கிறது.

சுவாமி அறையின் முன்பாக உள்ள தியான மண்டபம் தவிர, ஏனைய அனைத்து மண்டபங்களிலும் ஒரே வேளையில் 300பேர் வரை அமர்ந்து பசியாற முடியும். கடந்த திருவிழா வேளையின் ஆரம்ப நாட்களில் தினமும் சுமார் 1000பேர் வரை பசியாறிச் சென்றனர். சப்பறம்- தேர் நாட்களில் சுமார் 8000பேருக்கு மதிய உணவு அளிக்கப்பட்டது. தீர்த்தத்தன்று சுமார் 10000 பேர்வரை பசியாறிச் சென்றனர். பந்தியிற் பரிமாறுவது என்பது ஒரு கடினமான பணி. ஆச்சிரமத்தின் நிரந்தரத் தொண்டர்களும், தற்காலிகமாக அமர்த்தப்பட்ட சில தொண்டர்களுடன், கதிர்காமத்து இந்து யாத்திரிகர் விடுதியில் பணியாற்றும் ஐந்து இளைஞர்களுமாக பரிமாறும் பணியினைக் குறைவின்றி நிறைவாகச் செய்தனர். இந்த மண்டபங்கள் அனைத்தையும் தாண்டி பிற்பக்கம் (தெற்கு) செல்வதற்கான ஒரு கதவும் அதனருகே இரண்டு களஞ்சிய அறைகளும் உள்ளன.

● ● ● ● ● ● ● ●

"எப்படி ஐயா? இந்தக் குறுகிய காலத்திற்குள் இது சாத்தியமாயிற்று" எனக் கேட்டு வார்த்தைகளை முடிக்க முன்னரே, தமது வழமையான பாணியில் வலக்கரத்தை சற்றே உயர்த்தியபடி, "என்னமோ எல்லாம் நடக்குது..... நினைத்ததும் நடக்குது..... நினைக்காததும் நடக்குது..... அவன் நடப்பிக்கிறான்..... நான் செயற்படுறன்..... அவ்வளவுதான்....." என்கிறார் மோகனதாஸ் சுவாமிகள் அமைதியாகக் சுவாமி அறையை நோக்கியவாறே.....

**சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடைபெற்ற கட்டுமாணப் பணிக்கு மனமுவந்து நிதி அன்பளிப்புச் செய்தோர் விபரம்**


**இ. ஆறுமுகம் குடும்பம் உரும்பராய் கிழக்கு உரும்பராய் 200000. 00**

**உயிரைக் கொடுத்தேனும் நம்பிக்கையைக் காப்பாற்று.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்நிதியான் ஆச்சிரமம், புதிய அமைப்பின் வரைபடம்




அமைதியாயிரு, அதனால் எவரையும் வசப்படுத்தமுடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பழமையும் - புதுமையும். முன்னைய மண்டப முகப்பும்,
புதிய கட்டிட வாசலின் எழில்மிகு தோற்றமும்...




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புதிய மண்டபங்களின்
இருவேறு தோற்றங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கருவறை வாசலில் சுவாமிகள்
கணனி அறை வாசலில் சுவாமிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**ஓவியம் வரையும் ஓவியர்களும், அவர்களின்**
**கைவண்ணத்தில் உருவான சில ஓவியங்களும்.**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சமையலுக்கு முன்...




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



விசாலமான சமையற்கூடத்தின்
இருவேறு தோற்றங்கள்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சுவாமிகளுடன் சில முக்கிய பிரமுகர்கள்.
கட்டிடக் கலைஞர் திரு இ. கார்த்திகேசுவும் அவரோடு
செயற்பட்ட இளைஞர்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தீர்த்த தினத்தன்று மாலையில் ஆச்சிரமத்தின்
தொண்டர்களினால் வருடாவருடம் இடம்பெறுகின்ற
பாற்செம்பு, காவடி நிகழ்வுகளின் ஆரம்பம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கணனி அறையின் உட்புறத் தோற்றங்கள், கண்ணாடியினால் மேலதிக பாதுகாப்பு செய்யப்பட்ட கணனிகளின் காப்பறை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கணனி அறையின் முகப்பு வாசலும்,
வாசல் விறாந்தையில் அமைந்துள்ள சுவாமிகளின்
அலுவலக மேசையும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பந்தியில் அமர்வதற்காகக்
காத்திருக்கும் அடியார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புதிய மண்டபங்களில் அன்னம் பரிமாறிய வேளை...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பழமை மாறாமல்
வாசலில் கிளை விரிந்து
நிழல் கொடுக்கும் பூவரச
மரமும், கருவறையின்
பின்புறமாக இரட்டைக்
கிளைவிட்டு நிற்கும்
செண்பக மரமும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கருவறையின் உட்புறமும்,
கருவறையில் பூஜை நிகழ்வும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐப்பசிமாத வாராந்த நிகழ்வுகள்

05.10.2012 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

சொற்பொழிவு :- "சித்தர் பாரம்பரியம்"

வழங்குபவர் :- சிவத்தமிழ் வித்தகர் சிவ மகாலிங்கம் அவர்கள்

---

12.10.2012 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

விடயம் :- "இன்னிசை"

வழங்குபவர்கள்:- திரு அ. ஜெயராமன் குழுவினர்

(பக்கவாத்திய சகிதம்)

---

19.10.2012 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

சொற்பொழிவு :- "தேவி பாகவதம்" (தொடர்)

வழங்குபவர் :- திரு அ. குமாரவேல் அவர்கள்

[சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ் கல்லூரி வட்டுக்கோட்டை]

---

26.10.2012 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

## ஐப்பசிமாத ஞானச்சுடர் வெளியீடு

வெளியீட்டுரை :- திரு சி. பத்மநாதன் (J.P) அவர்கள்

மதிப்பீட்டுரை :- சைவப்புலவர் க. நித்தியதசீதரன் அவர்கள்

[ஆசிரியர்]

## 178ஆவது மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிவு இல. QD/22/NEWS/2012

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய முகப்புத் தோற்றம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org